விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 14 ஞாயிற்றுக்கிழமை (30.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 286

ரா ம் கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி

# தமிழ் அமைப்புகள் தீவிரம்

## ஜெனிவாவில் புதிய நகர்வு என்கிறது கொழும்பு ஊடகம்

(நியூயோர்க்)

ஜெனிவாவில் நவம்பர் மாதம் முதலாம் திகதி இலங்கை மனிதவுரிமைகள் நிலை குறித்து பூகோளகால மீளாய்வுக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ள நிலையில், அனைத்துலக போர்க் குற்ற விசாரணைகளை வலியுறுத்தும் புதிய நகர்வொன்றில் புலம் பெயர் தமிழ் அமைப்புகள் இறங்கியுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## இளம் எம்.பிக்கள் பலருக்கு அமைச்சுப்பதவிகள் கிடைக்கலாம்

(கொழும்பு)

அடுத்த அமைச்சரவை மாற்றத்தின் போது, நீலப்படையணியைச் சேர்ந்த இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த அமைச்சரவை மாற்றத்தின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு நீதியமைச்சுப் பதவி வழங்கப்பட உள்ளதாக அரசாங்கத்தின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைத் தவிர மனுஷ்ய நாணயக்கார, சனத் ஜயசூரிய, உதித்த லொக்கு பண்டார, லக்ஸ்மன் வசந்த, சரத் விஜேசேகர ஆகியோரின் பெயர்களும் அமைச்சுப் பதவிகளுக்கு பேசப்பட்டு வருகின்றது. இதில் சரத் விஜேசேகரவுக்கு சிவில் பாதுகாப்பு அமைச்சு என்ற பதவியை ஏற்படுத்தி அதனை அவருக்கு வழங்க உள்ளதாக தெரிய வருகின்றது.

அத்துடன் (23ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதுவர்–கூட்டமைப்பு நாளை சந்திக்கத் தீர்மானம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற தூதுக்குழு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தாவை நாளை திங்கட்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையின் போது இந்தியப் பயணத்துக்கான நிகழ்ச்சி நிரல் குறித்து ஆராயப்பட்டு முடிபு எடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 10-ம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தூதுக்குழு புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளது.

அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி உட்பட முக்கியஸ்தர்களைக் கூட்டமைப்பினர் சந்தித்து பேசுவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவுக்கான விஜயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் எம்.பியுமான மாவை.சேனாதிராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான இந்திய மத்திய அரசின் நிகழ்ச்சி நிரலில் நிரந்தர அரசியல் தீர்வுக்கான முன்னெடுப்புக்களே முக்கிய இடம்பிடித்துள்ளன.

திங்களன்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தவை சந்தித்த பின்னர் ஏனைய (23ஆம் பக்கம் பார்க்க)

## பரிந்துரைகள் அமுலாக்கத்தை அரசாங்கம் துரிதப்படுத்த வேண்டும்

### ரொபேர்ட் ஓ பிளேக் மீண்டும் வலியுறுத்தல்

(ஜெனிவா)



உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் மெய்யான அர்ப்பணிப்பை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் என தென் மற்றும் மத்திய ஆசியாவிற்கான அமெரிக்க துணை இராஜாங்கச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக் மீண்டும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், (23ஆம் பக்கம் பார்க்க)

## இருதரப்பு இணக்கத்திற்குப் பின்பே தெரிவுக்குழு பற்றி முடிபெடுக்கலாம்!

### சும்மா போய் இணைய முடியாது-சுரேஷ்

(பொத்துவில்)

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்ல வேண்டுமானால் சரியானதொரு பிரேரணையைக் கொண்டு போக வேண்டும். இதற்கு அரசு - கூட்டமைப்பு இரு தரப்பு பேச்சுவார்த்தை இடம்பெற்று அதில் தீர்வொன்று எட்டப்பட வேண்டும். இதனை இந்தியத் தரப்பிடம் வலியுறுத்துவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பொத்துவிலில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பொன்றில், சமகால நிலைமைகள் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளித்தார். அதன் போது, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு புதுடில்லி விடுத்துள்ள அழைப்புத் தொடர்பில் கருத்துக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் அழைப்பை ஏற்று சந்திப்புக்காக போகவிருக்கின்றது. ஆனால் இதுவரை எம்மை எதற்காக அழைத்திருக்கின்றார்கள் என்பது தெரியாது.

ஆனாலும் ஜனாதிபதி அங்கு போய் வந்த அடிப்படையில் இந்திய அரசு மீண்டும் தமிழ்த் தேசியக் (23ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திற்காக காணி சுவீகரிக்க வேண்டாம்

அம்பாறை மாவட்டத்தில், ஒலுவில பிரதேசத்திலுள்ள கேசன்கேணி கிராம மக்களுக்கு மாற்றுக் காணி வழங்காமல் அவர்களின் காணிகளை இராணுவ முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையைத் தடுக்கும் விதத்தில் இலங்கை உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கேசன்கேணி கிராம மக்களுக்கு மாற்றிடங்களை வழங்கும் வரை அவர்களின் காணிகளை இராணுவ முகாம் அமைக்கும் தேவைக்காக சுவீகரிப்பதை நிறுத்துமாறு உச்சநீதிமன்றம் அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

கேசன்கேணி மக்களில் சிலர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோதே உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (ந-11)

சிங்கர் அறிமுகப்படுத்தும் அதிசிறந்த உறுதியான மோட்டர் சைக்கிள்கள்

SAFARI

72 CC 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
சிவப்பு, நீலம், கறுப்பு, சில்வர் வர்ணங்களில்

GALAXY 100

100 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

CAMY 80

80 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
பாதுகாப்பு அலாம் மணி
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

SUPER CUP

4 Stroke 90cc Air Cooled Engine
Starting System : Electric/ Kick
Detachable Rear Seat
Alloy Wheels
Drum Brakes
Colours: RED/BLACK / GREEN

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம். மானிப்பாய். சங்கானை, நெல்லியடி. சாவகச்சேரி, கிளிநொச்சி

⇨ தவணைக் கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம் சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்தியாவிற்கு தங்கம் கடத்த இலங்கையைப் பயன்படுத்தும் கும்பல்

இந்தியாவில் இடம்பெற்று வரும் தங்கக் கடத்தலுக்கு இலங்கையை ஒரு போக்கு வரத்து மையமாக கடத்தல்காரர்கள் பயன் படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படு கின்றது. சென்னையிலிருந்து டுபாய் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு இவ் வாறு தங்கம் கடத்தப்படுவதாக கூறப்படுகிறது.

கடந்த ஒரு மாதகாலப்பகுதியில் சென்னை விமான நிலையத்தில் 13 கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெருமளவானோர் இலங்கையர் என விசார ணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அத்துடன் அவர்களிமிருந்து சுமார் 3.5 கிலோகிராம் தங்கமும் கைப்பற்றப்பட்டுள் ளது. இந்த வருடத்தில் மாத்திரம் சுமார் 30 கிலோகிராம் கடத்தல் தங்கத்தை சென்னை விமான நிலைய அதிகாரிகள் கைப்பற்றியுள் ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கடத்தல் நடவடிக்கையில் முன் னெடுக்கப்பட்டு வரும் புதிய நடைமுறை யொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இந் திய குடிவரவு குடியகல்வு உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

டுபாய் மற்றும் சிங்கப்பூர் பயணிகளின் பயணப்பைகள் இருமுறை பலத்த சோதனை களுக்கு உட்படுத்தப்படுவதால், இலங்கை ஊடான நீண்ட பயணத்தின் மூலம் இந்தக் கடத்தலை மேற்கொள்கின்றனர் என்று தெரிய வந்துள்ளதாக இந்தியப் பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தங்கத்தைக் கடத்திக் கொடுப் பதால் ஒருவருக்கு 5,000 - 10,000 ரூபாய் வரை கொடுக்கப்படுவதாக கைது செய்யப் பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணை யின் மூலம் தெரியவந்துள்ளது. அந்த வகை யில் இந்தத் தங்கக் கடத்தலுக்கு பயன்பட்டார் கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 13 சந்தேக நபர்களில் 10 பேர் இலங்கைத் தமிழர்கள் எனத் தெரியவந்துள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இருந்து வரும் பயணிக ளின் பயணப்பைகளை விசேட கவன மெடுத்து சோதனைக்கு உட்படுத்துமாறு விமான நிலைய அதிகாரிகளுக்கு விசேட சுற் றறிக்கை மூலம் அறிவித்துள்ளோம் என்று இந்தியக் குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ந-1)


செல்லா சினிமா - யாழ்ப்பாணம்



விஜய் இயக்கத்தில் சியான் விக்ரம், அனுஷ்கா, எமி ஜக்சன், சந்தானம் மற்றும் பலர் நடிப்பில்

தாண்டவம்

10.30, 2.30, 6.30, 9.30 D.T.S

DIPLOMA IN ENGLISH & SINHALA CLASSES

ஆங்கில, சிங்கள வகுப்புக்கள்

- பாடசாலை மாணவர்கள்,
- A/L பரீட்சை முடித்தவர்கள்,
- தொழில் புரிபவர்கள்,
- அரசமொழி (சிங்களம்) பரீட்சைக்கு தோற்ற இருப்பவர்கள்

பயிற்சிகள்

அடிப்படை விளக்கம், சிறந்த உச்சரிப்புப் பயிற்சி, வாசிப்புப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, எழுத்துப் பயிற்சி, கலந்துரையாடல். பரீட்சை முடிவுகளின் பின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும். (தொழில் புரிபவர்களுக்கு: காலை, மாலை : 6.30 (8.00)

அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்

North Lead Educational Center (No:328, Stanly Road, Jaffna. Tel: 021-222 4459, 0772533390, ஆரியகுளம் சந்திக்கு அருகில்) (C-1195)

தளபாட மலிவு விற்பனை

தேக்கினால் ஆன 6x3 - 11 கட்டில்க ளும் அதற்குரிய மெத்தைகளும், பிளாஸ்ரிக் கதிரைகள், அதற்குரிய சிறிய மேசைகள் இன்று மட்டும் 9.00am - 5.00pm வரை மலிவு விலை யில் விற்கப்படும். உடனே அழையுங்கள்.

தொடர்பு: கந்தர்மடம் 0713391374

(C-1188)

விற்பனைக்கு

ISUZU - 350 கூலர் விற்ப னைக்கு உண்டு. பதிவிலக்கம் JX-XXXX நீளம் அகலம் உயரம் 6.48M 2.01M 3.05M

மேலதிக தொடர்புகளுக்கு 0776006506

(சீ-1177)

காணி விற்பனைக்கு

கொடிகாமம் அரசினர் வித்தியால யத்துக்கு அண்மையில் செட்டியா வெளியில் "செட்டிவெளி" என்னும் நி.பர. 15 13/16 விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0771877018 0117905266

(488)


# நிலங்களை அபகரிப்பது இராணுவத்தின் நோக்கமல்ல!

## பாதுகாப்புதான் நோக்கம் என்கிறார் ஹத்துருசிங்க



யாழில் இராணு வத்தினர் இருப்பது மக்களின் இடங் களை அபகரிப்பதற் காக அல்ல, பாது காப்பு வழங்குவதற் காகவே இராணுவத் தினர் யாழ்ப்பாணத் தில் இருக்கின்றனர் என யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித் தார்.

அச்சுவேலியில் நேற்று நடைபெற்ற 511 ஆவது படையணியினரால் கட்டப்பட்ட புதிய வீட்டினை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதனை அடுத்து தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களுக்கும் பாது காப்புப் படையினருக்கும் இடையில் சிறந்த உறவு முறை காணப்பட்டு வருகின்றது. இதற்குக் காரணம் தற்போது யாழ்ப்பாணத் தில் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு வழங்குவதுடன் பல்வேறு அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுத்து வருவதே ஆகும்.

எனினும் பலருக்கு இராணுவத்தினரால் பல்வேறுபட்ட கரைச்சல்கள், துன்பங்கள் நேரலாம் அல்லது நேர்ந்திருக்கலாம். ஆனால் பாதுகாப்புப் படையினர் அதிகமான நன்மைகளையே செய்துள்ளனர் என்று தான் நான் நினைக்கின்றேன்.

எவ்வளவு பாதுகாப்பு படையினர் யாழ்ப் பாணத்தில் இருக்கின்றனர் என்பது முக்கிய மில்லை. அவர்கள் மூலம் வழங்கப்படும் சேவையும் பாதுகாப்பும் தான் முக்கியம் வாய்ந்ததும் தரம் வாய்ந்ததும் ஆகும். அதிகமான பாதுகாப்பு பொது மக்களுக்கு தமது சேவைகளையும் உதவிகளையும் செய்து வருகின்றனர்.

எனினும் வறுமைக் கோட்டிற்குக் கீழ்ப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவிகள் மக்களது தேவைகள் எவை என்பதனைத் தீர்மானித்து அதற்கு ஏற்ற வகையில் உதவிகளை வழங் கும் திட்டத்தினை தொடர்ந்தும் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

எனவே, யாழில் இராணுவத்தினர் இருப் பது எந்தவொரு சூழ் விலும் உங்களது இடங்களையோ அல்லது உங்களிடம் முள்ள காசுக ளையோ தட்டிப் பறித்துச் செல்வதற்காக அல்ல, பாதுகாப்பு வழங்குவதற்காகவே இராணுவம் யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற னர் என்பதை மக்களாகிய உங்களுக்கு கூறிக் கொள்ள விரும்புகின்றேன் என மாவட்ட கட்டளைத் தளபதி மேலும் தெரிவித் தார். (ந-1)

## முதியவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

சங்கானை வயல் கிணற்றிலிருந்து முதிய வர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சங்கானை வேல்வில் முருகமூர்த்தி கோயிலுக்கு பின்புறமாக உள்ள வயல் கிணற்றிலிருந்தே இவரது சடலம் மீட்கப்பட் டுள்ளது.

வயல் வேலைக்கு சென்று விட்டு திரும் பியவர்கள் வயல் கிணற்றில் சடலம் ஒன்று கிடப்பதைக் கண்டு நேற்றுமாலை 5.30 மணியளவில் பொலிஸாருக்கு அறிவித்துள் ளனர்.

கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட சடலம் 55 வயது மதிக்கத்தக்க ஒருவருடையது. எனி னும் இச்சடலம் யாருடையது என அடையாளம் காணப்படவில்லை.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலி ஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றார் கள். (ந-1)

## தங்கச் சங்கிலி அபகரிப்பு

(கரவெட்டி)

வல்லிபுர கோயிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வயோதிபப் பெண் ஒருவரின் ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலி யொன்று மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாதவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று இரவு 8.30 மணி யளவில் நெல்லியடி மகாத்மா ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

அதேயிடத்தைச் சேர்ந்த இரத்தினம் யோகம் (வயது 65) என்ற வயோதிபப் பெண் மணியின் தங்கச் சங்கிலியே அபகரிக்கப்பட் டுள்ளது.

சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலி ஸார் விசாரணை மேற்கொண்டு வருகிறார் கள். (ந-24)

## மரண அறிவித்தல்

### தங்கவேலாயுதம் தஞ்சுதன்

(யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன்)

7ஆம் வட்டாரம் சிவநகர், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவை சொந்த முகவரியாக கொண்ட தங்கவேலாயுதம் தஞ்சுதன் (யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவன்) 28.09.2012 வெள்ளிக்கிழமையன்று அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக ந. யோகரட்ணம் (கிராம சேவையாளர்), நெடுங்கேணி வீதி, தண்ணீரூற்று, முள்ளிய வளையில் வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு : 0772802296 0777394159

(C-1184)


மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் T.P.: 0719315664, 0777569205

மீண்டும் யாழில் 02.10.2012 முதல் 09.10.2012 வரை 8 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற் கொள் ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

- ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறு கள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலைமிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நாம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத் துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுக மாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப் படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்த மைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(சீ-1194)

இன்றும் என்றைக்கும் உலகம் முழுவதும் யேசு பிரானின் புனித இதயம் போற்றப்படட்டும், ஏற்றப் பட்டும், நேசிக்கப்பட்டும், பாதுகாக் கப்பட்டும் இயேசு பிரானின் புனித இதயம் இரக்கம் கொள்ளட்டும். திக்கற்றவர்களுக்கு உதவுபவர் ஆன யூட் ஆண்டவரே எங்களுக் காக வேண்டிக் கொள்ளும்.

அடியாள்

(C-1193)

YAALH ENGLISH ACADEMY

வழங்கும்

'EASY ENGLISH'

ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்

விபரங்களுக்கு + பெயர் பதிவு : 773 212 711 மூலம்

Study in GEORGIA (Europe)

Minimum qualification G.C.E. (O/L)

Hotel Management (Duration 1 year) Rs. 350,000/- Course Fee

No IELTS No Interview No Bank Balance

4, IBC Road, Wellawatte, Colombo 6. Hotline 0777-761346


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதவானை அவமதித்தவருக்கு ஐந்தாண்டுகள் சிறை

நீதவான் மீது மனித மலத்தை வீசி எறிந்த நபருக்கு ஐந்தாண்டு கால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சிலாபம் நீதிமன்றத்தினால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீதவானின் ஆசனத்தின் மீது மனித மலத்தை நபர் ஒருவர் வீசி எறிந்துள்ளார். உயர் நீதிமன்ற நீதவான் மாலினி குணரட்ன இந்தத் தண்டனையை விதித்துள்ளார். பாலியல் குற்றச் செயலில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஒருவர் வழக்கு விசாரணைகளின் இடை நடுவில் இவ்வாறு மலத்தை வீசியுள்ளார்.

மலத்தை வீசிய நபருக்கு ஐந்து ஆண்டு கால சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (ந-2)

# மந்துவில், புதுக்குடியிருப்பு மக்கள் மீள்குடியேற்றப்படவுள்ளனர்

## முல்லை. அரச அதிபர் தகவல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மந்துவில், புதுக்குடியிருப்பு மேற்கு (வேணாவில்) கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்படவுள்ளதாக முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய மீள்குடியேற்றத்திற்கான சொந்த இடத்திற்கு செல்ல விரும்பும் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியுள்ள குடும்பங்கள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு மீள்குடியேறக்கூடிய ஆயத்தங்களுடன் மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் தாங்கள் இதுவரை காலமும் தங்கியிருந்த கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அப்பகுதி உதவி அரசாங்க அதிபரினால் மேல் ஒப்பமிடப்பட்ட விடுவிப்பு கடிதம் சமர்ப்பித்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (ந-9)

## இராசி பலன்

30.09.2012

(புரட்டாதி 14, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

பூரணை முற்பகல் 9.16 மணிவரை

உத்திரட்டாதி பிற்பகல் 4.27 மணிவரை

இராகுகாலம் 4.32-6.02 மணிவரை

சுபநேரம் 9.02-10.32 மணிவரை

**மேடம்** பொழுதுபோக்கு விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படும். ஆடம்பரப்பொருள் வாங்குவதில் விருப்பம் காட்டுவீர்கள். வழக்கத்தை விட அதிகநேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும்.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள். பணவாய்ப்புக்கள் கைகூட அறிகுறியுண்டு. மனத்தில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும் நாள். உற்றார் உறவினர் வருகை.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள். தொல்லைதந்தவர்களே தோள்கொடுத்து உதவ முன்வருவர். பிறர் உதவியுண்டு. செய்தொழில் வளர்ச்சி அதிகரிக்க பாடுபடுவீர்கள்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள். சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு. மனதில் உற்சாகம் அதிகரிக்கும் தொழில் சம்பந்தமாக முக்கிய முடிபு எடுப்பீர்கள்.

**சிங்கம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். உறவினர்களின் மன கசப்பிற்கு ஆளாகமல் பார்த்துக் கொள்வது நல்லது. நட்பு பொன்று பகையாகலாம். வாகன பழுது செலவுகள் அதிகரிக்கும்.

**கன்னி** குடும்பத்தினருடன் குதுகல பயணம் ஒன்று மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு. கௌரவமான நாள்.

**துலாம்** சுப செய்திகள் நாடிவரும் நாள் பிள்ளை[illegible]களால் உதிரிவருமானங்கள் வந்து சேரல[illegible] பகைவர்கள் நண்பர்களாக மாறும் சூழ்நி[illegible]யுண்டு. விருந்தினர் வருகை.

**விருச்சிகம்** தொலைபேசி வழித்தகவலால் நன்மையுண்டு. விழாக்களில் கலந்து மகிழும் வாய்ப்பு உண்டு. சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள். பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு** மனதில் இனபுரியாத சந்தோசம் குடிகொள்ளும். சகோதரவழியில் ஏற்பட்ட சச்சரவுகள் மாறும். தாராளமாக செலவு செய்து மகிழும் வாய்ப்புண்டு. அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மகரம்** சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம். வீட்டுத்தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதரத்தின் வழியில் இனிய சேதிகள் வந்து சேரலாம்.

**கும்பம்** ஆரோக்கியம் சம்மந்தப்பட்ட வகையிலிருந்த கவலைகள் நீங்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள். பொருளாதார நிலை உயரும். வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** குடும்பத்தினரிடம் முன்கோபத்தை குறைப்[illegible] நல்லது. பக்க பலமாக நடந்து காரியம் சாதிக்[illegible] வேண்டிய நாள். ஆழ்ந்த சிந்தனையுண்டு. பெரியோர் சந்திப்பு இடம்பெறலாம்.

வளவன்

### வந்தது மழை: வரவில்லை புனரமைப்பு

# அச்சுவேலி- நவக்கிரி வீதியால் பயணிப்பவர்கள் அசௌகரியம்

(கரவெட்டி)

அச்சுவேலியிலிருந்து நவக்கிரிக்கு செல்லும் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. குறிப்பிட்ட சில இடங்களில் குழிகளுக்கு சல்லிகள் இடப்பட்டு செப்பனிடப்படாமல் காணப்படுகின்றது.

இது இவ்வாறுள்ள நிலையில் மழைக் காலம் நெருங்கியுள்ளதால் இக் குழிகளில் வெள்ளநீர் தேங்கி நின்று பாரிய வீதி விபத்துக்களை ஏற்படுத்தும் நிலை காணப்படுகின்றது.

இவ்வீதியால் தினமும் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் வியாபாரிகள் என அதிகமானோர் பயணிக்கின்றனர். இவர்கள் பெரும் அசௌகரியத்துடனேயே பயணஞ்செய்கின்றனர். எனவே, விரைவாக இவ்வீதியை உரிய முறையில் செப்பனிட்டு எமது பாவனைக்குத் தருமாறு உரியவர்களிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ந-9-24)

## முதியோர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தொல்புரம் சர்வோதய நிலையத்தில் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் கலை நிகழ்வுகள், சிறுவர்கள் முதியவர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் என்பனவும் நடைபெறவுள்ளதாக தொல்புரம் கலாலயச் செயலாளர் வி.குணபாலா அறிவித்துள்ளார். (ந-9)

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகத்தினரும் இணைந்து நடத்தும் இரத்ததான நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்ளும் அனைத்து குருதிக் கொடையாளர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும் என்பதுடன் அனைவரையும் இதில் கலந்து கொண்டு மக்கள் நலன் காக்க உதவுமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ந)

## வாரம் ஒரு தகவல்

# மனக்குழப்பம்!

"உங்களுடைய மேடைப் பேச்சை இன்றைய தினம் முதல் வரிசையில் அமர்ந்து இருந்து கேட்டேன்!"

"ஹி!... எப்படி இருந்தது?"

"நன்றாக உரையாற்றினீர்கள்... ஆனால், ஒரு விடயம்... அடிக்கடி நீங்கள் அணிந்துள்ள 'கோட்' பொத்தானை கையாலே பிடித்துக் கொண்டிருந்தீர்கள்...! ஏன்?"

"மன நடுக்கத்தை மறைக்கின்ற முயற்சி அது!"

"அப்படியா சொல்கிறீர்கள்?"

"ஆமாம்... சில பேரை மேடையில் பார்த்திருப்பீர்கள்... பளிச்சென்று இருக்கின்ற அரங்க வெளிச்சத்திலே... பார்வையாளர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்ற சமயத்திலே மேடையைக் குறுக்கே கடந்து போகின்ற மாதிரி ஆகிவிடுகின்றதே! அது மாதிரி சந்தர்ப்பம் அவர்களுக்கும்... எல்லோரும் எம்மைப் பார்க்கிறார்கள் என்ற நினைப்பே ஒரு மாதிரியான சிறு பயத்தை உள்ளுணர்வாக ஏற்படுத்தும்! அதை மறைக்கவே முழுக்கை, சட்டையின் பொத்தானைச் சரி செய்வது மாதிரி பாவனை செய்து கொண்டே நடப்பார்கள்... அது மாதிரித்தான் இதுவும்!"

"இருந்தாலும் இன்னொரு நல்ல விடயம் உங்களிடம்...!"

"எதைச் சொல்கிறீர்கள்?"

"குறிப்பிட்ட நேரத்திலே உங்களுடைய பேச்சை கச்சிதமாக முடித்து விடுகிறீர்கள்...!"

"ஹி... அதற்கென்று ஒரு 'நுட்பமுறை' வைத்திருக்கின்றேன்!"

"எப்படி?"

"பேசும் போது என் கோட் பொக்கற்றிலே சில மிட்டாய் வில்லைகளை வைத்திருப்பேன்... ஒரு வில்லையை எடுத்து வாயிலே போட்டுக் கொண்டு பேச ஆரம்பிப்பேன்!.

அது முழுதாக கரைவதற்கு 10 நிமிடம் ஆகும் என்பது சாதாரண கணக்கு... அது கரைந்து முடியும் சமயத்திலே பேச்சையும் முடித்து விடுவேன்!"

"ஆனால், இன்றைய தினம் நீங்கள் அதிக நேரம் பேசிக் கொண்டே இருந்து விட்டீர்கள்...!"

"ஒரு சின்ன குழப்பம்... அதனாலே அப்படி...!"

"வாயிலே போட்டுக் கொண்ட மிட்டாய் இன்றைக்கு கரையவே இல்லை... அரைமணி நேரம் கடந்த பின்னர்தான் அதை நான் புரிந்து கொண்டேன். வாயிலே போட்டது மிட்டாய் இல்லை என்பதை...!"

"வேறு என்ன?"

"கோட் பொத்தான்!"

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 80 |
| தக்காளி | 40 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 40 |
| கோவா | 90 | 60 | 65 |
| கரட் | 100 | 80 | 110 |
| பூசணி | 60 | 30 | 50 |
| புடோல் | 50 | 40 | 50 |
| வாழைக்காய் | 50 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 60-70 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 50 | 60 |
| பாகற்காய் | 120 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 70 |
| லீக்ஸ் | 100 | 110 | 90 |
| பீற்றூட் | 70 | 60 | 60 |
| கறிமிளகாய் | 80 | 80 | 110 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 40 |
| போஞ்சி | 100 | 100 | 130 |
| கத்தரிதம்புள்ள | 80 | 120 | -- |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 360 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 27-30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களை பாதுகாக்க மத்திய அரசு புதிய யோசனை

## ஜிபிஎஸ் கருவிகள் வழங்கப்படலாம்

தமிழக மீனவர்களின் பாதுகாப்புக்கு அனைத்து படகுகளுக்கும் ஜிபிஎஸ் கருவி வயர்லெஸ் வழங்கலாம் என இந்திய மத்திய அரசு யோசனை தெரிவித்துள்ளது.

5 கலங்கரை விளக்கங்கள் சர்வதேச கடல் எல்லை மீனவர்களுக்கு தெளிவாக தெரியும்படி பராமரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படை தாக்குதலில் இருந்து தமிழக மீனவர்களை பாதுகாக்க துப்பாக்கி வழங்க வேண்டும் என மதுரை சட்டத்தரணி பி.ஸ்டாலின் உயர் நீதிமன்ற கிளையில் பொதுநல மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதிகள் முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய அரசு சார்பில் கூடுதல் சொலிசிட் ஜெனரல் வில்சன் தமிழக மீனவர்கள் பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பாக கடலோர பாதுகாப்பு படை இணை இயக்குநர் ஜெனரல் வர்க்கீஸின் பதில் மனுவை தாக்கல் செய்தார்.

அதில் கூறியிருப்பவை வருமாறு,

தமிழக மீனவர்கள் பாதுகாப்புக்கு பாக் ஜலசந்தி பகுதியில் கூடுதல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நாட்டு படகு, விசைப் படகு மற்றும் கட்டுமரங்களுக்கு தலா ஒரு ஜிபிஎஸ் கருவி மற்றும் வயர்லெஸ் கருவி வழங்கலாம். இக்கருவிகள் கடலில் இருக்கும் போது உதவிகள் பெற பயன்படும்.

பாக் ஜலசந்தி பகுதியில் உள்ள 5 கலங்கரை விளக்கங்கள் பராமரிக்கப்பட்டு ஜிபிஎஸ் கருவி இல்லாத படகுகள் சர்வதேச கடல் எல்லை தெளிவாக தெரிந்து கொள்ளும் வகையில் எல்லையில் விளக்குகள் ஒளிவிழச் செய்யப்படும்.

பகல் நேரங்களில் சர்வதேச கடல் எல்லையை தெரிவிக்க கடலில் ஒளிரும் மிதவைகள் நிறுவப்படும். ஜிபிஎஸ் கருவி மூலம் கடலில் மீனவர்களின் இருப்பிடத்தை தமிழக மீன்வளத்துறை அதிகாரிகள் துல்லியமாக கண்காணிக்கலாம்.

அதோடு கடல் வானிலை நிலைவரத்தையும் உடனுக்குடன் மீனவர்களுக்கு தெரிவித்து உஷார்படுத்தலாம். வயர்லெஸ் கட்டுப்பாட்டு அறை உருவாக்கி மீனவர்களுடன் தொடர்பில் இருக்கலாம்.

கடலோர பாதுகாப்பு மீட்பு படையினரை 155 என்ற எண்ணில் வயர்லெஸ்சில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ந-2)

YARL Taxi

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919


(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com

# அமைக்கப்பட்ட சுற்றுவட்டம் அழகிழந்து வருகின்றது!

## அண்மையில் பெய்த மழை அடித்தளமிடுகிறது



(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணை வீதியில் அமைந்துள்ள சுற்றுவட்டத்தில் சுற்றி பெருமளவான வெள்ளநீர் தேங்கியுள்ளது. இதனால் அழகுற அமைக்கப்பட்டுள்ள சுற்றுவட்டம் அழகிழந்து வருவதாகவும் அவ்வீதியினூடாக போக்குவரத்தில் ஈடுபடுவது சிரமமாக உள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதிக்கு காப்பெற் இடப்பட்டுள்ள போதும் சரியான முறையில் சுற்றுவீதி அமைக்கப்படாமையால் அப்பகுதி குளம் போல் காட்சி தருகின்றது. 3 நாட்கள் பெய்த மழைக்கே இவ்வளவு வெள்ளம் தேங்குகின்றதென்றால் மழை தொடர்ச்சியாகக் கொட்டினால் சுற்றுவட்டத்தின் நடுவே உள்ள யாழ்.நங்கை வெள்ளத்தில் தத்தளிக்க நேரிடும் என மக்கள் கூறுகின்றனர். (ந-4)

# பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை யாழ்.குடாவில் அதிகரித்துள்ளது

(கரவெட்டி)

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக பிச்சையெடுப்போர் தொகை அதிகரித்துள்ளதாக சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதிலும் வடமராட்சி பிரதேசத்தில் வயோதிபர்களே அதிகமாக இவ்வாறு தினம் தினம் பிச்சையெடுக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவம் நடைபெற்று வந்த வேளையில் நேற்று வரை 100 இற்கும் மேற்பட்ட வயோதிபர்கள் பிச்சையெடுத்து வந்துள்ளனர்.

அத்துடன் இளம் பெண்கள் சிலர் தமது கைக்குழந்தைகளுடன் இச்செயலில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. கோயில்கள், வர்த்தக நிலையங்கள். வீடுகள் மற்றும் வீதிகளென எங்கு பார்த்தாலும் அண்மைக்காலமாக பிச்சையெடுப்பவர்களே காணப்படுகின்றனர்.

ஊனமுற்றவர்கள், மிகவும் வயதானவர்கள், வயோதிபர்கள் தான் இச்செயலில் ஈடுபடுகின்றனர் என நினைத்தால் உடல் நிலை நலமாக இருப்பவர்களும் இச்செயலில் ஈடுபடுகின்றனர்.

சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் அதிகமாகவுள்ள இந்நிலையில் இவர்கள் இவ்வாறான செயலில் ஈடுபடுவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என சமூக ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இவர்களை உரிய இடங்களில் சேர்ப்பதற்கு முன்வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-9-24)

# இலவச வைத்திய முகாம்

(யாழ்ப்பாணம்)

யா/ஸ்கந்தவரோதயா கல்லூரியின் பழைய மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இலவச வைத்திய முகாம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பிரபல வைத்தியநிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ள இம் மருத்துவ முகாமில் சேவையை பெற விரும்பும் அனைவரையும் நாளை திங்கட்கிழமை தொடக்கம் கல்லூரி வளாகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் இ.ஈஸ்வரதாசன் அறிவித்துள்ளார். (ந-9)



Auto A/C
வாகன குளிரூட்டி



ரொயோட்டா, மஸ்டா, சுசுக்கி, மிற்சுபிஷி, மற்றும் அதிகுளிரூட்டி வாகனங்கள் (FREEZER TRUCKS) போன்ற சகலவிதமான வாகனங்களுக்கும் மிகச்சிறந்த முறையில் குளிரூட்டிகள் திருத்தம் செய்து தரப்படும்.

எமது ஏனைய சேவைகள்.
1) காஸ் நிரப்புதல்
2) திருத்த வேலைகள்
3) குளிரூட்டிகள் மீள் திருத்தம் செய்தல்.

அரசாங்க, திணைக்கள, தனியார், நிறுவன வாகனங்கள் ஒப்பந்த அடிப்படையில் திருத்தித் தரப்படும்.
(ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்திருக்கும்) (சி/1192)

தொடர்புகளுக்கு
510 [illegible]
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777738888
(யாழ். இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக)

மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

பிறப்பு:- 1973 இந்து செங்குந்தர்
நட்சத்திரம்:-அனுசம் 1
உயரம்:-5'3"
கி.பா:-11.75,
தொழில்:-அரச அலுவலகப் பணியாளர் B/527

பிறப்பு:- 1975 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- மகம் 3
உயரம்:-5'8"
கி.பா:-59, 7 இல் செவ்.
தொழில்: லண்டன் PR B/459

பிறப்பு:-1971 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-உத்தரம் 4
உயரம்:-5'6"
கி.பா:-15
தொழில்:-கணனி ரெக்னீஷியர் (தனியார்) B/460

பிறப்பு:- 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-கேட்டை 3
உயரம்:-5'9"
கி.பா:-24
தொழில்:-M.BA,UK, work permit B/464

பிறப்பு:- 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- புனர்பூசம் 4
உயரம்: 5'2"
கி.பா:-59, 4 இல் செவ்.
தகைமை: A/L Dip.Computer ,Agri G/554

பிறப்பு:- 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- மூலம் 4
உயரம்: 5'5"
கி.பா:-39.25
தொழில்: அரச படவரைஞர் B.Com மாணவி G/552

பிறப்பு:- 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்: சித்திரை 2
உயரம்: 5'6"
கி.பா: .74, 8 இல் செவ்.
தொழில்:-டிப்ளோமா கணனி மனேஜ்மென்ட் G/563

பிறப்பு:- 1985 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- மகம் 1
உயரம்: 5'3"
கி.பா:- 36, 4 இல் செவ்.
தொழில்:-ஜேர்மனியில் முகாமில் உள்ளார். திருமண எழுத்து எழுதப்பட்டு தள்ளுபடியானது. G/559

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail: kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நடவடிக்கைகள் சீரடைய இறுதிவரை போராடுவோம்

## குரல் கொடுக்கிறார் சரத் பொன்சேகா



(கொழும்பு)

எமது எதிர்கால சந்ததியின் கல்வி நடவடிக்கைகள் சீராகும் வரை நாங்கள் பேராடுவோம் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த கல்வியைப் பாதுகாப்போம் எனும் தொனிப் பொருளினாலான போராட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த் தும் போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். அவர் தொடர் ந்து குறிப்பிடுகையில்,

கல்வித்துறை இன்று பாரிய சவாலை எதிர்நோக்கியிருக்கிறது. இன்று நாங்கள் அனைவரும் ஒரே பதாகையின் கீழ் கூடியிருப்பதன் நோக்கம் அரசு கூறியது போல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தினை கல்வி நடவடிக்கைகளுக்கு செலவிட வேண்டும்.

எமது நாட்டின் அரசியல்வாதிகள் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி மட்டுமே சிந்தித்து வருகிறார்கள். ஏனைய சிறுவர்களின் நிலைபற்றி சிந்திப்பதில்லை. கல்வி நடவடிக்கைகள் பாதிப்படையும் போது ஒரு பிரச்சினையிலிருந்து மற்றொரு பிரச்சினைக்கு செல்வதற்கே எமது அரசியல்வாதிகள் திட்டம் தீட்டி வருகிறார்கள். நிரந்தரமான தீர்வினை பெறுவதற்கு அவர்கள் முயற்சிப்பதில்லை.

எமது நாட்டின் எதிர்கால சந்ததியினருக்காக எவ்வகையான தியாகத்தைச் செய்வதற்கும் நாங்கள் தயாராகவே இருக்கின்றோம் என்று அவர் மேலும் கூறினார். (ந-2)

## கதவைத் திறக்க தாமதித்ததால்

# பொலிஸ் அலுவலர் மீது நீதிபதி தாக்குதல்

(கொழும்பு)

நீதிபதி ஒருவரினால் பொலிஸ் அலுவலர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சுனில் தாப்ரே தமக்கு பாதுகாப்பு வழங்கும் பொலிஸ் அலுவலர் ஒருவரை கடந்த 27 ஆம் திகதியன்று தாக்கியுள்ளார்.

இதனையடுத்து குறித்து அலுவலர் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தமது வாகனம் செல்வதற்காக வாகன தரிப்பிட கதவை திறக்க தாமதமாகியதால் நீதிபதி பொலிஸ் அலுவலரை தாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீதிபதிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் பொலிஸார் கூலிக்காரர்கள் அல்ல என்று பொலிஸ் தரப்பு குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து நீதிச்சேவை ஆணைக்குழுவில் தாம் நீதிபதிக்கு எதிராக முறைப்பாடு செய்யவுள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே குறித்த நீதிபதி பொலிஸாரை தாக்கியமை காரணமாக கல்கிஸை பொலிஸ் நிலைய பொலிஸார் அவருக்கான பாதுகாப்பை விலக்கி கொண்ட சம்பவமும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-2)

# யுத்த வடுக்களை மறந்து வாழ்வது சற்றுக்கடினமானதே!

## பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுங்கள் - ஜெ.தற்பரன்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நடைபெற்று முடிந்த போரின் வடுக்களினை எளிதில் மறக்கமுடியாமல் அந்நினைவுகளில் சிக்கித்தவிப்பவர்கள் சிறுவர்களும் இளைஞர்களுமே என சிறுவர் பாதுகாப்பு திட்ட நிபுணர் ஜெ.தற்பரன் தெரிவித்தார்.

மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நடந்து முடிந்த போரினால் சிறுவர்கள் உளரீதியாக பாதிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

எனினும் இத்தாக்கத்தினை காலப்போக்கில் நாம் குறைத்துவிடமுடியும்.

சிறுவர்கள் யுத்தத்தின் வடுக்களினை மறந்துவிடுவதற்கு நாம் உதவிபுரிதல் வேண்டும். அதாவது அவர்கள் கற்கும் பாடசாலைகள், நிறுவனங்கள் என்பவற்றில் அவர்களினை எப்போதும் மகிழ்வாக நாம் வைத்திருக்க வேண்டும்.

இதனால் யுத்தம் தந்த வடுக்களிலிருந்து விடுபட்டு சிறந்த கல்விமான்களாக அவர்கள் எதிர்காலத்தில் மிளிர்வார்கள்.

சிறுவர்களுக்கு யுத்தத்தின் ஆழம், யுத்தம் ஏற்பட்டதற்கான காரணம் அறியாதவர்களாக உள்ளதனால் அவர்கள் யுத்தத்தின் அழிவுகளினை எளிதில் மறந்து விடுவர்.

எனினும் இளைஞர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் யுத்தம் ஏற்பட்டதற்கான காரணம் அரசியல் பின்னணி என்பன தெளிவாகத் தெரிவதனால் அவர்கள் யுத்தத்தின் தாக்கத்திலிருந்து விடுபடுவது சற்றுக்கடினம் எனவும் அவர் தெரிவித்தார். (ந-4)




நன்றி ஐலன்ட்

# தாக்குதலின் பின்னணியில் இராணுவம் உள்ளது!

## நவசம சமாஜக் கட்சி ஜனாதிபதிக்கு கடிதம்

கடந்த செப்டெம்பர் 22 ஆம் திகதி வன்னி நிலப்பரப்பில் வைத்து தான் உள்ளிட்ட அரசியல் கட்சி பிரமுகர்களின் வாகனம் தாக்கப்பட்டதன் பின்னணியில் இராணுவம் இருப்பதாக நவசம சமாஜக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் பொதுச் செயலாளரும் தெஹிவளை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முறையிட்டுள்ளார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற நில ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு விட்டு திரும்பிக் கொண்டிருக்கையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உப தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் நவசம சமாஜக் கட்சி பொதுச் செயலாளர் விக்ரமபாகு கருணாரத்ன ஆகியோர் பயணித்த வாகனங்கள் மீது கற்கள் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

இது குறித்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கடிதம் எழுதியுள்ள விக்ரமபாகு கருணாரத்ன தாக்குதல் சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்துமாறு பணித்துள்ளார்.

அதிக இராணுவ நடமாட்டம் உள்ள பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டதால் தாக்குதலின் பின்னணியில் இராணுவம் இருப்பதாக சந்தேகம் ஏற்பட்டுள்ளதென விக்ரமபாகு கருணாரத்ன கூறியுள்ளார்.

தாக்குதல் குறித்து இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என விக்ரமபாகு கருணாரத்ன பொலிஸ் மற்றும் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ந-2)

# நீதிச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல்

## ஆணைக்குழுவின் செயலாளர் குற்றச்சாட்டு

நீதிச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நீதிச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்து கடுமையான விமர்சனங்கள் வெளியிடப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மோசமான விமர்சனங்களில் உண்மை கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழு மீது பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்கள் தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையைத் தொடர்ந்து இவ்வாறான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகக் தெரிவித்துள்ளார். (ந-2)

# இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக இப்போதும் புலிகள் உள்ளனர்

## மத்திய அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் நாட்டுக்கு அச்சுறுத்தலாகவே காணப்படுவதாக இந்தியா அறிவித்துள்ளது. இதன் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பதாக இந்திய மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் இறையாண்மைக்கும் சுயாதீனத்தன்மைக்கும் புலிகள் அச்சுறுத்தலாக அமைந்துள்ளனர் என தெரிவித்துள்ளது. கடந்த 1991 ஆம் ஆண்டு பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதனைத் தொடர்ந்து 1992 ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான தடை நீடிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் புலிகள் யுத்த ரீதியாக தோற்கடிக்கப்பட்ட போதிலும் எஞ்சிய விடுதலைப் புலி உறுப்பினர்கள் தமிழகத்தில் மீளஒருங்கிணைய முயற்சிப்பதாக மத்திய அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மாவோயிச தீவிரவாதிகளுடன் இணைந்து மீளவும் நடவடிக்கைகளை தொடர முனைப்புக் காட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

யுத்த ரீதியில் தோல்வியைத் தழுவிய போதிலும் சர்வதேச ரீதியில் பல்வேறு வழிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அச்சுதன், ஊரெழு*

வியா!

கலாசார சீரழிவுகள் வான த்தை நோக்கி வளர்ந்து கொண்டே போகிறதே வாலிபர்கள் குறித்து என்ன கூறுகிறீர்கள்?



உஷ்! கொஞ்சம் பொறும் எதுவும் சொல்ல முடியாதவாறு நாளுக்கு நாள் ரவுசர்களின் வடிவம் மாறுகிறது. எங்க போய் நிற்குமோ. பழனி ஆண்டவா!

*வி.இளங்கோ, சுன்னாகம்*

வியா அவர்களே!

பட்டதாரிகளின் பட்டத்திற்கு எப் போது மதிப்புக் கிடைக்கும்?




பட்டதாரிகள் தாங்கள் பட்ட தாரிகள் என உணரும் போது.

## யாழ்ப்பாணம் பாழ்ப்பாணமாய் மாறிக்கொண்டிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்?

*சீலன், நீர்வேலி*

வியா!

வெண்ணிலவுக்கும் பெண் நிலவுக்கும் என்ன வேறுபாடு?

வெண்ணிலவு பகலில் மறையும். பெண்ணிலவு இரவில் மறையும்.

*ரி.செந்தூரன், கலட்டி*

வியாசரே!

இப்போதைக்கு செழிப்பான தொழில் எது?

களவு... போதைவஸ்து...

*எஸ்.சுதன், சரவணை*

வியாசரே!

தொலைபேசியில் தொடர்ச்சி யாக கதைப்பவர்களை நிறுத்த என்ன வழி?





சொந்த உழைப்பில் கட்ட ணம் செலுத்த வைப்பதுதான் ஒரே வழி.

*எஸ்.கவிதா, நெல்லியடி*

வியாசரே!

வெளிநாட்டு வரனைதான் திரு மணம் செய்வேன் என ஒற்றைக்கா லில் நிற்கும் நம்மூர்ப் பெண்களு க்குதாங்கள் கூறும் அறிவுரை என்ன?



முற்றத்து மல்லிகைக்கும் வாசம் உண்டு.




*ராஜா, அச்சுவேலி*

வியா!

கடவுள் மனிதனாகப் பிறந் தால்...?

அவருக்கும் இடப்பெயர்வு, அகதி, வெளிநாட்டிற்கு செல்லப்ப ணம் கட்டி ஏமாற்றம், காதல், பெண் கடத்தல், கசூர்னா பீச்சில் சேட்டை எல்லாம் இருக்கும் பாரும்.

*ஏ.அஜித், ஆனைக்கோட்டை*

வியா அங்கிள்!

எனது நண்பன் தனது கண்களை மூடிக்கொண்டு பள்ளத்தில் வீழ்ந்து விட்டான் என்ன செய்யலாம்?



மூடிய கண்கள் திறக்கும் போது அவன் எழுந்து கொள்வான். ஆனால் நீரும் கண்ணை மூடி வீழ் ந்து விடாதீர்.

*பரணி, பருத்தித்துறை*

வியாசரே!

கடவுள் யாழ்ப்பாணத்திற்கு வந் தால் அவரிடம் என்ன கேட்கலாம்?

இறைவா உன்னை நம் பித்தான் எனது ஏமாற்று வேலை களே நடக்கிறது. தயவு செய்து மீண்டுமொரு தடவை யாழ்ப்பா ணம் வந்து விடாதே! இதைத் தான் பலர் கேட்பார்கள்.

*கே.ஜெயா, கல்வியங்காடு*

வியா சேர்!

என் காதலி எதற்கெடுத்தாலும் பாம்பாகச் சீறுகிறாளே ஏன்?



உமது மகுடி வாசிப்பில் தவறுண்டு போல தெரிகிறது.

## என் காதலி எதற்கெடுத்தாலும் பாம் -பாகச் சீறுகிறாளே ஏன்?

*ரி.பிரியா, பருத்தித்துறை*

Dear Vija anna!

காதலாய் மாறிய நட்புக்கும் நட் பாய் மாறிய காதலுக்கும் என்ன வித்தியாசம்?

செல்வி

முன்னது நடக்கும் சாத்தியம். பின்னது நடவாத சாத்தியம்.

*நந்தன், காரைநகர்*

வியாசரே!

யாழ்ப்பாணம் பாழ்ப்பாணமாய் மாறிக்கொண்டிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்?

(குழி) பாணத்தால் பாழாகிப் போகிறது.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் கேள்விகளை**
**ஆசிரியர், வியாசர் பதில்கள்,**
**இல.3, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

குறிப்பு: 10 சொற்களுக்குட்பட்டிருக்கும் கேள்விகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

# விரிவுரையாளர்களின் கௌரவத்தை கெடுக்கவே பல்கலை. போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது

## வேலைநிறுத்தத்திற்கு எதிரான விரிவுரையாளர்கள் விசனம்

(கொழும்பு)

**அரச துறையில் விரிவுரையாளர்களுக்கே கூடுதல் சம்பளம் வழங்கப்படும் நிலையில் மேலும் சம்பள உயர்வு வழங்குமாறு பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் வறிய மக்களிடம் பணம் கோருவது அநீதி என பிள்ளைகளின் கல்வியை பாதுகாக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.**

விரிவுரையாளர்களின் 3 மாதத்திற்கு மேலான வேலைநிறுத்தத்தினால் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கை 3 வருடங்களினால் பின்னோக்கிச் சென்றுள்ளதாக குற்றஞ் சாட்டியுள்ள மேற்படி அமைப்பு பாதயாத்திரைக்காக சென்ற இரு பல்கலைக்கழக மாணவர்கள் விபத்தில் பலியானதற்கு விரிவுரையாளர் சங்கமே பொறுப்பு எனவும் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேலைநிறுத்தம் தொடர்பாக நாட்டு பிள்ளைகளின் கல்வியை பாதுகாக்கும் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் வேலை நிறுத்தத்திற்கு எதிரான விரிவுரையாளர்கள் பலரும் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த பேராதனை பல்கலைக்கழக பிரதி உப வேந்தர் பேராசிரியர் சாந்த ஹென்னாயக்க கூறியதாவது,

நானும் விரிவுரையாளர் சங்க உறுப்பினராக உள்ளேன். இதிலுள்ள அநேகமான விரிவுரையாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதை விரும்பவில்லை. ஆனால் அவர்கள் வெளிப்படையாக வந்து இதனை எதிர்க்கவும் குரல் கொடுக்கவும் அஞ்சுகின்றனர். ஏனென்றால் அவர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் அழுத்தம் விடுக்கப்பட்டு வருகின்றது.

வறிய மக்களின் பணத்திலே பல்கலைக் கழகங்கள் இயங்குகின்றன. தங்களுக்கு பெருமளவு சம்பளம் கிடைக்கும் நிலையில் சம்பள உயர்வு கோரி வறிய மக்களிடம் பணம் கேட்கின்றனர். ஆனால் பல்கலைக்கழகங்களுக்கு சிறந்த மாணவர்களை அனுப்பும் பாடசாலை ஆசிரியர்களுக்கு குறைந்த சம்பளமே கிடைக்கிறது. இவர்களுக்காக விரிவுரையாளர் சங்கம் குரல் கொடுக்கவில்லை.

ஆனால் விரிவுரையாளர்களின் கௌரவத்தை நாசப்படுத்தி பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை இந்த சங்கம் சீர்குலைத்து வருகின்றது.

இந்த நிலை தொடர்ந்தால் பல்கலைக் கழகங்களை நடத்த விரிவுரையாளர்கள் இருக்க மாட்டார்கள். மாணவர்களும் பல்கலைக் கழகம் வர விரும்பமாட்டார்கள்.

இந்த நிலை தொடர்ந்தால் அரச பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டு தனியார் பல்கலைக்கழகங்களே தலை தூக்கும்.

கூடுதலான நிதி ஒதுக்குவதன் மூலமாக மட்டும் பல்கலைக்கழகங்களின் தரத்தை உயர்த்த முடியாது.

1960 களில் உலக தரத்தில் முன்னிலையில் இருந்த எமது பல்கலைக்கழகங்கள் இன்று பின்னணியில் இருப்பதற்கு விரிவுரையாளர்களே பொறுப்பாகும்.

வேலை நிறுத்தத்திற்கு முன்னரும் கூட பேராதனை பல்கலைக்கழகங்களின் பீடங்களுக்கு விரிவுரையாளர்கள் ஒழுங்காக வருவது கிடையாது. (ந-2)

# அதிபர்கள், ஆசிரியர்கள் 6 ஆயிரம் பேருக்கு ஒக்டோபர் 2 இல் புதிய நியமனம்

## கல்வியமைச்சு அறிவிப்பு

நாட்டிலுள்ள பாடசாலையில் கடமையாற்றவென மேலும் 6 ஆயிரம் அதிபர் ஆசிரியர்களுக்கு புதிதாக நியமனம் வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் 2, தரம் 3 ஆகிய இரு தரப்பினர்களுக்கும் 3 ஆயிரம் அதிபர்களும் இலங்கை ஆசிரியர் சேவை 3 இதுதவிர 3 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களும் புதிதாக நியமனம் பெறவுள்ளனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 3 ஆம் தரத்திற்கு திறமை, சேவை மூப்பு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் அடிப்படையில் தெரிவான அதிபர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்தவர்களுக்கும் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்த மூன்று பகுதியினருக்குமான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரட்ன அறிவித்துள்ளார். (ந-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிடக்கோரிக்கையாளர்களில் ஒரு பகுதியினர் நாடு திரும்பியுள்ளனர்

(கொழும்பு)

இரண்டாம் தொகுதி இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து நாடு திரும்பியுள்ளனர். நவுறு தீவில் தங்கியிருப்பதனை விடவும் நாடு திரும்புவது பொருத்தமானது என கருதிய மற்றுமொரு தொகுதி இலங்கையர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

படகு மூலம் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசித்து கிறிஸ்மஸ் தீவுகளில் வைக்கப்பட்டிருந்தவர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

கிறிஸ்மஸ் தீவிலிருந்து குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் விமானம் மூலம் இலங்கைக்கு புறப்பட்டுள்ளனர்.

நவுறு தீவுகளில் தங்குவதனை விடவும் இலங்கை திரும்ப புகலிடக் கோரிக்கையாளர்கள் ஆர்வம் காட்டுவதன்மூலம் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களின் செயற்பாடுகள் அம்பலமாகியுள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ்போவுன் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களின் பொய்ப் பிரசாரங்களுக்கு ஏமாந்தே அதிகளவான புகலிடக் கோரிக்கையாளர்கள் ஆபத்தான பயணத்தை தொடர்வதாக குறிப்பிட்டுள்ளார்.

தன்னார்வ அடிப்படையில் நாடு திரும்ப விரும்புவோருக்கு உதவிகளை வழங்க தயார் என சர்வதேச குடிப்பெயர்வு அமைப்பு அறிவித்துள்ளது. (ந-2)

# அமைச்சரவை மாற்றத்தின் போது பிள்ளையானுக்கு அமைச்சர் பதவி?

(கொழும்பு)

கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் சந்திரகாந்தன் அடுத்த அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சராக நியமிக்கப்படுவார் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாண அபிவிருத்தி புனர்வாழ்வு மீள்குடியமர்வு அமைச்சர் பதவி அடுத்த அமைச்சரவை மாற்றத்தின் போது அவருக்கு வழங்கப்படும் என்று அச் செய்தியில் கூறப்பட் டுள்ளது.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் ஆளும்கட்சி உடன்பாடு செய்து கொண்டதை அடுத்து கிழக்கு முதல்வராக இருந்த சந்திரகாந்தனிடம் இருந்து முதல்வர் பதவி பறிக்கப்பட்டதுடன் அவருக்கு அமைச்சர் பதவி கூட வழங்கப்பட்டவில்லை.

அதற்கு பதிலாக எந்த அதிகாரமும் இல்லாத கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான ஸ்ரீலங்கா அதிபரின் ஆலோசகர் பதவி வழங்கப்பட்டது.

எனினும் இந்த பதவிக்காக அவருக்கு அதிகாரபூர்வ வாகனம் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவருக்கு தனியே பாதுகாப்பு அதிகாரிகள் மட்டும் இந்தப் பதவியின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சந்திரகாந்தன் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டு அடுத்த அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சராக நியமிக்கப்படவுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் தெரிவித்தது.

எனினும் அண்மையில் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய சந்திரகாந்தன் தனக்கு நாடாளுமன்ற உறுப்பினராகும் எண்ணமில்லை என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-2)

# தீயில் எரிந்த கர்ப்பிணிப்பெண் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

அடுப்பு தீயில் எரிந்த கர்ப்பிணிப்பெண் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மன்னார் மாவட்டம் வெள்ளாங்குளம் சேவாகிராமம் பகுதியில் உள்ள வீடொன்றில் உள்ள கர்ப்பிணிப் பெண்ணொருவர் கடந்த 15 ஆம் திகதி அன்று வீட்டில் யாரும் இல்லாத வேளையில் அடுப்பு பற்ற வைத்துள்ளார்.

இதன்போது தீ குறித்த பெண்ணின் உடம்பிலும் பற்றியுள்ளது. இதில் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் சேந்தாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

14 நாட்கள் கடந்துள்ள நிலையில் நேற்றைய தினம் அவர் உயிரிழந்துள்ளார். அதேயிடத்தை சேர்ந்த நிஷாந்தன் மயூரி (வயது 18) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணின் வயிற்றில் 8 மாத சிசு காணப்பட்டநிலையில் சிசுவினை வைத்தியர்கள் காப்பாற்ற முயன்ற போதும் அது முடியாமல் சிசுவும் இறந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-4)

# கண்டிக்கு கடத்தப்பட இருந்த 30 ஆயிரம் சுருட்டுக்கள் பறிமுதல்

## யாழ்.பொலிஸார் நடவடிக்கை

யாழில் இருந்து கண்டிப்பகுதிக்கு கடத்த முயன்ற 30 ஆயிரம் சுருட்டுக்களை யாழ். பொலிஸ் நிலைய போதைவஸ்து தடுப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இக் கைப்பற்றல் நடவடிக்கை நேற்று காலை பண்ணை வீதியிலுள்ள தனியார் பேருந்து தரிப்பிடத்தில் இடம் பெற்றுள்ளது.

ஒரு இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய குறித்த சுருட்டுக்களை அனுமதியின்றி கொண்டுசெல்ல முயன்றதாலேயே இக்கைப்பற்றல் நடவடிக்கை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இக் கைப்பற்றல் நடவடிக்கை தமக்கு கிடைத்த புலனாய்வு தகவலின் அடிப் படையிலேயே இடம்பெற்றதாகவும் இக்கடத்தலோடு தொடர்புடையவர்களினை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ந-4)

# விடைத்தாள் திருத்துவதற்கு விரிவுரையாளர்களே வாருங்கள்

## கல்வி அமைச்சு மீண்டும் அழைப்பு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளுக்கு வருமாறு பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு கல்வி அமைச்சு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது.

மாணவர்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு இந்த அழைப்பு விடுக்கப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளை தொழிற்சங்க நடவடிக்கையுடன் தொடர்புபடுத்த வேண்டாம் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபடும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் கடிதம் மூலம் இது குறித்து அறிவித்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

இதனை பலர் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் மற்றைய விரிவுரையாளர்களும் இணக்கம் தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளை திங்கட்கிழமைக்குள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இணக்கம் தெரிவிக்காவிட்டால் 10 நாட்களுக்குள் சிறந்த முறையில் விடைத்தாள் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ந-2)


MINISTRY OF HIGHER EDUCATION

**UNIVERSITY OF JAFFNA**

INVITATION FOR BIDS

Construction of Building for the Faculty of Management Studies & Commerce, University of Jaffna- Block' B'

1. **The Chairman, Standing Cabinet Appointed Procurement Committee (SCAPC),** on behalf of the **University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for **"Construction of Building for the Faculty of Management Studies & Commerce, University of Jaffna- Block B"** as described below and estimated to cost of **Rs. 30.3million**.

The construction period is **301 days.**

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade **C5** or above with the Institute for Construction Training and Development (ICTAD), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.

4. Interested bidders may obtain further information from **Deputy Registrar (Capital Works and Planning Unit) University of Jaffna, Thirunelvely, Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.**

Contact numbers are: Phone. Tel: 021 221 9201 Fax: 021 221 9201

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to**Deputy Registrar (Capital Works and Planning Unit) University of Jaffna, Thirunelvely, Jaffna from 01.10.2012 until 22.10.2012** from **9:00hrs to 15:00hrs on working days** upon payment of a non refundable fee of Rupees seven thousand (Rs.7,000.00).

6. Sealed Bids shall be delivered in dublicate to reach the **Director (Procurement),Ministry if Higher Education, No.18, Ward Place, Colombo 07 on or before 10.30 hrs on 31.10.2012.** Late bids will be rejected. Bids will be opened soon after the closing at the same address in the presence of the bidders's representatives who choose to attend.

7. Bids shall be Valid for a period of 91Days from the date fixed for closing of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by a Bid Security which shall be:
- in the form included in Section 09 in the Bidding document
- In favour of **Vice Chacellor- University of Jaffna**
- for an amount of **Rs. 600,000.00**
- Valid upto 119 days from the closing date of Bid.
- Issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.

9. Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely, Jaffna at 11.00 am on 12.10.2012.

**Chairman**
**Standing Cabinet Appointed Procurement Committee,**
**Ministry of Higher Education,**
**18, Ward Place,**
**Colombo 07.**

(C/1182)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கோஸ் தீவுகள் சுவர்க்கம்; நவுறு தீவுகள் நரகம்!

## இலங்கை திரும்பிய புகலிடக் கோரிக்கையாளர்கள் தகவல்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் கொக்கோஸ் தீவுகள் சுவர்க்கத்தை போன்றது. எனினும் நவுறு தீவு நரகத்தை போன்றது என்று அங்கிருந்து இலங்கை திரும்பிய புகலிடக் கோரிக்கையாளரான பெரும்பான்மையினத்தை சேர்ந்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

நீர்கொழும்பு தொடுதுவ என்ற மீனவக் கிராமத்தில் இருந்து புகலிடக்கோரிக்கையாளராக அவுஸ்திரேலியாவுக்கு சென்று நவுறு தீவுக்கு மாற்றப்பட்டமையால் மீண்டும் இலங்கை திரும்பிய அவர் இந்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

கொக்கோஸ் தீவுகளில் உள்ள குடிவரவு முகாம் சுவர்க்கத்தை போன்றது. உணவு, உடை, விளையாட்டு, ஆங்கில கற்கைநெறி என்று அனைத்தும் அங்கு சிறப்பாக இருந்தன.

எனினும் நவுறுதீவு மோசமான நிலையைக் கொண்டது. பாம்புகளும் மிருகங்களும் அங்கு நிறையவே உள்ளன. உரிய வீட்டு வசதிகள் இல்லை. இந்த நிலையிலேயே உரிய தொழிலை தேடமுடியாது என்ற காரணத்தினால் இலங்கை திரும்பியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நவுறுதீவில் இருந்து கடந்த வாரம் இலங்கை திரும்பிய 18 இலங்கையர்களில் குறித்த நபரும் ஒருவராவர். இதேவேளை தாம் ஆட்கடத்தல்காரர்களின் பொய்யான வாக்குறுதிகளை நம்பியே அவுஸ்திரேலியா சென்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 31 இலங்கையர்கள் நவுறுதீவுகளுக்கு மாற்றப்பட்டனர். அவுஸ்திரேலியாவுக்கு பிரவேசிக்க முயன்ற இலங்கையர்களில் மேலும் 31 பேர் நேற்று முன்தினம் நவுறு தீவுகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சரக்கு விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டு இவர்கள் நவுறுதீவுகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அவுஸ்திரேலியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய குடிவரவுக் கொள்கையின் பின்னர் 5 ஆவது புகலிடக்கோரிக்கையாளர் குழு நவுறு தீவுக்கு மாற்றப்பட்டுள்ளது. (ந-2)

## சியம்பலாண்டுவ பகுதியில் நேற்று நிலநடுக்கம்

மொனராகலை சியம்பலாண்டு வ பகுதியில் சிறிதளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை சுரங்க பணியகம் அறிவித்துள்ளது. இந்நிலநடுக்கம் நேற்று காலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பல்லேகல மற்றும் ஹக்மன் கண்காணிப்பு நிலையத்தில் இது பதியப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை சுரங்க பணியக தலைவர் டாக்டர் என்.பி.விஜேயனந்தா தெரிவித்துள்ளார்.

இந்நிலநடுக்கம் தொடர்பில் அச்சம் கொள்ள தேவையில்லையெனவும் சிறிதளவிலான நிலநடுக்கமே என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்நிலநடுக்கத்தால் எதுவித சேதங்களும் ஏற்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-2)

# தமிழகத்திற்கான பயண எச்சரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருகின்றது

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையர்களை தமிழகத்திற்கான பயணங்களை மேற்கொள்வது குறித்து தற்காலிகமாக விடுக்கப்பட்டிருந்த பயண எச்சரிக்கையை தளர்த்துவது குறித்து வெளிவிவகார அமைச்சு ஆராய்ந்து வருவதாக வெளி விவகார பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் தமிழகத்திலுள்ள தேவாலயம் ஒன்றிற்கு யாத்திரை மேற்கொண்டிருந்த இலங்கையர்களுக்கு இடையூறு விளைவிக்கப்பட்ட சம்பவம் குறித்து இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழர் அமைப்புடன் தொடர்புடைய இடதுசாரி உறுப்பினர்களால் இலங்கையர்களுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டிருந்தது என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். எனவே தமிழகத்தில் தற்போதைய சூழ்நிலையை ஆராய்ந்த பின்னரே தற்காலிக பயண எச்சரிக்கை தளர்த்தப்படவுள்ளதாக பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ந-2)

# சிங்கள மக்களின் அனுமதியின்றி கூட்டமைப்பால் எதையும் பெறமுடியாது!

## வசந்த பண்டார வன்மப்பேச்சு

(கொழும்பு)

இந்தியாவினூடாக இலங்கைக்கு அழுத்தங்கொடுத்து தீர்வை பெறுவதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முயற்சிக்குமானால் அதற்கு எதிராக சிங்கள மக்கள் கிளர்ந்தெழுவர். சிங்கள மக்களின் அனுமதியின்றி நாட்டில் எதையும் கூட்டமைப்பால் பெறமுடியாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் இந்திய விஜயம் தொடர்பாக கருத்து வெளியிடும்போதே இவ் இயக்கத்தின் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கையாளும் வழிமுறைகள் நாட்டுக்கு பொருத்தமற்றவையாக இருக்கின்றன. அது சர்வதேச தீர்வையே எதிர்பார்க்கின்றது.

தமிழ்மக்களுக்கு எதையாவது பெற்றுக் கொடுப்பதற்கு கூட்டமைப்பினருக்கு அக்கறையிருந்தால் அவர்கள் தெரிவுக்குழுவுக்கு செல்ல வேண்டும். அதை விடுத்து இனவாதம் பேசுவதால் நடக்கப்போவது ஒன்றுமில்லை.

குறிப்பாக இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்து தீர்வு தொடர்பில் பேசுவது அரசை வெறுப்படைய செய்யும். இதுவே யதார்த்தபூர்வமான உண்மையுமாகும்.

இந்தியாவினூடாக இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து தீர்வொன்றை பெற்றுக் கொள்வதே கூட்டமைப்பின் நோக்கமாகும். அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் அதற்கு எதிராக சிங்கள மக்கள் கிளர்ந்தெழுவர்.

இந்தியாவுக்கு கூட்டமைப்பு செல்வதால் தீர்வு முயற்சிகள் உள்நாட்டில் பாதிக்கப்படுவதுடன் மேலும் காலதாமதம் ஏற்படும். இதைக் கூட்டமைப்பு உணரவேண்டும். அதேவேளை சிங்கள மக்களின் விருப்பத்திற்கு மாறானதொரு தீர்வை கூட்டமைப்பால் பெறமுடியாது என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (ந-2)

# கடந்த வாரத்தில் மட்டும் 143 பேர் கைதாகினர்

## யாழ்.பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் கடந்த வாரத்தில் 143 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகுகனேசன் தெரிவித்தார்.

இதில் அடிதடிச் சம்பவங்களில் ஈடுபட்ட 44 பேரும் நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 35 பேரும் மது போதையில் வாகனம் செலுத்திய 34 பேரும் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய 12 பேரும் சூழல் மாசடைதலை ஏற்படுத்திய 5 பேருக்கும் அனுமதியின்றி அரச சாராய விற்பனையில் ஈடுபட்ட 3 பேரும் பணமோசடியில் ஈடுபட்ட இருவரும் விபத்து ஏற்படுத்திய இருவரும் அனுமதியின்றி பனை மரம் வெட்டி கொண்டு சென்ற இருவரும் அரச சாராயத்தினை அனுமதியின்றி கொண்டு சென்ற மற்றும் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட தலா ஒவ்வொருவரும் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டவர்களும் கைது செய்யப்பட்டு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழிலும் இடம்பெற்ற இந்த 143 குற்றச்செயல்களில் யாழ்.பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 100 குற்றச் செயல்களும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 43 குற்றச்செயல்களுமே இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந-4)

## வானொலியில் நேரடி அஞ்சல்

(யாழ்ப்பாணம்)

சரித்திர பிரசித்தி பெற்ற நாகதம்பிரான் ஆலயத்தில் இன்று நடைபெறும் கப்பல் திருவிழா நிகழ்வுகள் இலங்கை வானொலி யாழ். FM அலை வரிசையில் நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளது. இவ் அஞ்சல் நேர்முக வர்ணனையை மதுரகவி காரை எம்.பி அருளானந்தன் நிகழ்த்தவுள்ளார். (ந-8)

## இருமொழிகளிலும் பெயர்ப்பலகை இல்லாவிட்டால்

# பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

தமிழ், சிங்கள மொழிகளில் பெயர்ப் பலகை இல்லாத பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு தேசிய மொழிகள்அமைச்சு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

பயணிக்கும் ஊரின்பெயரை சிங்களத்திலும் தமிழிலும் குறிப்பிடும் பெயர்ப்பலகைகள் கட்டாயமாக பயன்படுத்த வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த உத்தரவை மதிக்கத் தவறும் உரிமையாளர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை போக்குவரத்து சபை, தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் உள்ளிட்ட பேருந்து சேவைகளில் ஈடுபடும் தரப்பினருக்கு ஏற்கனவே பல தடவைகள் பெயர்ப்பலகையில் மொழிப் பயன்பாடு குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த மொழிச்சமவுரிமை மிகவும் முக்கியமானது என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. சில பஸ் உரிமையாளர்கள் இந்த உத்தரவினை கவனத்திற்கொள்ள தவறியுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளது.

இரண்டு மொழிகளிலும் பெயர்ப்பலகைகளை பொருத்தாத பஸ் உரிமையாளர்களுக்கு ஆறு மாத சிறைத்தண்டனையும் அபராதமும் எதிர்காலத்தில் விதிக்கப்படும் என அமைச்சு அறிவித்துள்ளது. (ந-2)

## தேசிய ரீதியில் முதலாம் இடம்


(யாழ்ப்பாணம்)

விசேட தேவையுடைய மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் யாழ்.கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பு.கஜலக்ஷி மேற்பிரிவு கட்டுரைப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுள்ளார். (ந-2-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ புலம்பெயர் தமிழர்கள் முன்வர வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிப்படைந்த நிலையில் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறிய மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் வாழக் கூடிய வகையில் அடிப்படைத் தேவையான வீட்டுத்திட்ட உதவியை வழங்க இந்திய அரசாங்கம் எவ்வாறு முன்வந்ததோ அதேபோன்று புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வர வேண்டும் என பாரம்பரியகைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வந்தது எமக்கு கிடைத்த வரப்பிரசாதம். சுமார் 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்க அந்த அரசாங்கம் முன்வந்தது. இதில் 41 ஆயிரம் வீடுகள் வடமாகாணத்தைச் சேர்ந்த மக்களுக்கும் 6 ஆயிரம் வீடுகள் கிழக்கு மாகாண மக்களுக்கும் 3 ஆயிரம் வீடுகள் மலையக மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

இந்த வீட்டுத்திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவு பாரபட்சம் இன்றி நேர்மையாக வெளிப்படைத்தன்மையுடன் இடம்பெற்றது.

இந்தியாவிற்கு கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஜனாதிபதியும் நானும் சென்றிருந்த போது அந்த அரசாங்கத்திடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக இந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்க அந்த அரசாங்கம் முன்வந்தது.

இந்திய அரசாங்கம் வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வந்ததைப் போன்று இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வந்தால் வீடுகள் இன்றி அல்லற்படும் மக்களுக்கு பெரும் உதவியாக இருக்கும்.

புலம் பெயர்ந்தவர்கள் ஒரு மாதத்தில் ஒரு நாளைக்கு ஒருவேளை தேநீர் குடிக்கும் பணத்தை கொடுத்தாலே மாதம் ஒன்றுக்கு சுமார் 1800 வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியும். புலம்பெயர்ந்த தமிழர்கள் இதனைப் புரிந்து கொண்டு எமது மக்களுக்கு உதவ முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# தற்கொலை எண்ணிக்கை இலங்கையில் உயர்கின்றது

(கொழும்பு)

இலங்கையில் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை மிக உயர்வாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வருடாந்தம் இலங்கையில் 4 ஆயிரம் பேர் வரை உயிரை மாய்த்துக் கொள்வதாகவும் நாள்தோறும் 11 தற்கொலைச் சம்பவங்கள் பதிவாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காதல் தோல்வி, வறுமை, தொழிலின்மை, கடன் தொல்லை உள்ளிட்ட பல்வேறு சமூகக் காரணிகளின் அடிப்படையில் நாள்தோறும் பலர் தற்கொலை செய்து கொள்வதாகக் குறிப்பிடப்படுகின்றது.

நாட்டில் வறுமை 'இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் பிரசாரம் செய்த போதிலும் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

புள்ளிவிபர அடிப்படையில் வறுமை ஒழிப்பு தொடர்பில் தகவல்கள் வெளியிடப்பட்ட போதிலும் யதார்த்தத்தில் மக்கள் வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-2)

# மோ.சைக்கிள் விபத்திலேயே பல்கலை. மாணவர்கள் பலி!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிக்கை

(கொழும்பு)

கம்பஹா- இம்புல்கொட பிரதேசத்தில் கடந்த 27 ஆம் திகதி அதிகாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு பல்கலைக் கழக மாணவர்கள் உயிரிழந்தமைக்கு விபத்தே காரணம் என பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

குறித்த விபத்தில் உயிரிழந்த றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் நாட்டில் நடைபெற்று வரும் மாணவர் போராட்டங்களுக்கு முன்நின்று உழைத்தவர்கள் எனவும் அவர்களின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அனைத்துப்பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்தது. இந்த நிலையில் இந்த மரணம் குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் நேற்று முன்தினம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு, விபத்தில் இரு மாணவர்கள் உயிரிழந்தமை குறித்து சில தரப்பினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சடலங்கள் மீதான பிரேத பரிசோதனை கம்பஹா வைத்தியசாலையில் இடம்பெற்றது. அதன் போது தலையில் ஏறபட்ட பலத்த காயத்தினால்தான் மரணம் சம்பவித்திருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. அப்பாவி இரு மாணவர்கள் உயிரிழந்துள்ள நிலையில் சில தரப்பினர் ஊடகங்கள் மூலம் தவறான தகவல்களை வெளியிடுவது கவலையளிக்கிறது. இவர்களுடைய கருத்துக்கள் அடிப்படை அற்றது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது. (ந-2)

# தங்கம் கடத்த முயன்ற இந்திய பிரஜை கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் தங்கம் கடத்த முயற்சித்த இந்திய பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் சென்னை நோக்கிச் செல்ல முற்பட்ட வேளை கட்டுநாயக்க சுங்க அதிகாரிகளால் குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடைய உடம்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தங்கத் தகடுகள் நான்கு கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த தகடுகளின் நிறை 4.8 கிராம் என கணிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் பெறுமதி 30 இலட்சம் ரூபாவாகும்.

இது தொடர்பாக கட்டுநாயக்க சுங்கப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-2)


MINISTRY OF HIGHER EDUCATION

**UNIVERSITY OF JAFFNA**

INVITATION FOR BIDS

Construction of Building for the Faculty of Management Studies & Commerce, University of Jaffna- Block' D & E'

1. **The Chairman, Standing Cabinet Appointed Procurement Committee (SCAPC)**, on behalf of the **University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for **"Construction of Building for the Faculty of ManagementStudies & Commerce, University of Jaffna- Block D & E"** as described below and estimated to cost of **Rs. 82.1 million**.

The construction period is **455 days.**

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted andshall be registered in the field of building construction for grade **C4** or above with the Institute for Construction Training and Development (ICTAD), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.

4. Interested bidders may obtain further information from **Deputy Registrar (Capital Works and Planning Unit) University of Jaffna, Thirunelvely, Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.**

Contact numbers are: Phone. Tel: 021 221 9201 Fax: 021 221 9201

5. A complete set if Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **Deputy Registrar (Capital Works and Planning Unit) University of Jaffna, Thirunelvely, Jaffna from 01.10.2012 until 22.10.2012** from **9:00hrs to 15:00hrs on working days** upon payment of a non refundable fee of Rupees Ten thousand **(Rs.10,000.00).**

6. Sealed Bids shall be delivered in dublicate to reach the **Director (Procurement),Ministry if Higher Education, No.18, Ward Place, Colombo 07 on or before 11.00 hrs on 31.10.2012.** Later bids will be rejected. Bids will be opened soon after the closing at the same address in the presence of the bidders's representatives who choose to attend.

7. Bids shall be Valid for a period of 91Days from the date fixed for closing of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by a Bid Security which shall be:
- in the form included in Section 09 in the Bidding document
- In favour of **Vice Chacellor- University of Jaffna**
- for an amount of **Rs. 1,532,000.00**
- Valid upto 119 days from the closing date of Bid.
- Issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.

9. Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely, Jaffna at 10.30 am on 12.10.2012.

**Chairman**
**Standing Cabinet Appointed Procurement Committee,**
**Ministry of Higher Education,**
**18 Ward Place,**
**Colombo 07.**

(C-1181)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் பொறியியல்பீடம் விரைவில் இயங்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

வட பகுதியில் மருத்துவபீட மாண வர்களின் கல்வி மேம்பாட்டிற்கு இணை சுகாதார விஞ்ஞான கற்கை கள் பயனுள்ளதாக அமையுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற் றும் சிறுதொழில் முயற்சி அபிவி ருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவான ந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இணை சுகாதார விஞ் ஞான கற்கைகள் பிரிவுக்கான புதிய கட்டட திறப்பு விழா நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கமைவாகவும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாய க்காவின் திட்டமிடலுக்கமைவாகவும் யாழ்.பல்கலைக்கழகத்தில் இணை ந்த விஞ்ஞான அலகு செயற்படவு ள்ளது.

நாட்டிலுள்ள ஏனைய சில பல் கலைக்கழகங்களில் இவ்வலகு செய ற்படுவதற்கு எதிர்ப்பு இருக்கின்ற போதிலும் இங்கு இவ்வலகு செயற் படவுள்ளமை வரவேற்கத்தக்கது.

இவ்வாறான சந்தர்ப்பங்களை எமது மாணவர்கள் சரியாக பயன்ப டுத்திக் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்ட அமைச்சர் இவ் வருட இறுதியில் அல்லது அடுத்த வருட முற்பகுதியில் கிளிநொச்சி யில் பொறியியல் பீடம் இயங்கவுள் ளதாகவும் இதனொரு அங்கமா கவே கிளிநொச்சியில் அமைந்து ள்ள பொறியியல்பீட வளாகத்தில் மாண வர்கள் உள்ளிட்ட கல்விச் சமூகத்தி னர் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கெடுத்த மாபெரும் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டதையும் இதன்போது நினைவுகூர்ந்தார்.

மருத்துவபீடத்தின் இணை சுகா தார விஞ்ஞான கற்கைகள் பிரி வின் கேட்போர் கூடத்தில் உயர்க ல்வி அமைச்சர், பிரதியமைச்சர் அமை ச்சின் செயலாளர் ஆகியோருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு விஞ்ஞான கற் கைகள் பிரிவின் துறைசார்ந்தோ ருடன் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகள், தேவைகள் தொடர் பில் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம், இணை சுகாதார விஞ்ஞான கற்கைள் பிரி வின் தலைவர் திருமதி தேவி தபோ தரன் உள்ளிட்டோர் உடனிருந்த னர். (ந-11)

# கோடீஸ்வர வர்த்தகர்கள் 12 பேர் போதைப்பொருள் கடத்தலில்!

## புலனாய்வு பிரிவினர் தகவல்

12 கோடீஸ்வர வர்த்தகர்கள் போதைப்பொருள் கடத்தலில் ஈடு பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

சர்வதேச ரீதியில் வர்த்தக நடவடி க்கைகளை மேற்கொள்ளும் சில வர்த்தகர்களே இவ்வாறு போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வருகி ன்றனர். இவர்களில் பலர் கொழு ம்பு மற்றும் அதன் அயல் பிரதே சங்களில் வாழ்ந்து வருவதாக புல னாய்வுப் பிரிவினர் தெரிவித்துள் ளனர்.

இந்த 12 வர்த்தகர்களுக்கும் அரசியல்வாதிகளின் ஆதரவு காண ப்படுகின்றது. நாள்தோறும் இலங் கைக்குள் 5 முதல் 6 கிலோ ஹெரோ யின் போதைப்பொருள் கடத்தப் படுகின்றது.

கொள்கலன்களில் வேறு பொருட் களை இறக்குமதி செய்யும் போர் வையில் போதைப்பொருட்கள் கடத் தப்பட்டு வருகின்றன.

இதேவேளை, ஹெரோயின் போதைப்பொருளின் விலை வீழ்ச் சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இலங்கையில் ஒரு கிராம் ஹெரோ யின் 3 ஆயிரம் ரூபாவிற்கு விற் பனை செய்யப்படுகின்றது. (ந-2)

# மாகாணசபைகளுக்கு சுயாட்சி வழங்குவது குறித்து வாக்கெடுப்பு நடத்துங்கள்

## அமைச்சர் வாசுதேவ கோரிக்கை

மாகாணசபை சபைகளுக்கு சுயாட்சி அதிகாரங்களை வழங்கு வது தொடர்பில் வாக்கெடுப்பு நட த்தப்பட வேண்டுமென தேசிய மொழி கள் அமைச்சர் வாசுதேவ நாண யக்கார தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட் டின் சகல மாகாண சபைகளுக்கும் சுயாட்சி அதிகாரங்களை வழங்கு வது தொடர்பில் மக்களின் விருப் பத்தை அறியும் நோக்கில் இந்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதனை மக்கள் வரவேற்பார்கள். எனினும் பெரும் பான்மை சிங்கள மக்கள் இந்த யோசனைத் திட்டத்திற்கு ஆதரவ ளிப்பார்களா என்பதில் அரசாங்கம் சந்தேகம் கொண்டுள்ளது.

அரசாங்கத்தினால் தற்போது மேற்கொள்ளப்படும் சகல நிர்வாக நடவடிக்கைகளும் மாகாண சபை களுக்கு வழங்கப்படும் வகையில் சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தொடர்பில் ஆணை க்குழுக்கள் நிறுவப்பட வேண்டும்.

இவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதனால் பாதக விளை வுகள் ஏற்படக்கூடுமென அரசாங் கம் அஞ்சிய போதிலும் பாதக விளை வுகள் ஏற்படாது என அவர் தெரி வித்துள்ளார். (ந-2)

# 2012.09 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ *1399*-நான்காம் ஹென்றி இங்கிலாந் தின் மன்னனாக முடி சூடினான்.

★ *1744*-பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் இணைந்து சார்டீனியா பேரரசை தோற்கடித்தனர்.

★ *1791*-மோட்ஸார்ட்டின் கடைசி ஒப் பேரா வியென்னாவில் அரங்கே றியது.

★ *1840*-நெப்போலியன் பொனபார்ட்டின் எஞ்சிய உடல் பகுதி பிரான்சுக்கு எடுத்து வரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

★ *1860*-பிரித்தானியாவின் முதலாவது அமிழ் தண்டூர்தி(tram) சேவை ஆரம்பமானது.

★ *1867*-ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவின் அதிகாரத்தைக் கைப்பற் றியது.

★ *1882*-உலகின் முதலாவது நீர்மின் திறன் ஐக்கிய அமெரிக்காவின் விஸ்கொன்சின் மாநிலத்தில் அமைக்கப்பட்டது.

★ *1888*-கிழிப்பர் ஜேக் தனது மூன்றாவது மற்றும் நான்காவது கொலைக ளைச் செய்தான்.

★ *1895*-மடகஸ்கார் பிரெஞ்சு பாதுகாக் கப்பட்ட அரசாக அறிவிக்கப் பட்டது.

★ *1901*-ஹியூபேர்ட் செசில் பூத் தூசுறிஞ் சிக்கான காப்புரிமம் பெற்றார்.

★ *1935*-அரிசோனா, நெவாடா மாநிலங்க ளுக்கிடையே ஊவர் அணை திறக்கப்பட்டது.

★ *1938*-செக்கோசிலவாக்கியாவின் சுடெட்டென்லாந்துப் பகுதியை ஆளும் உரிமையை ஜேர்மனிக்கு வழங்குவதற்கான உடன்படிக்கை யில் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி ஆகியன அதிகாலை 2 மணியளவில் கையெழுத்திட்டன.

★ *1938*-பொதுமக்களின் இருப்பி டங்கள் மீது வேண்டுமென்றே குண்டுத் தாக்குதல் நடத்தப்படுவது நாடு களின் அணியினால் தடை செய் யப்பட்டது.

★ *1945*-இங்கிலாந்தில் தொடருந்து விபத்தில் 43 பேர் உயிரிழந்தனர்.

★ *1947*-பாகிஸ்தான், யேமன் ஐ.நாவில் இணைந்தன.

★ *1949*-சோவியத்தினரின் தரை வழித் தடையை அடுத்து மேற்கு ஜேர் மனிக்கு 2.3 மில்லியன் தொன் உணவுப் பொருட்கள் வான் வெளிமூலமாக அனுப்பப்ப டுவது முடிவுக்கு வந்தது.

★ *1965*-இந்தோனேசியாவில் இடம் பெற்ற கம்யூனிஸ்ட்டுகளின் புரட் சியை ஜெனரல் சுகார்ட்டோ முறியடித்து சுமார் ஒரு மில்லி யன் கம்யூனிஸ்ட்டுகளைக் கொன்று குவித்தனர்.

★ *1966*-பெக்குவானாலாந்து பிரித் தானியாவிடம் இருந்து விடு தலையை அறிவித்து பொட் சுவானாக் குடியரசு ஆகி யது.

★ *1967*-இலங்கை வானொலி, இல ங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் எனப் பெயர் மாற் றப்பட்டது.

★ *1993*-இந்தியாவின் மத்திய பிரதேசத் தின் லட்டூர் மற்றும் ஒஸ்மனா பாத் நகரங்களில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் ஆயிரக்கண க்கானோர் உயிரிழந்தனர்.

★ *2001*-இந்தியக் காங்கிரசின் மூத்த தலைவர்களின் ஒருவரும் முன் னாள் மத்திய அமைச்சருமான மாதவராவ் சிந்தியா விமான விபத்தில் உயிரிழந்தார்.

★ *2003*-தமிழ் விக்கிப்பீடியா ஆரம் பிக்கப்பட்டது.

★ **2007-இந்திய சதுரங்க வீரர் விஸ் வநாதன் ஆனந்த் மெக் சிகோவில் இடம்பெற்ற உலக சதுரங்கப் போட்டிக ளில் வெற்றி பெற்று புதிய உலக சம்பியன் ஆனார்.**

### இறப்புகள்

★ *2004*-காமினி பொன்சேகா, சிங்களத் திரைப்பட நடிகர் (பி.1936)

★ *2008*-ஜே.பி.ஜெயரத்தினம், சிங்கப் பூர் அரசியல்வாதி (பி.1926)

### விஸ்வநாதன் ஆனந்த்



விஸ்வநாதன் ஆனந்த் இந்திய சதுரங்க (செஸ்) கிராண்ட் மாஸ்டர் மற்றும் தற்போதைய உலக சதுரங்க வெற்றி வீரரும் ஆவார்.

#### சதுரங்கமும் ஆனந்தும்

இந்திய சதுரங்க விளையாட்டில் விஸ்வநாதன் ஆனந்த் குறிப்பிடத்தக்கவர். 14 வயதில் 1983 இல் இந்திய சதுரங்க சம்பியனாக ஆக 9/9 புள்ளிகள் பெற்றார். 15 வயதில் 1984 இல் அனைத்துலக மாஸ்டர் விருதினைப் பெற்றார். 16 வயதில் தேசிய வெற்றி வீரராக மேலும் இரு தடவை இந்த விருதைப் பெற்றார். இவர் ஆட்டங்களை வேகமாக ஆடி மின்னல் பையன் (lightning kid- மின்னல் வேகக் குழந்தை) என்ற பட்டப் பெயரையும் பெற்றார். உலக இளநிலை வாகையாளர் (1987-இல்) என்ற பெருமையை அடைந்த முதல் இந்தியரும் ஆனந்தே.

#### விருதுகள்

அர்ஜுனா விருது-1985, தேசியக் குடிமகனுக்கான விருது, பத்மஸ்ரீ விருது-(1987), ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது (1991-1992), பிரித்தானிய சதுரங்க கூட்டமைப்பின் Book of the year விருது 1998.,பத்மபூஷண் (2000), சதுரங்க ஒஸ்கார்- (1997,1998,2003, 2004, 2007, 2008),பதும விபூசன்- 2007.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் தேர்தல்..? பொருந்தாத நியாயங்கள்..!

## அரசு பின்னோக்கி நகரத்தொடங்கியுள்ளதா?

"பல்வேறுதரப்பினரும் கோருகின்றனர் என்பதற்காக, வடக்கு மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்திவிட முடியாது. வடக்கில் முதலில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான சூழல் உருவாக வேண்டியது அவசியம். அதற்கான சூழலை 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்குள் அரசாங்கம் ஏற்படுத்திவிடும்.

அதன் பின்னர் தேர்தல் ஆணையாளர் வடக்கில் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பார்" என்று கூறியிருந்தார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச.

வடக்கின் நிர்வாகம் இவரது கண்காணிப்பில்தான் நடந்துவருகிறது. அவரது இந்தக் கருத்து, வடக்கில் தேர்தல் நடத்துவதற்கான சூழல் இன்னமும் உருவாகவில்லை என்ற அரசாங்கத்தின் கருத்தாகவே பார்க்கப்படுகிறது.

வடக்கில் தேர்தலை நடத்துவதற் கான சூழல் என்பது என்ன என்ற கேள்வி இத்தகைய தருணத்தில் எழுகிறது.

ஏனென்றால், வடக்கில் இன்னமும் மீள்குடியமர்வு முடியவில்லை. என்பதையே, வடக்கு மாகாண சபைத் தேர்தல் தாமதிக்கப்படுவதற்குக் காரணமாக முன்னர் அரசாங்கம் கூறி வந்தது.

ஆனால், கடந்த 24 ஆம் திகதியுடன் மெனிக்பாம் இடம் பெயர்ந்தோர் முகாம் மூடப்பட்டுவிட்டது. அத்துடன் இடம் பெயர்ந்தோர் பிரச்சினையில் இருந்து விடுபட்ட நாடாக இலங்கை அறிவிக்கப்பட்டும் விட்டது.

இத்தகைய சூழலில் மீள்குடியமர்வைக் காரணம் காட்டி, இனிமேல் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலைப் பிற்போட முடியாத நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

இத்தகைய நிலையில் வடக்கு மாகாணசபைத் தேர்தலை இழுத்தடிப்பதற்கு, அரசாங்கம் புதிய காரணத்தை தேடிப்பிடிக்க வேண்டும்.

இனிமேல் அரசாங்கம் என்ன காரணத்தை முன்வைக்கப்போகிறது என்று ஆர்வத்துடன் பார்த்திருந்த போதுதான் அமைச்சர் பசில் ராஜபக்ச யார் என்ன சொன்னாலும் இப்போதைக்குத் தேர்தலை நடத்தமுடியாது அதற்கான சூழல் அங்கு உருவாகவில்லை எனக் கூறியுள்ளார்.

அவ்வாறாயின், வடக்கை புலிகளின் பிடியில் இருந்து மீட்டு, அங்கு இயல்புநிலையை ஏற்படுத்தி விட்டதாகவும், மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதாகவும் அரசாங்கம் கூறுவது பொய்யா என்ற கேள்வி எழுகிறது.

வடக்கில் உள்ள நிலைமை குறித்த அமைச்சர் பசில் ராஜபக்சவின் கருத்து அரசாங்கத்தின் முன்னைய உரிமை கோரல்களையெல்லாம் கேள்விக்குட்படுத்துவதாக உள்ளது.

வடக்கில் தேர்தலை நடத்துவதற்கான சூழல் இல்லை என்ற அவரது கருத்தின் சரியான அர்த்தம் என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது.

தேர்தலை நடத்துவதற்கான ஜனநாயகச் சூழல் அங்கு இல்லையா? தேர்தலில் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய நிலை அங்கு இல்லையா? தேர்தலில் வாக்களிக்கின்ற மனோநிலை அங்குள்ள மக்களுக்கு இல்லையா? அல்லது இவை தவிர்ந்த வேறேதும் காரணம் உள்ளதா? இப்படி நீள்கிறது கேள்விகள்.

இவற்றில் எந்தக் காரணத்தை அரசாங்கம் தனது பக்க நியாயமாக முன்வைத்தாலும், அது போருக்குப் பிந்திய, மீள்கட்டுமானம், புனர்வாழ்வு, நல்லிணக்கம் உள்ளிட்ட அனைத்து முயற்சிகளையும் கேள்விக்குட்படுத்திவிடும்.

அது இந்த மூன்று ஆண்டுகளில், அரசாங்கம் மேற்கொண்ட அத்தனை நடவடிக்கைகளையும் மலினப்படுத்திவிடும்.

வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதில்லை என்பதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது.

அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்திற்குள் தேர்தலை நடத்தலாம் என்பதே அரசாங்கத்தின் இலக்கு. இதற்கான உண்மைக் காரணம், வடக்கில் அரசசார்பு நிலை ஒன்றை உருவாக்கிவிட்டே தேர்தலை நடத்தவேண்டும் என்பதேயானகும்.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கையில் வடக்குமாகாண சபையின் அதிகாரம் கிடைத்துவிடக் கூடாது என்பதற்காக, அரச ஆதரவுத் தளமொன்றை கட்டியெழுப்புவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

கிழக்கு மாகாணசபை நிர்வாகம் எதிர்க்கட்சிகளின் கைக்குச் சென்று விடக்கூடாது என்பதற்காக, அரசாங்கம் எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டது.

அதைப்போலத்தான், வடக்கிலும் தமது அதிகாரத்தை நிலைத்திருக்க வைக்க வேண்டும் என்பதற்காக எதையும் செய்யும் நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

அரசாங்கம் தனது நலனை முன்னிறுத்தியே வடக்கு மாகாணசபைக்கான தேர்தலை பிற்போடுகிறது. இது ஒன்றும் எவருக்கும் புரியாத இரகசியமில்லை.

வடக்கு மாகாணசபையின் அதிகாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றினால், அது தமிழர்களின் உரிமைக்கான குரலை இன்னும் உயர்த்திவிடும்.

மாகாண அதிகாரங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கண்டிப்பாக மத்திய அரசுடன் ஒரு இழுபறி யுத்தம் உருவாகும். அத்தகைய நிலை ஏற்படுதை அரசாங்கம் இப்போதைக்கு விரும்பவில்லை.

அதேவேளை இதுவரை தேர்தலைப் பிற்போட்டுவந்த அரசாங்கத்துக்கு, காரணம் சொல்வதற்கு மீள்குடியமர்வு ஒரு வசதியாக இருந்தது.

ஆனால், இப்போது மீள்குடியமர்வு முற்றுப்பெற்றுவிட்டதாக, அறிவிக்கப்பட்ட நிலையில்கூட இன்னமும் தேர்தலை நடத்துவதற்கான சூழல் உருவாகவில்லை என்று அமைச்சர் பசில் ராஜபக்ச கூறியுள்ளது விந்தையானது.

இது அரசாங்கம் இன்னமும் வடக்கை இராணுவ மயப்படுத்தி வைத்துள்ளது, இயல்புவாழ்வு மீளத் திரும்பவில்லை, ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்ட நிலை யிலேயே வடக்கிலுள்ள மக்கள் வாழ்கிறார்கள் என்ற கருத்தையே வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அதேவேளை போர்முடிந்த பின்னர், இதுவரை நான்கு தேர்தல் களை வடக்கும் மாகாணம் சந்தித் துள்ளது. முதலில் யாழ்.மாநகர சபைக்கும், வவுனியா நகரசபைக்குமான தேர்தல் நடத்தப்பட்டது. அதன்பின்னர், ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது. அதையடுத்து நாடாளுமன்றத் தேர்தலும் உள்ளூராட்சித் தேர்தலும் நடத்தப்பட்டன.

இவற்றையெல்லாம் நடத்திய போது, வடக்கில் தேர்தலை நடத்துவதற்கான சூழல் இல்லையென்று அரசாங்கத்துக்குத் தெரியாமல் போனது எப்படி?

அவ்வாறாயின் இந்த நான்கு தேர்தல்களின் மூலமும் வெளிப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் ஜனநாயகத் தீர்ப்பு தவறானது என்று அரசாங்கம் சொல்ல வருகிறதா?

போர்முடிந்து மூன்று ஆண்டுகள் முழுதாக நிறைவடைந்துள்ள நிலையிற்கூட வடக்கில் தேர்தலை நடத்துவதற்கான சூழல் வரவில்லையென்று அரசாங்கம் கூறும் நியாயத்தை ஏற்கின்ற நிலையில் சர்வதேச சமூகம் இல்லை.

இந்தியாவும் அமெரிக்காவும் இதைப் பல முறை வலியுறுத்தி விட்டன. ஆனால், அரசாங்கமோ அதையெல்லாம் கண்டு கொள்ளும் நிலையில் இல்லை.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் என்பது இனிவரும் நாட்களில் அரசின் மீதான கடுமையான அழுத்தமாக இறங்கக் கூடும். காரணம் மீள்குடியமர்வு முற்றுப் பெற்றுவிட்டதான அறிவிப்புத்தான்.

உள்நாட்டில் அரசாங்கம் கூறுகின்ற நியாயங்கள் பெரிதாகக் கணக்கில் எடுக்கப்படாது போனாலும் சர்வதேச சமூகம் முன்னுக்குப் பின் முரணான அறிவிப்புகளை ஒருபோதும் இலேசான விடயமாக எடுத்துக்கொள்ளாது.

கிழக்கு மாகாண நிர்வாகத்தில் தமிழர்கள் முற்றாக ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் ஜனநாயக ரீதியாக தமக்கென ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்த முடியாமல் இருப்பது தமிழரைப் பொறுத்தவரை அவர்களைப் பெரிதும் ஏமாற்றத்துக் குள்ளாக்கும்.

தமக்கு எதிரான போக்கில் இருந்து அரசாங்கம் மாறிவிடவில்லை என்ற கருத்து அவர்களிடத்தில் உருவாகும். அது சர்வதேச அளவில் எதிரொலிக்கும். அரசாங்கத்துக்கு இது ஒன்றும் தெரியாத விடயமாக இருக்க முடியாது.

இதுபோருக்குப் பிந்தைய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் இருந்து அரசாங்கம் பின்னோக்கி நகரத் தொடங்கியுள்ளதா என்ற கேள்வியை ஏற்படுத்தியுள்ளது.


இந்தப்போக்கு போர் முடிவுக்கு வந்தபின்னர் இனமுரண்பாடுகள் களையப்படுவதற்குப் பதிலாக அது இன்னமும் கூர்மைப்படுத்தப்படுவதற்கே வழிவகுக்கும்.

கே.சஞ்சயன்



மூடப்பட்டுவிட்ட மெனிக்பாம் நலன்புரி முகாம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

50





விஜயபாகு மன்னனின் அரண்மனை சிதைவுகள்



# விஜயபாகு மன்னன்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

### விஜயபாகு மன்னன்
### உருகுணையை ஒன்றுபடுத்தல்

சோழராட்சி இலங்கையில் நிலை பெற்றிருந்த காலத்தில் அவர்களின் ஆதிக்கத்திலிருந்து இலங்கையை விடுவிப்பதற்கான போராட்டங்கள் இங்கு நடைபெற்றுள்ளன. அவற்றில் வெற்றிபெற்று இலங்கை முழுமைக்கும் மாமன்னனாக முடிபுனைந்து கொண்டவன் விஜயபாகு என்பவனாவான். (கி.பி.1059-கி.பி.1114) விடுதலை பெறுவதற்கு முதல் பல்வேறு முயற்சிகள் நிகழ்ந்துள்ளன. லோகேஸ்வரன் என்றொரு சிங்கள இராணுவத் தலைவன், உருகுணையை ஒன்றாக்கி, சோழருடைய ஆதிக்கத்தினை முறியடிக்கும் நோக்குடன், உருகுணையைத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தான். கஜராகமத்தில் (கதிர்காமம்) தனது தலைமைப்பீடத்தை நிறுவிக் கொண்டான். மன்னன் காசியப்பனுக்கு மானா என்றொரு மகன் இருந்தான். அவன் ஆதிபாதாவாவான் (யுவராஜா). அவனுடைய மூத்த சகோதரனான மானவர்மனுக்கு ஒரு கண் குருடு. அதனால் அவனது சகோதரனான மானா, அனுராதபுரத்தின் மன்னனாக மானவர்மன் என்ற நாமத்தோடு முடி சூடிக்கொண்டான்.


மன்னன் மகிந்தனுக்கு தேவலா, லோகிதா என்று இரண்டு மருமக்கள் இருந்தனர். அவர்க்ளில் லோகிதா காசியப்பனை மணந்து மொகலானன், லோகா என்ற பெயருடைய இரு புதல்வர்களுக்குத் தாயானாள். மூத்தவன் மொகலானன், சமய நம்பிக்கையும் சமுகசேவை நாட்டமுடையவனாக விளங்கினான். அதனால் அவன் "மகாபிரபு" என அழைக்கப்பட்டான். உருகுணையைத் தன் வதிவிடமாகக் கொண்டிருந்தான். அவன் தத்தோபதீசன் வழிவந்த போதி இளவரசனின் மகளான லோகாவை மணந்து கொண்டான். அவர்களுக்குக் கீர்த்தி, மித்தா, மகிந்தன், இறக்சித்தன் என நான்கு புதல்வர்கள் பிறந்தனர். மூத்தவனான கீர்த்தி, தனது பதின்மூன்றாவது வயதிலேயே மிகச்சிறந்த வாள்வீரனாக விளங்கினான். "இலங்கையை இந்த எதிரிகளிடமிருந்து எவ்வாறு காப்பேன்" என அடிக்கடி கூறிக்கொள் வான் என்கிறது சூளவம்சம்.

அதேவேளை உருகுணையை ஆட்சி புரிந்த லோகேஸ்வரனுக்கு எதிராக புத்தராஜா என்ற இளவரசன் கிளர்ச்சி செய்தான். அதில் தோல்விகண்டு மலையதேசத்திற்கு ஓடிப்போய் அங்கு தனக்கென ஓர் அரசினை நிறுவிக் கொண்டான். கங்கா என்ற சோதிடன், புத்தராஜாவிடம் சென்று இளவரசன் கீர்த்தியைப் பற்றி "வருங்காலத்தில் இளவரசன் கீர்த்தி மிகப்புகழ் பெறுவான். இந்திய ஆதிக்கத்தை அகற்றி ஒரு குடையின்கீழ் இலங்கையைக் கொண்டு வருவான்" என்றுரைத்தான். இதனைக் கேட்ட புத்தராஜா "இளவரசனுக்கு உதவவேண்டும்" என முடிவு செய்து, தூதுவரை அவனிடமனுப்பி வைத்தான். இதனைத் தூதுவர் மூலமறிந்த கீர்த்தி, இதில் ஏதாவது சூழ்ச்சியிருக்கலாமெனக் கருதி தன் பெற்றோருக்கும் தெரியாமல் தான் இருந்த வீட்டையும் கிராமத்தையும் துறந்து தனது ஆயுதங்களுடன் இரகசியமாகத் தலைமறைவாகி சாரிவாக்கப்பிட்டி எனும் கிராமத்தில் வாழலானான். அங்கு தன்னாட்களுடன் சேர்ந்து, மன்னன் லோகேஸ்வரனுக்குச் சொந்தமான போதிவெல என்ற கிராமத்தைத் தனதாக்கிக் கொண்டான். அதனால் கோபமுற்ற மன்னன் லோகேஸ்வரன் தனது படையை அனுப்பிவைத்தான். அக்கிராமத்தை முற்றுகையிட்டு சேனையை, கீர்த்தியும் அவனது வீரர்களும் தோற்கடித்தனர். அவன் பின் குண்டசாலைப் பிராந்தியத்தையும் கைப்பற்றி மலையதேசம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டான். லோகேஸ்வரன் இரு தடவைகளுக்கு மேல் படைகளை அனுப்பிவைத்ததும், கீர்த்தியை வெற்றிகொள்ள முடியவில்லை என்கிறது சூளவம்சம். கீர்த்தி தன் இளமைக் காலத்தில் புத்தராஜா என்ற பிராந்திய மன்னனின் பாதுகாப்பில் வாழ்ந்தான் என அறியப்படுகின்றது.

புத்தராஜாவின் பின்னர் உருகுணையின் அரசனாக காசியப்பன் (கேசதாது) முடிபுனைந்து கொண்டான். இதனைக் கேள்விப்பட்ட சோழமன்னன் புலத்தி நகரிலிருந்து ஒரு படையை உருகுணைக்கு அனுப்பிவைத்தான். கஜரகமத்தில் சண்டை நிகழ்ந்தது. மன்னன் கேசதாது சோழர் படையை சிதறடித்து மீண்டான். இவற்றினைக் கேள்விப்பட்ட கீர்த்தி மலையகத்திலிருந்து பெரும்படையுடன் வந்து கேசதாதுவின் சேனையை வென்று, உருகுணையைத் தனதாக்கிக் கொண்டு [illegible] அரசனாகச் சிம்மாசனம் ஏறினான். ஆறுமாதமளவில்தான் காசியப்பன் கேசதாது உருகுணையை ஆளமுடிந்தது. அதன்பின் தனது பதினாறாம் வயதில் கீர்த்தி, விஜயபாகு என்ற நாமத்தோடு அரச கட்டிலேறினான்.

### விஜயபாகு

கீர்த்தி இளவரசன் விஜயபாகு என்ற பெயருடன் உருகுணையின் அரசனாகினான். விஜயபாகு மிகுந்த அறிவுத்திறனுடையவன். பிரமுகர்களை அரசபதவிகளில் ஏற்றவாறு நியமித்து, நாடெங்கும் பறையறைந்து தன் ஆட்சியை வெளிப்படுத்தினான். சோழருக்கு எதிரான யுத்தத்திற்காக நாற்படைகளையும் பலப்படுத்துவதில் ஈடுபட்டான். இதனைக் கேள்விப்பட்ட சோழமன்னன், புலத்திநகரிலிருந்து தன் படையை சேனாதிபதியொருவனின் தலைமையில் உருகுணைக்கு அனுப்பி வைத்தான். அது போரிடுவதற்குத் தகுந்த தருணமல்ல என உணர்ந்த விஜயபாகு, கஜரகமத்தினை (கதிர்காமம்) விட்டு மலைநாட்டிற்கு தன் படையுடன் வெளியேறினான். எதிர்ப்பின்றி கதிர்காமத்திற்குள் புகுந்த சோழர்படை, அங்கேயுள்ள கோட்டையையும் கைப்பற்றி, அங்கு பல அழிவுகளையும் ஏற்படுத்தியபின், புலத்திநகர் திரும்பியது. அதன்பின்னர் மலைப் பிரதேசத்திலிருந்து உருகுணைக்குத் திருப்பிவந்த விஜயபாகு அங்கு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டான்.



விஜயபாகு மன்னனின் அரண்மனை சிதைவு

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

235

## கரடி வால் அறுந்த கதை!



பழங்காலத்தில் இமயமலைச் சாரலில் பனி மிகவும் கடுமையாக இருந்தது. அங்கே சில மீனவர்கள் மீன்களைப் பிடித்துக் கூடையில் வைத்திருந்தார்கள். அதனைப் பார்த்த ஒரு குள்ளநரி சில மீன்களைத் திருடிக் கொண்டு ஓடியது. அதன் எதிரே ஒரு கரடி வந்தது.

குள்ளநரி மீனோடு வருவதைப் பார்த்து நரியாரே! உமக்கு இன்று நல்லவேட்டைபோல் தெரிகிறதே! இவ்வளவு நல்லமீன்கள் உமக்கு எங்கிருந்து கிடைத்தன? என்று கரடி கேட்டது.

ஒரு இடத்தில் அருமையான மீன்கள் இருக்கின்றன. இன்றிரவு என்னோடு வந்தால் அவைகளை எப்படிப்பிடிப்பது என்பதை உமக்குக் காட்டுவேன் என்று குள்ளநரி சொன்னது.

சரி நண்பரே! எனது தூண்டிலையும் முள்ளையும் எடுத்துவரட்டுமா? என்று கரடி கேட்டது.

தூண்டில் முள் தேவையில்லை. நான் எப்போதும் எனது வாலினால் தான் மீன்பிடிப்பது வழக்கம். உமக்கு நீளமான வால் இருப்பதால் நீர் என்னைவிட நன்றாக மீன் பிடிக்கலாம் என்று நரி சொன்னது.

இரவு வந்தது. குள்ளநரி இமய மலை அடிவாரத்திற்கு கரடியை அழைத்துச் சென்றது. அங்கே ஒரு சிறிய ஓடை இருந்தது. அதில் தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்து போயிருந்தது.

பனிக்கட்டியில் ஓரிடத்தில் பிளவு இருந்தது. இங்கே உட்கார்ந்து உமது வாலைப் பனிக்கட்டியின் இடைவெளியில் நுழைக்க வைக்கவேண்டும். சிறிது நேரம் அவ்வாறு வைத்திருந்தால் மீன்கள் உமது வாலைப்பிடித்துக்கொள்ளும். பிறகு ஒரே மூச்சில் வேகமாக வாலை மேலே இழுக்கவேண்டும் என்று குள்ளநரி சூழ்ச்சியுடன் கூறியது.

கரடி குள்ளநரி கூறியதை முழுமையாக நம்பிவிட்டது. அது கூறியபடியே பனிக்கட்டியின் இடைவெளியில் வாலை நுழைத்தது. நெடுநேரம் அசையாமல் உட்கார்ந்திருந்தது. அதனால் குளிரைத் தாங்கமுடியவில்லை. மெல்ல உடலை அசைத்துப்பார்த்தது. ஆனால் அசைக்கவே முடியவில்லை. பனிக்கட்டியோடு வால் உறைந்து போய்விட்டது.

அப்போது நரி இதற்குள் வாலை எடுத்துவிடக்கூடாது. இன்னும் கொஞ்சம் மீன்கள் சேரும்வரையில் பொறுமையுடன் இருக்கவேண்டும். நீர்தான் மிகவும் வலிமை வாய்ந்தவராயிற்றே! இன்னும் கொஞ்சநேரம் பொறுத்துக் கொள்ளக்கூடாதா? என்று நரி சொல்லியது.

கரடி விடியும் வரையில் பொறுமையுடன் காத்திருந்தது. ஆற்றங்கரையில் நாய்கள் குரைக்கும் ஓசை கேட்டது. கரடி துள்ளிக் குதிக்க ஆரம்பித்தது. தன்னால் முடிந்த மட்டும் வாலை இழுத்துப் பார்த்தது. அது வெளியே வரவேயில்லை. பனிக்கட்டியில் நன்றாக ஒட்டிக்கொண்டது.

மறுபடியும் மூச்சைப் பிடித்துக் கொண்டு ஒரே இழுப்பாக இழுத்தது. அதன் வால் படீரென்று அறுந்து போனது. குள்ளநரிக்குச் சிரிப்பைத் தாங்க முடியவில்லை. அது சிரித்துக் கொண்டே ஓடிப்போய் விட்டது. பெரிய கரடிக்கு வால் போனதிலிருந்து அதற்குப் பிறந்த குட்டிகளுக்கெல்லாம் வால் குட்டையாகவே ஆகிவிட்டது.


## நினைத்தாலே போதும்!

ஒரு சிற்றூரில் மிகவும் புகழ் பெற்ற சோதிடர் ஒருவர் இருந்தார். அவர் கணிப்பு தவறவே தவறாது. எதையும் துல்லியமாகக் கூறும் ஆற்றல் அவருக்கு இருந்தது. ஒருநாள் மாலைநேரம் ஒரு ஏழை விவசாயி ஜாதகம் பார்க்க சோதிடரிடம் வந்தார். ஜாதகத்தை சோதிடரிடம் கொடுத்தார்.

அதனை வாங்கிப் பார்த்த சோதிடரின் முகம் மாறியது. அந்த விவசாயிக்கு அன்று இரவு எட்டு மணிக்கு மரணம் நேரக்கூடிய கண்டம் இருந்தது. அதனை நேரடியாகச் சொல்லச் சோதிடருக்கு விருப்பமில்லை. அதனால் ஐயா! உங்கள் ஜாதகத்தில் கணக்கை மிகவும் துல்லியமாகப் பார்க்க வேண்டியுள்ளது. நேரமாகி விட்டது. நாளை காலையில் வந்தால் விளக்கமாகச் சொல்கிறேன் என்று கூறி அனுப்பினார்.


சோதிடர் கூறியபடியே காலையில் வந்து தெளிவாகப் பார்த்துக் கொள்ளலாம் என விவசாயி வீட்டிற்குப் புறப்பட்டார். விவசாயி சென்றதும் சோதிடர் தன் மனைவியிடம் இப்போது இங்கே வந்து விட்டுப் போகிற விவசாயியின் ஆயுள் இன்றிரவு எட்டு மணிக்கு முடியப்போகிறது. அதனை அவரிடம் எப்படிக் கூறுவது? அதனால் நாளை வந்து பார்க்கும் படி கூறி விட்டேன். அவர் உயிரோடு இருந்தால்தானே என்னை வந்து பார்க்க முடியும்? என்று கூறினார்.

அங்கிருந்து புறப்பட்ட விவசாயி தனது கிராமத்தை நோக்கி நடந்தார். மாலை மயங்கி இருள்சூழ ஆரம்பித்தது. மழையும் பெய்யத் தொடங்கியது.



காட்டுவழியில் சென்று கொண்டிருந்த விவசாயி பாழடைந்த சிவன் கோவிலைப் பார்த்தார். விரைந்து சென்று அந்தக் கோயிலின் முன்னால் இருந்த மண்டபத்தில் ஒதுங்கினார். கோயில் பாழடைந்து கிடப்பதைப் பார்த்து மிகவும் மனம் வருந்தினார். கோயிலின் கர்ப்பக்கிரகமும் மண்டபமும் இந்த அளவுக்கு கேட்பாரற்று, கவனிப்பாரின்றிக் கிடக்கிறதே! சுவரெல்லாம் விரிசல்பட்டுக் கிடக்கிறதே! என்னிடம் போதுமான வசதியிருந்தால் இந்தக் கோவிலைப் புதுப்பிக்கும் பணியை நானே செய்து விடுவேன் என்று எண்ணினார்.

அதோடு கோயில் எப்படி அமைந்தால் சிறப்பு என்று தன் மனதிற்குள்ளேயே சிவன் கோயிலைப் புதுப்பிப்பதாக மானசீகமாகக் கற்பனை செய்யத் தொடங்கினார். கோபுரம், இராஜகோபுரம், உட்பிரகாரங்கள், மண்டபங்கள் ஆகியவற்றை மனதில் கட்ட ஆரம்பித்தார். அதனை முடித்த உடனேயே கும்பாபிஷேகத்திற்கு வேதியர் புடைசூழத் திருக்குடம் பவனி வருவதாகக் கற்பனை செய்தார். பாழடைந்த கோயிலில் நின்றபடியே மானசீகமாகக் கும்பாபிஷேகத்தை விமரிசையாக நடத்தி கர்ப்பக்கிரகத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை



வணங்கினார்.

இவ்வாறு சிந்தனையில் தன்னை மறந்து ஈடுபட்டிருந்த விவசாயி தாம் நின்றுகொண்டிருந்த மண்டபத்தை மேல் நோக்கிப்பார்த்தார். அவர் தலைக்கு நேரே ஒரு கருநாகம் படமெடுத்துக் கொண்டிருந்தது. கொத்துவதற்குத் தயாராக இருந்ததைக் கண்ட அவர் அலறியடித்துக்கொண்டு மண்டபத்தை விட்டு வெளியே ஓடி வந்துவிட்டார். அவர் வெளியேறிய உடனேயே மண்டபம் தடதடவென்று இடிந்து தரை மட்டமானது. அப்போது சரியாக மணி எட்டு. மழையும் ஓய்ந்தது. விவசாயி தன் வீடு வந்து சேர்ந்தார்.

மறுநாள் சோதிடர் கூறியபடி விவசாயி அவரது இல்லத்திற்குச் சென்றார். அவரைக்கண்ட சோதிடர் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனார். தமது சோதிடக் கணக்கில்தான் தவறு ஏற்பட்டு விட்டதோ என்று திகைத்தார். சோதிட நூல்களை எடுத்து மிகவும் துல்லியமாக ஆய்வு செய்தார். கணக்கில் பிசகே இல்லை.

இப்படிப்பட்ட கண்டத்திலிருந்து ஒருவன் தப்பவேண்டுமானால் அவனுக்கு ஒரு சிவன் கோயிலைக் கட்டிமுடித்துக் கும்பாபிஷேகம் செய்த புண்ணியம் இருக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. விவசாயியிடம் விசாரித்தார். அவரும் மானசீகமாக கோயில் கட்டிய விபரத்தை விளக்கமாகக் கூறினார். வறியவராயினும் தூய்மையான எண்ணத்தோடு சிவபெருமானுக்கு சேவை செய்ய மனத்தால் எண்ணியதால் விவசாயி விதியையே முறியடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### இமயம் தொட...

சரித்திரங்களை புரட்டுவதை விடு
சரித்திரம் படைக்க முனை
இழிவுகளுக்கு
முகம் கொடுத்து
இமயம் தொட முயல்
சரிவுகளுக்கு வழிவிடு
சாளரக் காற்றுக்களை
சுதந்திர காற்றாக்க போராடு
அழிவின் முடிவுதான் ஆரம்பம்

மாவை நா.கஜேந்திரன்

### உன்னால்

உன் முகத்தில் உதிரும் புன்னகை
என்றும் என் இதயத்தில்
உன்னால் உண்டான என் காதல்
வைரஸ் மீண்டும் மீண்டும்
உன்னைப் பார்க்காமல் இருக்க மறுக்கிறது
உன் பெயரை தினமும் உச்சரிப்பதனால்
என்னை வெறுக்கின்றேன்
ஏன் இத்தனை மாற்றங்கள்
சோகங்கள் துயரங்கள் மாறி மாறி....
ஏன் இந்த பிரிவு!
வாழ்க்கையையே பிடிக்கவில்லை
ஆனாலும் உன்னை விட முடியவில்லை
தினம் தினம் தடுமாறும் மனதில்
ஏனோ எல்லாமமே உன் நினைவுதான்
எல்லாம் உன்னால்!

எஸ்.ஜிந்துஜா
கோண்டாவில்

### அவரவர் பார்வையில்

### வாழ்க்கை

வியர்வையை இழந்து -நீ
வெற்றியை வாங்கு
ஆசையை இழந்து - நீ
அமைதியை வாங்கு ஆனால்
தன்மானத்தை இழந்து
வாழ்க்கையை வாங்காதே

ச.நிருதீபன்
யா/குளமங்கால் றோ.க

### அத்திவார அறிவு

இது வெறும் தாகத்
தவிப்பதல்ல நம் இன
அத்திவாரத்தின் புத்திக்கூர்மை

இ.தர்மா
பருத்தித்துறை

### தீர்க்க தரிசனம்

விதைப்புக்கு ஏற்றது
இனி அறுவடை நடந்தே-தீரும்
விதை தினையாகவும்
வினை வினையாகவும்
ரசித்தவர்களின் எதிரிலேயே -அவை
சரித்திரங்களாய் எழுதப்பட்டிருக்கும்

அ.விஜயன்
விசுவமடு

### கண்ணீர்ப் பூக்கள்

நேற்றுவரை எந்தப் பூக்களும் அவளை
ஸ்பரிக்கவில்லை ஆனால்...
எல்லாப் பூக்களுக்கும் அவள்
முத்தமிட்டிருக்கின்றாள்
கவிதைப் பூக்களை அவளால் பறிக்க
முடிந்ததும் அவள் தோட்டத்தில்
மலர்வதென்னவோ கண்ணீர்ப்பூக்கள் தான்
அவளுக்குத் தெரிந்ததெல்லாம்
அன்பு மட்டும்தான் ஆனால்...
அவளுக்குத் தெரிந்தவர்களுக்கெல்லாம்
தெரியாததும் அந்த அன்பு மட்டும் தான்
நேற்றுவரை நிலைத்திருந்த சோகங்களால்--
அவள் நிம்மதி தொலைந்தபோது --கூடவே
தானும் தொலைந்து போனாள் --அவள்
இன்று முதல்...
நேற்று பூத்து இன்றுவாடும் மலருமல்ல
என்று பூத்தாலும் இன்று பூத்தபூவாக
இருக்கும் காகிதப் பூவும் என்றுமே
இடைவிடாத கண்ணீர்ப் பூக்களாய்
வாழப் போகின்றாள் --அவள்

பா.மதனபாரதி
அல்வாய்

### பரம பதம்

சோதனைகள் கண்டு நீ வருந்தாதே
சாதனைகளின் மூலதனமே
சோதனை தான்
வேதனைகள் எமது சாபமில்லை
அவை அனைத்தும் போதனைகள்
ஏசுவோர் ஏசட்டும் ஏணியில் ஏறு
ஏசுவோர் நாளை
உன்னைப் போற்றுவர்
உன் பரம்பதத்தில் பாம்பும் நீயே
ஏணியும் நீயே

அ.அஜந்தன்
கந்தர்மடம்



## மௌனத்தின் தேடல் - 123

### தவிப்பு

பாலகனாய்ப் பிரிந்த என்
மகன் வந்திருக்கின்றான்
என்று சொல்லி கேட்டு ஓடினேன்
அங்கே என்மகள் கள்வன்
என்ற பெயரில்
மக்கள் மத்தியில்
பிடிபட்டு நிற்கின்றான்
அக்காட்சியைக் கண்டு
நெஞ்சம் பதறிப்போனேன்!

க.கமலா
திருநெல்வேலி

### ஏற்கின்றாயா...

கொடுமை அரங்கேறும் காலமதில்
பொறுமை காப்பது....
வெறுமையைத்தான் விதைக்கு
மென்பதை
தெரிந்துமேன் பொறுமை இழந்தாய்
அநியாயம் கண்டு கொதிப்பது
மனித இயல்புதான் மறுக்கவில்லை
அதற்காய் நாமெல்லாம்
அரக்கனானால்
சத்தியம் தோற்பதனை ஏற்கின்றாயா

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

### தேவைதானா?

மானிடராய் பிறத்தல்
அரிதென்றார் ஔவை மூதாட்டி
எனதென்றும் உனதென்றும்
இனமென்றும் மதமென்றும்
இங்கு நடப்பதைப்போல்
எத்தனை எத்தனையோ போராட்டம்
எம் வாழ்வில் தினம் தினம் இங்கு
செத்து பிழைக்கும் இப் பிறவி
எமக்குத் தேவைதானா?

லீலா.சிவவடிவேல்
இணுவில் மேற்கு

### எண்ணங்கள்

நான் உயர்ந்தவன்
நீ தாழ்ந்தவன்
நான் படித்தவன்
நீ படிக்காதவன்
நான் பணக்காரன்
நீ ஏழை என்ற எண்ணங்கள்
மனிதனுள் மறையும் வரை
மனிதச் சண்டை ஓயாது.

திருமதி அ.மேரிஅல்போன்சா
குருநகர்

### சாபம்

நீ பிறந்த போது
பெருமை கொண்டேன்
வாழ்ந்த போது மகிழ்ந்திருந்தேன்
தோள் மேல் தூக்கி வளர்த்த நீ
எனைத் தூக்கி எறிந்துவிட்டாயே
பார்மேல் நானிடும் சாபம்
உனை சும்மா விடாதுடா

கேதீஸ்
கலட்டி

### தயவுடன்

பெரியவர் சிறியவர்
எனும் பேதமின்றி
வெறித்தனம் நடக்கிறதோ
முதியவர் மூத்தவரல்லவா
புத்தி சொல்வதை
கேட்டுக் கொள் மகனே

ரஞ்சித்
முல்லைத்தீவு

### சண்டை

சமாதானம் மறைந்தது
சண்டைகள் மேலோங்கியது
எங்கும் சண்டை
எதற்கும் சண்டை
பெரியவர் சிறியவர்
பேதமின்றிச் சண்டை
மனிதன் மனிதனை
மனிதனாக நேசிக்கும் வரை
மறைந்து போகாது
மனிதச்சண்டை

அ.அன்ரன்
யாழ்ப்பாணம்

### யார் நீ!

தந்தை வழி உறவுமில்லை
நீ தாய்வழி சொந்தமில்லை
எங்கிருந்தோ வந்தாய்
உன் தந்தை நானென்றாய்
சொத்தைப் பிரி என்றாய்
சொந்தம் எது வென்றாய்
மொய்க்கும் இலையானாய்
எனை மொத்தம் எடுத்துவிட்டு
சந்திசிரிக்கவைத்தாய்
சாதிசனம் வெறுக்கவைத்தாய்
சிரிப்பை மறக்க வைத்தாய்
என் வாழ்வை
சின்னாபின்னம் ஆக்கிவிட்டாய்

இந்திரபுத்திரன்

### விளைவு

பெற்ற தகப்பனை
பிரித்தெறியுமளவிற்கு
சொத்துச் சண்டையா?
உனைப் பெற்றெடுத்து
உலகில் உலாவவிட்டவர்க்கு
நீ செய்யும்
நன்றிக்கடன் இது தானா?
முற்றிப் பழுத்தவர் பாவம்
செய்ய வழியின்றி
நீயோ மல்லுக்கட்டுறாய்
மலையான உன் தந்தை மனம்
உன்னால் மண்ணானதே

இ.உதிஸ்ரன்
கலட்டி

### உண்மையான வீரம்

வீதியில் சண்டை இடுவது
வீரம் இல்லை
பாதியில் தடுக்க வந்திருக்கும்
முதியவரின் மனதில் தான்
வீரம் இருக்கின்றது

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### புறப்பட்டு விட்டது

காலம் மாறி இளைஞர்
கோலங்களும் வேராகித் தம்
பெற்றோர் பெரியோரை மதிக்காது
கட்டுப்பாடின்றிக் கூடிச்
சமூகவிரோதச் செயல்களில்
ஈடுபடும் இவர்களை இன்று
தட்டிக் கேட்க ஒரு கூட்டம்
புறப்பட்டு விட்டது

துரை, தென் மட்டுவில்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் -124



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 05.10.2012 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு பணப்பரிசு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதி தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 2012 இல் யாழ். மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்களுக்கு மக்கள் வங்கியினால் பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இதில்,

பி.அபிராம்-193 (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை),கே. கீர்த்திகன்-191(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை),எல்.ஸ்ரீகீரன்-191 (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), லோ.வைஷ்ணவி 191 (யாழ்.சென் திரேசா மகளிர் கல்லூரி ஆகிய மாணவர்களுக்கே இப் பணப்பரிசில் வழங்கப்படவுள்ளது. இதில் முதலாவது மாணவனுக்கு 25 ஆயிரம் ரூபாவும் ஏனையவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாவும் பணப்பரிசாக வழங்கப்படவுள்ளது. (ந-8)

# புங்குடுதீவு பிரதேசத்தில் ஆதனங்கள் பதிதல்

(புங்குடுதீவு)

முப்பத்தைந்து வருடங்களின் பின்னர் வேலணை பிரதேச சபை வட்டார ரீதியாக ஆதனங்கள் தொடர்பான விபரங்களை திரட்டி வருகின்றது.

புங்குடுதீவு உப-அலுவலக வட்டாரங்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் ஆதனத்திற்குரிய காணி உறுதியின் மூலப் பிரதி அதன் போட்டோ பிரதி, குடும்ப அட்டை மூலப்பிரதி அதன் போட்டோ பிரதி, காணி நில அளவைப் படத்தின் மூலப்பிரதி அதன் போட்டோ பிரதி என்பவற்றைக் காண்பித்து ஒவ்வொரு ஆதனத்துக்குமான தகவல் திரட்டும் படிவத்தைப் பூரணப்படுத்த முழுமையான ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது ஆதன உரித்தை பேணும் படியும் தவிசாளர் சி.சிவராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கமைய கீழ் குறிப்பிடப்பட்ட வட்டார ஆதன உரித்தாளர்கள் பின்வரும் திகதிகளில் இருந்து புங்குடுதீவு- உப அலுவலகப் பிரதேச சபை அலுவலகத்தில் பதிவுகள் மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1ஆம், 2ஆம், 3 ஆம் வட்டாரங்களினைச் சேர்ந்தவர்கள் முதலாம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரையும் 4ஆம், 5ஆம், 6 ஆம் வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் 8 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரையும் 7 ஆம், 8ஆம், 9 ஆம் வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் 15 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரையும் 10 ஆம், 11 ஆம், 12 ஆம் வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் 22 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரையும் பதிவுகளை மேற்கொள்ளலாம். (ஏ)

# விரிவுரையாளர்களின் பேரணி வெற்றியளிக்கவில்லை

## எஸ்.பி.மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சம்பள உயர்வுகோரி கடந்த 5 நாட்களாக நடத்தப்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஆர்ப்பாட்ட பேரணி நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இந்த பேரணியில் விரிவுரையாளர்களை விட மாணவர்களே அதிகமாக இருந்ததாக இலங்கையின் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தாம் மத்தியஸ்தம் வகிக்க தயார் என்று அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்கர்கள் தெரிவித்துள்ள நிலையிலேயே எஸ்.பி. திஸாநாயக்கவின் கருத்து வெளியாகியுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பை வந்தடைந்த பேரணியில் 150 விரிவுரையாளர்களே இருந்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் அவர்களை சுற்றி அதிகளவான அரசியல்வாதிகள் இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேரணியில் சுமார் 5 ஆயிரம் பேரே பங்கேற்றியிருந்தனர். எனவே இதனை வெற்றியான பேரணியென கருதமுடியாது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இதே வேளை பல்கலைக்கழக பேராசிரியர் தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டோரது புகைப் படங்கள் மற்றும் காணொளிகள் சேகரிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக பேராசிரியர்களின் பாத யாத்திரைகளில் கலந்து கொண்ட சகலரினதும் புகைப்படத் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்பு நோக்கில் இவ்வாறு தகவல்கள் திரட்டப்பட்டன. எதிர்காலத்தில் இந்தத் தகவல்கள் பயன்படக்கூடும் என்றார். (ந-2)

# சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மாலக்க சில்வாவால் அச்சுறுத்தல்!

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு மேஜர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் மாலக்க வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் மீண்டும் வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில பொருட்களை வைத்து விட்டு சென்றதாகத் தெரிவித்து சட்டவிரோதமான முறையில் சிறைச்சாலை வைத்தியசாலைக்குள் அவர் பிரவேசித்துள்ளதாகவும் இதன்போது கடமையில் ஈடுபட்டிருந்த சில அதிகாரிகளுக்கு மாலக்க சில்வா அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-2)

# முதியோர் பராமரிப்பு வேலைகளுக்கு இளைஞர்களை அனுப்ப ஏற்பாடு

## வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கை

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளில் முதியோர் பராமரிப்பு வேலைகளுக்கு இலங்கை இளைஞர், யுவதிகளை அதிகளவில் அனுப்புவதற்கு ஏதுவாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முதியோர் பராமரிப்பு தொடர்பான விசேட பாடநெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் இலங்கைத் திறந்த பல்கலைக் கழகமும் இதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

சர்வதேசத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழை இவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் இந்தப் பாடத்திட்டம் அமையவுள்ளது.

வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் முதியோரைப் பாதுகாப்பதற்கான வேலைவாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றன. எனினும் அவர்களை பராமரிப்பது குறித்து சரியான அறிவு இல்லாமையால் இலங்கையிலிருந்து இத்துறைக்கு சரியான ஆட்களை அனுப்ப முடியாதுள்ளது.

முதியோர் பராமரிப்பு வேலைகளுக்காக ஐரோப்பிய நாடுகளில் அதிகளவு கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி விஜித நாணயக்காரவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்கார ஆகியோரும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

நாடளாவிய ரீதியில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 30 பிரதேச மத்திய நிலையங்களிலும் இப் பாடநெறி முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தப் பயிற்சி வகுப்புக்கள் மூன்று மாத பயிற்சி வகுப்புக்களாக அமையும். (ந-2)


MINISTRY OF HIGHER EDUCATION

**UNIVERSITY OF JAFFNA**

**INVITATION FOR BIDS**

**Construcation of Building for the faculty of Management Studies & Commerce, University of Jaffna-Block 'A'**

1. **The Chairman, Standing Cabinet Appointed Procurement Committee (SCAPC)**, on behalf of the **University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for **"Construction of Building for the Faculty of Management Studies & Commerce, University of Jaffna- Block A"** as described below and estimated to cost of **Rs. 146.0 million.**

The construction period is **546 days.**

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade **C4** or above with the Institute for Construction Training and Development (ICTAD), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.

4. Interested bidders may obtain further information from **Deputy Registrar (Capital Works and Planning Unit) University of Jaffna, Thirunelvely, Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.**

Contact numbers are: phone. Tel: 021 221 9201 Fax: 021 221 9201

5. A complete set if Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **Deputy Registrar (Capital Works and Planning Unit) University of Jaffna, Thirunelvely, Jaffna** from 01.10.2012 until 22.10.2012 from **9:00hrs to 15:00 hrs on working days** upon payment of a non refundable fee of Rupees Ten thousand (**Rs.10,000.00**).

6. Sealed Bids shall be delivered in dublicate to reach the **Director (Procurement),Ministry if Higher Education, No.18, Ward Place, Colombo 07** on or before 10.00 hrs on 31.10.2012. Late bids will be rejected. Bids will be opened soon after the closing at the same address in the presence of the bidders's representatives who choose to attend.

7. Bids shall be Valid for a period of 91Days from the date fixed for closing of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by a Bid Security which shall be:
- in the form included in Section 09 in the Bidding document
- In favour of **Vice Chacellor- University of Jaffna**
- for an amount of **Rs. 3.0 million.**
- Valid upto 119 days from the closing date of Bid.
- Issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.

9. Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely, Jaffna at 10.30 am on 12.10.2012.

**Chairman**
**Standing Cabinet Appointed Procurement Committee,**
**Ministry of Higher Education,**
**18, Ward Place,**
**Colombo 07.**

(C-1180)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 பொலிஸாரைக் சுட்டுக்கொன்று 200 கைதிகள் தப்பியோட்டம்

## ஈராக் சிறையில் துணிகரம்

(திக்ரித்)


ஈராக் சிறையில் 15 பொலிஸாரை சுட்டுக் கொன்று விட்டு 200 கைதிகள் தப்பி ஓடியுள்ளனர். ஈராக்கில் உள்ள திக்ரித் நகரில் சிறைச்சாலை உள்ளது. இங்கு 300 இற்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டு இருந்தனர். கைதிகள் பலர் ஒன்று சேர்ந்து சிறை ஆயுத கிடங்கை உடைத்து உள்ளே புகுந்தனர். அங்கிருந்த துப்பாக்கிகளை எடுத்து சிறைக் கரவலுக்கு நின்ற பொலிஸாரை நோக்கி சுட்டனர்.

பொலிஸாரும் திருப்பி சுட்டார்கள். இரு தரப்புக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்தது. ஆனால், குறைந்த அளவே பொலிஸார் அங்கு இருந்தனர். அவர்களால் சமாளிக்க முடியவில்லை.

அங்கிருந்த 15 பொலிஸாரை அவர்கள் சுட்டு கொன்றனர். பொலிஸார் சுட்டதில் 2 கைதிகள் உயிர் இழந்தனர். பின்னர் கைதிகள் 200 பேர் சிறையில் இருந்து தப்பி ஓடிவிட்டனர்.

தப்பியவர்களில் பலர் தீவிரவாதிகள் ஆவர். அவர்களை தேடி வருகிறார்கள். ஈராக்கில் சிறையில் இருந்து கைதிகள் தப்பி ஓடிய சம்பவம் அடிக்கடி நடப்பது குறிப்பிடத்தக்கது. (ந-2)

# போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்கா நிதியுதவி




சிரியாவில் நிலவி வரும் தற்போதைய நிலையிலிருந்து மீண்டும் அம் மக்கள் மறுவாழ்வு பெற மனிதாபிமான அடிப்படையில் சிரியாவுக்கு அமெரிக்கா 45 மில்லியன் டொலர் நிதியுதவி அளிப்பதாக அமெரிக்காவின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் அறிவித்துள்ளார்.

இந்த தொகையில் 30 மில்லியன் டொலர் மனிதாபிமான அடிப்படையில் நிவாரணங்களுக்காக செலவிடப்படும் என்றும் 15 மில்லியன் டொலர் அரசுக்கு எதிராக போராடும் மக்களின் வாழ்வை சீரமைக்க பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

சிரியாவின் போராட்டக்குழு உறுப்பினர்கள் 9 பேருடன் நடந்த சந்திப்புக்கு பின்னரே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ந-2)

# சீனாவுடன் இந்தியா நிலையான கூட்டுறவு

## எஸ்.எம்.கிருஷ்ணா ஐ.நாவில் தெரிவிப்பு



(நியூயோர்க்)

சீனாவுடன் இந்தியா நிலையான கூட்டுறவு உறவை வைத்துள்ளது. இந்த கூட்டுறவை மேம்படுத்தும் வகையில் எங்களது நிலையான முதலீடுகள் தொடரும். கடந்த 10 ஆண்டுகளில் ஆசியாவின் சாதனைகள் சிறப்பாக உள்ளது என மத்திய வெளியுறவுத்துறை மந்திரி எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

ஐ.நா.பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள மத்திய வெளியுறவுத்துறை மந்திரி எஸ்.எம்.கிருஷ்ணா ரோடி ஐலேண்டில் உள்ள பிரவுன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 21 ஆம் நூற்றாண்டுக்கான இந்திய வெளியுறவுக் கொள்கை முன்னுரிமைகள் என்ற தலைப்பில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

அதிகாரப் போட்டி, ஆயுதப் போட்டி போன்ற விடயங்கள் முன்னேற்றத்தை தலை கீழாக மாற்றி விடும். வெளியுறவு கொள்கைகளுக்கு இந்தியா முன்னுரிமை அளித்து வருகிறது. இதேபோல இந்தியாவின் வளர்ச்சிக்கு அமெரிக்கா முக்கிய பங்கு வகிக்கிறது. இரு தரப்பு கூட்டு முயற்சிகள் இரு நாட்டு செழிப்பிற்கும் வழி வகுக்கும். உயர்கல்வி, அறிவியல் மற்றும் ஆராய்ச்சியில் இந்தியா, அமெரிக்கா இடையே வலுவான பாலம் அமைந்துள்ளது என்றார். (ந-2)

# லிபியாவின் எதிர்ப்பையடுத்து அமெ.அதிகாரிகள் மீள அழைப்பு

## பாதுகாப்பிற்காக அமெ.அரசு நடவடிக்கை

லிபியா தலைநகர் டிரிபோலியில் உள்ள அமெரிக்க தூதரகத்திலிருந்து பெரும்பாலான ஊழியர்கள் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டனர்.

அப்பகுதியில் பெரிய அளவில் மீண்டும் போராட்டம் நடைபெறலாம் என்ற தகவல் வெளியானதைத் தொடர்ந்து அமெரிக்கா இந் நடவடிக்கையை எடுத்துள்ளது. இஸ்லாம் மதத்துக்கு எதிராக திரைப்படம் எடுத்த அமெரிக்கரை கண்டித்து லிபியாவின் பென்காசியில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் போராட்டம் நடைபெற்றது. அப்போது நிகழ்ந்த வன்முறையில் அமெரிக்க தூதர் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து அவசியமானோரைத் தவிர ஏனையவர்களை பென்காசி தூதரகத்திலிருந்து அமெரிக்கா திரும்ப அழைத்துக் கொண்டது. இந்நிலையில் மீண்டும் பென்காசியிலும் டிரிபோலியிலும் போராட்டம் நடைபெறும் என்ற தகவல் வெளியானது. இதையடுத்து டிரிபோலியில் உள்ள ஊழியர்களை திரும்ப அழைத்துக்கொள்ள அமெரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில், பாதுகாப்பு காரணமாக அவசியமானவர்களைத் தவிர ஏனையவர்கள் தூதரகத்திலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ளோம்.

அடுத்த வாரம் நிலைமையை ஆராய்ந்த பின்னர் ஊழியர்களை தூதரகத்திற்கு திருப்பி அனுப்புவது பற்றி முடிவு செய்வோம் என்றார். இதற்கிடையே அமெரிக்க தூதரகம் தனது இணையத்தளத்தில் பிரஜைகளுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை அறிவிப்பில் பென்காசியில் உள்ள அல்-ஷஜாரா பகுதிக்கோ, டிரிபோலியில் உள்ள தியாகிகள் நினைவு சதுக்கத்துக்கோ யாரும் போக வேண்டாம் என்று தெரிவித்துள்ளது. (ந-2)

# நபிகளை அவமதித்த பட தயாரிப்பாளர் சிறையில் அடைப்பு

## விடுவிக்க நீதிபதிகள் மறுப்பு

(வோஷிங்டன்)

நபிகள் நாயகத்தை அவதூறாக சித்திரித்து படம் தயாரித்து பல்வேறு நாடுகளில் வன்முறைக்குக் காரணமான தயாரிப்பாளர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகர இரட்டைக் கோபுர தகர்ப்பு நினைவு தினம் கடந்த 11 ஆம் திகதி அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி அமெரிக்காவில் முஸ்லிம்களின் அப்பாவிதனம் என்ற பெயரில் ஒரு திரைப்படம் வெளியிடப்பட்டது. இந்த படத்தில் நபிகள் நாயகத்தை கேலி செய்வது போன்ற காட்சி இடம் பெற்றதால் உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் இதற்கு கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

எகிப்து, லிபியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாடுகளில் இது தொடர்பாக பெரிய வன்முறை ஏற்பட்டது.

இந்த படத்தை தயாரித்தவர் எகிப்து நாட்டைச் சேர்ந்த நகோலா பாஸ்லி. தற்போது கலிபோர்னியாவில் வசிக்கிறார். வங்கி மோசடி தொடர்பாக 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட நகோலா கடந்த ஆண்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பிணையில் இருந்த காலத்தில் அவர் நன்னடத்தை விதியை மீறியதாகக் கூறி நேற்று முன்தினம் இவர் மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். முஸ்லிம்களுக்கு எதிரான படத்தை தயாரித்த எனக்கு சிறையில் அச்சுறுத்தல் உள்ளது. எனவே, விடுதலை செய்ய வேண்டும் என லொஸ்ஏஞ்சல்ஸ் நீதிமன்றில் இவர் கோரினார். ஆனால், நீதிபதிகள் இவரை விடுவிக்க மறுத்து விட்டனர். (ந-2)



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேடன்யாகுவை சந்தித்து கலந்துரையாடியதைப் படத்தில் காணலாம்.

# 48 பாக்.மீனவர்கள் விடுதலையாகினர்

இந்தியாவின் குஜராத், ராஜஸ்தான் மாநில சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த பாகிஸ்தான் மீனவர்கள் 46 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததற்காக இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் நல்லெண்ணத்தின் அடிப்படையில் பாகிஸ்தான் மீனவர்கள் 46 பேர் விடுதலை செய்யப்பட்டனர். விடுதலையான மீனவர்கள் வாகா எல்லை வழியாக பாகிஸ்தான் திரும்பியுள்ளனர். (ந-2)

# எங்களுக்கு சொந்தமான தீவுகளை ஜப்பான் அபகரித்து விட்டது

## சீனா பகிரங்க புகார்

எங்களுக்கு சொந்தமான தீவுகளை ஜப்பான் அபகரித்து விட்டது என ஐ.நா.சபையில் சீனா பகிரங்கமாக புகார் தெரிவித்துள்ளது.

கிழக்கு சீன கடல் பகுதியில் அமைந்துள்ள தீவுகள் யாருக்கு சொந்தம் என்பதில் பல ஆண்டுகளாகவே சீனாவுக்கும் ஜப்பானுக்கும் பிரச்சினை நீடித்து வருகிறது. இதற்கிடையே தாய்வானும் அத்தீவுகளுக்கு சொந்தம் கொண்டாடி வருகின்றது.

இந்நிலையில் ஐ.நா.சபையில் சீன வெளிவிவகாரத்துறை அமைச்சர் யாங் ஜிய்சே ஜப்பான் மீது பகிரங்கமாக பல குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில்,

வழக்கத்துக்கு மிகவும் முரண்பட்ட வகையில் தனியார்கள் சிலரிடம் இருந்து சில தீவுகளை வாங்கிவிட்டதாக ஜப்பான் கூறி வருகிறது.

தீவு விடயத்தில் சீனாவுக்கு எதிராக ஜப்பான் மிகத்தீவிரமாக செயற்பட்டு வருகிறது. எங்களுக்கு சொந்தமான தீவுகளை உரிமை கொண்டாடுவது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதுவரை செய்த தவறுகளை ஜப்பான் திருத்திக் கொள்ள வேண்டும். எங்களிடம் இருந்து பல தீவுகளை ஜப்பான் அபகரித்துக் கொண்டு விட்டது. அதனை முழுமையாக திரும்ப ஒப்படைக்க வேண்டும். அப்போது முதல் இப்போதுவரை தீவுகள் விடயத்தில் ஜப்பான் எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்துமே சட்டவிரோதமானவை என்று தெரிவித்துள்ளார். இதற்கு பதிலளித்துள்ள ஜப்பான், சீனாவின் குற்றச்சாட்டுகள் எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லாதவை என்று கூறியுள்ளது. (ந-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் பணி புரிகின்றவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்

வெளிநாடுகளில் பணிபுரிகின்றவர்களின் பிள்ளைகளுக்கு இரண்டாயிரத்து 500 புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கல்விப்பொதுதராதர சாதாரண தர மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தியடையும் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட உள்ளதாக பணியகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்கார குறிப்பிட்டார்.

இதேவேளை வெளிநாடுகளில் நிலவுகின்ற கேள்விக்கு அமைவாக பணியாளர்களை பயிற்றுவிப்பதற்கும் திட்டமொன்றும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த பயிற்சிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டு அதன்மூலம் தாதியர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், நிர்மாணத்துறையுடன் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சிகளை அளித்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கத் திட்டமிட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக 15 தாதியர்களை அமெரிக்காவுக்கு அனுப்பிவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-2)

# கிராமசேவையாளர்கள் பலரின் இடமாற்றத்தால் மக்கள் அவதி

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள கிராமசேவையாளர்களின் தொடர்ச்சியான இடமாற்றங்களால் பல துன்பங்களை எதிர்கொண்டு வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள அனைத்து கிராமசேவையாளர்களுக்கும் தற்போது இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இடமாற்றம் பெற்று சில நாட்கள் கழிந்துள்ள நிலையில் அந்தந்தப் பிரிவுகளுக்கான புதிய கிராமசேவையாளர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை.

சில கிராமசேவையாளர் அலுவலகங்கள் மூடப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றது. இதனால் அவசர தேவை கருதி கிராமசேவையாளர் அலுவலகங்களுக்கு செல்லும் மக்கள் தமது தேவைகளை பூர்த்திசெய்து கொள்ள முடியாமல் ஏமாற்றத்துடன் தாம் திரும்பிச் செல்வதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கிராமங்களினுடைய தேவைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு வருகின்ற சில அமைப்புக்கள் கூட கிராம அலுவலர்கள் இல்லாமல் திரும்பிச் செல்கின்ற நிலையும் காணப்படுகின்றது.

எனவே புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் இவற்றினைக் கருத்தில் கொண்டு கிராமசேவையாளர்களை விரைந்து தமது கடமைகளைப் பொறுப்பேற்கச் செய்யுமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ந-9-260)

# வளப்பற்றாக்குறைகளுடன் வேரவில் மகாவித்தியாலயம்

## சீர்செய்துதர பெற்றோர் கோரிக்கை

(சிவநகர்)

கிளி/வேரவில் மகாவித்தியாலயம் வளப்பற்றாக் குறையுடன் இயங்கி வருவதாக மாணவர்களும் மாணவர்களின் பெற்றோரும் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பாடசாலையானது, போருக்குப்பின் முழுமையான வசதிகள் எதுவுமின்றி கொட்டில், மரங்களின் கீழ் இயங்கிவருகின்றது. தரம் ஒன்று தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரையான வகுப்புக்களில் சுமார் 382 மாணவர்கள் கல்வி கற்பதோடு அதிபர் உட்பட 17 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.

இது 1சி தர பாடசாலை ஆகும். இப்பாடசாலை ஆரம்பக்கல்வியிலிருந்து அண்மையில் இரு ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்ற போதும் இதுவரை அவர்களின் இடம் நிரப்பப்படவில்லை. அத்துடன் மேல்வகுப்பிக்கு வரலாறு, தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை. பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் முதன்மையாக விளங்கும் இப்பாடசாலை வளப்பற்றாக்குறையுடன் இயங்கிவருகின்றதது.

மேலும் ஆசிரியர், மாணவர்களுக்கான சீரான போக்குவரத்துவசதிகள், தங்குமிட வசதிகளில்லை. இதனால் வெளியிடங்களில் இருந்துவரும் இப்பாடசாலை ஆசிரியர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

இப்பாடசாலையின் புனரமைப்புப் பொறுப்பை வேறொரு நிறுவனம் எடுத்துக்கொண்ட போதும் வேலைகள் எதுவும் முன்னேற்றகரமாக நடைபெறவில்லை. எனவே, உரிய அதிகாரிகள் இப்பாடசாலையினைப் புனரமைத்து சகல பௌதீக வளங்களுடன் இயங்க உதவுமாறு மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9-254)

# ஊவா மாகாண முதல் ஆளுநர் காலமானார்

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஊவா மாகாண முதல் ஆளுநருமான பி.சி.இம்புலான காலமானார்.

ருவான்வெல்ல கிராமக்குழுத் தலைவராக அரசியலில் காலடி எடுத்து வைத்த அவர் 1960 ஆம் ஆண்டு ருவான்வெல்ல தொகுதியில் இருந்து பாராளுமன்றுக்குத் தெரிவானார்.

பிரதமர் டட்லி சேனாநாயக்க மற்றும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன காலத்தில் விவசாயத்துறை, உள்ளூராட்சி சபைகள், வீடமைப்பு கட்டுமான பிரதி அமைச்சராக பதவி வகித்தார். ஜனாதிபதி பிரேமதாஸ காலத்தில் தொழில் அமைச்சராக பதவி வகித்தார்.

1988 தொடக்கம் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஊவா மாகாண சபையின் முதல் ஆளுநராக இவர் பதவிவகித்தார். (ந-2)

# இலங்கை அகதிகளை நாடு கடத்தவுள்ளது இந்தியா

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா நோக்கிச் செல்ல முயற்சித்த இலங்கை அகதிகளில் 15 பேரை நாடு கடத்த இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த ஜூன் 3 ஆம் திகதி கேரள - கொல்லம் பகுதியில் அவுஸ்திரேலியா தப்பிச்செல்ல முயற்சித்த 151 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதில் 15 பேர் தங்களுடைய ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த தவறியதால் அவர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்.

இந்த 15 பேரும் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு கடந்த 17 ஆம் திகதி விடுவிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 151 பேரில் மற்றையவர்கள் தமிழக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ந-2)

# ஜெயலலிதா- கருணாநிதியை கூட்டமைப்பு சந்திக்கும்

## ஊர்ஜிதப்படுத்தினார் மாவை

(கொழும்பு)

இந்திய அரசின் அழைப்பின் பேரில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி இலங்கையிலிருந்து செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழுவினர் தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோரை சந்திக்க திட்டமிட்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா கூறியதாவது,

எங்களது இந்திய பயணத்தின் போது இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வுக்கான வழிவகைகள்தான் பிரதான இடம்பிடித்திருக்கும். இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் கே. காந்தாவை நாங்கள் நாளை திங்கட்கிழமை சந்திக்கிறோம். அதன்பின்னர் 10ஆம் திகதி டில்லிக்குச் செல்கிறோம். இந்திய பிரதமர் மன்மோகன்சிங், எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரை டில்லியில் சந்தித்துப் பேசுகிறோம்.

பின்னர் தமிழகம் சென்று முதல்வர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோரையும் சந்தித்துப்பேச உள்ளோம்.

இந்த பயணத்தின் போது அரசியல் தீர்வில் ஏற்பட்டிருக்கும் இழுபறி, தமிழர் வாழும் வடகிழக்கின் தற்போதைய நிலைமை, நிலப் பிரச்சினை ஆகியவற்றைப் பற்றி விளக்குவோம் என்றார். (ந-11)



கிளிநொச்சி டிப்போச் சந்தியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் டிப்பர் வாகனம் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இவ்விபத்துச் சம்பவம் டிப்பர் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்ததனாலே ஏற்பட்டுள்ளது. இதன்போது டிப்பர் வாகன சாரதி சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளார். டிப்பர் வாகனம் மரத்துடன் மோதியுள்ளதைப் படத்தில் காணலாம்.

# ஐ.நா. சபையில் டெசோ தீர்மானங்கள்; 6 ஆம் திகதி கையளிக்க ஏற்பாடு

தி.மு.க சார்பில் டெசோ மாநாட்டுத் தீர்மானங்களை ஐ.நா. சபையில் கொடுக்க மத்திய அரசு அனுமதி அளித்திருப்பதாக தெரிகிறது. இந்நிலையில் டெசோ அமைப்பின் கலந்துரையாடல் கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் சென்னையில் நடக்கிறது.

கூட்டத்தில் தி.மு.க பொதுச்செயலாளர் அன்பழகன்,பொருளாளர் மு.க ஸ்டாலின் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, திராவிடர் இயக்க தமிழர் பேரவைத் தலைவர் சு.ப. வீரபாண்டியன், முன்னாள் மத்திய மந்திரி சுப்புலட்சுமி ஜெகதீசன், வக்கீல் ராதாகிருஸ்ணன், ஹசன் முகம்மது ஜின்னா ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இலங்கைப்போரில் நடந்த மனித உரிமை மீறல்குறித்து ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணையம் ஒக்டோபர், நவம்பர் ஆய்வு நடத்தவுள்ளது. இந்த ஆய்வுப்பொறுப்பை ஏற்கவிருக்கும் இந்தியா மனித நேயத்துடன் நடக்க வேண்டும் என்று மூன்றாம் திகதி நடக்கும் கூட்டத்தில் வற்புறுத்தப்படும் என்று தெரிகின்றது.

டெசோ மாநாட்டுத் தீர்மானங்களை ஐ.நா. சபை வழங்குவது குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என தெரிகிறது. இந்தக்கூட்டத்தைத் தொடர்ந்து மு.க.ஸ்டாலின், பாராளுமன்ற தி.மு.க. தலைவர் டி. ஆர்.பாலு ஆகியோர் ஒக்டோபர் 6 ஆம் திகதி நியூயோர்க் செல்கிறார்கள். அங்கு ஐ.நா. சபையில் டெசோ மாநாட்டுத் தீர்மானங்களை அவர்கள் கொடுக்கிறார்கள். (ந-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் விரைவில் நுழைய சந்திரிகாவின் மகன் ஆர்வம்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மறைந்த நடிகரும் அரசியல்வாதியுமான விஜய குமாரதுங்கவின் புதல்வருமான விமுக்தி குமாரதுங்க அரசியலில் நுழையலாம் என நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தகவல் கசிந்துள்ளது.

இதன் முதல் படியாகவே அவர் கடந்த 26 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட தனது பாட்டனாரான எஸ். டபிள்யூ ஆர்.டி. பண்டார நாயக்கவின் 53 ஆவது சிரார்த்த தினத்தின் போது ஹொரகொல்லயில் அமைந்துள்ள அவரின் சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மிருக வைத்தியரான விமுக்தி இங்கிலாந்தில் வசித்து வருகின்றார். தற்போது விடுமுறையைக் கழிக்கும் பொருட்டு இங்கு வந்துள்ளார்.

அவரை அரசியலில் இறக்கும் நடவடிக்கைகள் தற்போது மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூடிய விரைவில் இது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வரலாம் என ஊடகங்கள் சில செய்திகள் வெளியிட்டுள்ளன.

பரம்பரையாக அரசியலில் ஈடுபட்டு வந்த குடும்பம் என்ற வகையில் குறித்த செய்திகள் நம்பக் கூடிய வகையிலேயே உள்ளன.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷவும் தற்போது பாராளுமன்ற உறுப்பினராக உள்ளார். அதேவகையில் முன்னாள் ஜனாதிபதியின் மகனும் அரசியலில் நுழைய வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. (ந-2)

# இப்படியும் செய்கிறார்கள்!

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத்தவிசாளர் பொ.வியாகேசுவின் வீட்டிற்கு முன்பாக நேற்று அதிகாலை 42 தேசியக் கொடிகளை ஏற்றிவிட்டு இனந்தெரியாத நபர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 4 மணிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் உடுப்பிட்டி பகுதியிலுள்ள இவரது வீட்டுமுன் கேற்றில் 42 தேசியக்கொடிகளை கட்டிவிட்டு சென்றுள்ளனர். அண்மையில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்ட ஆரம்ப விழாவின் போது பிரதேச சபைத் தவிசாளர் தேசிய கொடியை ஏற்ற மறுத்துவிட்டார்.

இந்நிகழ்வின் எதிரொலியாகவே தவிசாளர் வீட்டிற்கு முன்கேற்றில் தேசியக்கொடி கட்டப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. (ந-9-24)

# ரயில் - ஓட்டோ விபத்து; ஒருவர் பலி

அஹிங்கல பாத்தேகம பிரதேசத்தில் காலி கொழும்பு வீதியில் கினிகல்கொட பகுதிக்கு சென்று கொண்டிருந்த முச்சக் கரவண்டி ரயிலுடன் மோதுண்டு விபத்துக் குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கி சென்று கொண்டிருந்த ரயிலுடன் முச்சக் கரவண்டி மோதுண்டே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்து இடம் பெற்ற போது முச்சக் கரவண்டியில் சாரதி மாத்திரம் பயணித்துள்ள நிலையில் அவர் படுகாயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார். விபத்தில் பல பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார். (ந-2)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 12 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் சங்கத் தலைவர் தா. தர்மரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். இதில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறவுள்ளதாக சங்கப் பொதுச் செயலாளர் சி.ஜெயசங்கர் அறிவித்துள்ளார். (ந-9)

## பாராட்டுகளும் வாழ்த்துகளும்



யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று எமக்குப் பெருமை தேடித் தந்த தரணிகா ஞானசேகரம் அவர்களையும் அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:-
அம்மம்மா, மாமா, சித்தி, சித்தப்பா குடும்பத்தினர்.
கொழும்புத்துறை.


(சி/1179)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

2012 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவச் செல்வங்களாகிய



மரியசேவியர் மரிஸ்ரன்
161 புள்ளிகள்



தேவராசா பிரியதனுஜன்
148 புள்ளிகள்

ஆகிய இருவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

1. ர. ரவித்தனா - 147
2. வி. நிருபன் - 146
3. யு. மேரி லக்சிகா - 142
4. ஜெ. ஜென்சிகா - 132
5. அ. மேரி ஜதுர்ஷனா - 126
6. யே. சுபாங்கன் - 118
7. யூ. யஸ்ரின் சேகர் - 101

ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

மற்றும் இவர்களுக்கு கற்பித்த வகுப்பாசிரியர், அதிபர், ஆசிரியர்கள், மேலதிக வகுப்புக்களை நடாத்தி சிறந்த பெறுபேற்றை பெற வழிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை

(C-1167)


English For Every one (TOEIC)
உலகப் பிரசித்தி பெற்ற ஆங்கில தகைமைகள்

- SPOKEN English சகல வயதினருக்குமானது
- Diploma in English- AI, BI, B2, CI
  வெளிநாடு / UK Student Visa / spouse Visa பெறுவதற்கான கற்கை நெறிகள்
- TOEIC Bridge - English for Beginers (Basic English with Spoken)
- English For work -அலுவலகம் ஊழியர்களுக்கான ஆங்கில கற்கை நெறி

TOEIC

Diploma in Hotel Management
Diploma in Travel and Tourism

வெளிநாடுகளில் உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கள்/Industrial Training



Beauty Therapy and Hairdressing
பயிற்சி நெறிகள்
Diploma in Hairdressing
Diploma in Beauty Therapy

மேலதிக தகவல்கள் 0777172660
International Knowlege Pool
19. 3rd Floor (People's Bank) Thanarajah building, stanly Road, Jaffna.



Negombo Colombo Jaffna



1717 FOLLOW US ON www.mobitel.lk

இவ் ஹஜ் யாத்திரைக் காலத்தில் சவூதி அரேபியாவிற்கான
குறைந்த ரோமிங் கட்டணங்கள்

| கட்டணங்கள் (ரூ.) வரி நீங்கலாக | SMS HOME 5/- | CALL HOME 25/- |
| --- | --- | --- |
| டயல் செய்யும் முறை | *123*<இலங்கையில் அழைக்கப்படுபவரின் இலக்கம்># உதாரணம்: *123*0712755777# | *140*94<இலங்கையில் அழைக்கப்படுபவரின் இலக்கம்># |


இக் கட்டணங்களை மொபிடெல் பங்காளரான அல்ஜவால் வலையமைப்புடன் அனுபவித்திடுங்கள். நிபந்தனைகளுக்குட்பட்டது.



Sri Lanka Telecom Mobitel
We Care. Always.

TRIAD 20148


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டி: கிளிநொச்சி, சென் அன்ரனீஸ் வெற்றி

மன்னார் பெரியகடை ஃப்ரார் ஈகிள் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படும் 10 ஓவர்கள் கொண்ட மன்னார் பிறீமியர்லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி அண்மையில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

36 போட்டிகளை கொண்ட போட்டியில்,

15 ஆவது போட்டியானது கிறீன் பீல்ட் அணிக்கும் சென். அன்ரனீஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிறீன் பீல்ட் அணியினர் 10 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 54 ஓட்டங்களை பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் கிறீன்பீல்ட் அணி சார்பாக நிசாந்தன் 10 பந்துகளில் 14 ஓட்டங்களையும் நார்தீபன் 6 பந்துகளில் 10 ஓட்டங்களையும் அதிக பட்ச ஓட்டங்களாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.அன்ரனீஸ் அணி சார்பாக சுகந்தன் 5 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் பிரதீப் 12 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். பதிலக்கு துடுப்பெடுத்தாடிய சென்.அன்ரனீஸ் அணியினர் 6.1 ஓவர்களில் ஒரு இலக்கினை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தனர். துடுப்பாட்டத்தில் பிரதீப் 19 பந்துகளில் 30 ஓட்டங்களையும் சுகந்தன் 13 பந்துகளில் 16 ஓட்டங்க ளையும் அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றனர். பந்துவீச்சில் கிறீன்பீல்ட் அணிசார்பாக வீழ்த்தப்பட்ட ஒரு இலக்கினை ரூபன் 12 ஓட்டங்களுக்கு கைப்பற்றினார்.

16 ஆவது போட்டியானது ஏசியன் அணிக்கும் கிளிநொச்சி அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஏசியன் அணியினர் 10 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 75 ஓட்டங்களை பெற்றனர். துடுப்பாட்டத்தில் ஏசியன் அணிசார்பாக சுஜி 18 பந்துகளில் 21 ஓட்டஙகளையும் மோகன் 21 பந்துகளில் 19 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றனர்.

பந்துவீச்சில் கிளிநொச்சி அணிசார்பாக அனுசன் 17 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் சுதன் 15 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி அணியினர் 8.4 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கினை அடைந்தனர். துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி அணிசார்பாக கீரன் 25 பந்துகளில் 42 ஓட்டங்களையும் றேகன் 15 பந்துகளில் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஏசியன் அணி சார்பாக சுதன் 10 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் செல்வம் 19 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். (23)

# உதைபந்தாட்ட போட்டி

(கரவெட்டி)



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான அணிக்கு 9 பேர் கொண்ட உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை வல் வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டியில் 46 அணிகள் பங்குபற்றுகின்றன.

இதில் முதலாவது போட்டியாக பிற்பகல் 3.30 மணிக்கு திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து இமையாணன் மத்திய அணி மோதவுள்ளது. இரண்டாவது போட்டியில் பிற்பகல் 4.30 மணிக்கு கரவெட்டி சுடர் ஒளி அணியை எதிர்த்து அல்வாய் மோதவுள்ளது. (24)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களை தெரிவுசெய்வதற்கான போட்டிகளின் முதற்கட்டமாக பிரதேசசெயலக பிரிவுகளுக்கு இடையே நடைபெற்று வருகின்றது. அந்த வகையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் 21 வயதுப்பிரிவிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (23)

# விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தின் முதல் வாரத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தங்களுடைய அணி வீரர்களின் பெயர் விபரங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகச் செயலாளரிடம் ஒப்படைக்குமாறு போட்டிக்குழு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேற்படி போட்டி ஒழுங்கு நிரல் தயாரிக்கும் நிகழ்வு முதலாம் திகதி இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

வவுனியா மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுப்பிரிவு, 19 வயதுப்பிரிவு அணிகளுக்கான இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒக்டோபர் மாதம் 2 ஆம் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் விண்ணப்பப்படிவங்களை வவுனியா மாவட்ட கிரிக்கெட் சங்க செயலாளரிடம் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆசிரியர்களுக்கான வதிவிட உடற்கல்வி பயிற்சி முகாம்



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் கடமையாற்றும் உடற்கல்விப் பாடம் கற்பிக்காத ஆசிரியர்களுக்கான 4 நாள் வதிவிட உடற் கல்வி பயிற்சி முகாம் கடந்த 26 ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பமாகியுள்ளது. வடமாகா ணத்தின் 12 வலயங்களையும் சேர்ந்த பாடசாலைகளில் உடற்கல்வி மற்றும் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடும் உடற்கல்வி கற்பிக்காத 60 ஆசிரியர்களுக்கு அவர்களின் வாண்மைவிருத்திக்காக உடற்கல்வி பயிற்சி முகாம் கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நான்கு நாட்களுக்கு நடாத்தப்பட்டது. இவர்களுக் கான பயிற்சிகளை வட மாகாணத்தைச் சேர்ந்த 10 வள வாளர்கள் வழங்கினார்கள். இச்செயற்திட்டம் வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது. வட மாகாண கல்வித் திணைக்கள மாணவர் அபிவிருத்தி பிரதி கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் இதனை ஒருங் கிணைத்து நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (23)





மு/ ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலும் மாங்குளம் மகா வித்தியாலயத்திலும் அண்மையில் நடைபெற்ற முரளி நல்லிணக்க வெற்றிக்கிண்ணத்தில் முத்தையா முரளிதரன் மற்றும் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் இராணுவப் பெண்கள் அணி கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: மல்லாவிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மக்கள் தூங்குகிறார்கள். அதனால் நான் விழித்திருக்கிறேன்.

—அம்பேத்கர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கொள்கை இல்லாத செயற்றிட்டம் குருட்டுத்தனம் செயற்றிட்டம் இல்லாத கொள்கை மலட்டுத்தனம்

கொள்கையில்லாத செயற்றிட்டம் குருட்டுத்தனம், செயற்றிட்டம் இல்லாத கொள்கை மலட்டுத்தனம் என்றார் ஸ்ராலின், கொள்கை, செயற்றிட்டம் என்பதில் ஏதோ ஒன்று இருக்காமல் போகலாம் என்பதால்தான் ஸ்ராலின் அவ்வாறு விளக்கம் கொடுத்தார்.

ஆனால் எங்கள் நாட்டில் கொள்கையும் இல்லை; செயற்றிட்டமும் இல்லை. ஆக எங்கள் நாட்டில் இருப்பது குருட்டுத்தனமும் மலட்டுத்தனமும்தான்.

இதற்கு நல்லஉதாரணம், எங்கள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள்தான். எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாராவது தங்கள் கொள்கை இதுதான் என்று மேடையேறி முழங்குவார்களா?

தங்கள் கொள்கை விளக்கத்தின் மூலம் தங்களுக்குப் பின்னால் இளைஞர் சமூகத்தை ஒன்று திரட்ட முடியுமா? விகிதாசாரப் பிரதிநிதித்துவம், கட்சிக்கு வாக்களிப்பு, மூன்று விருப்பு வாக்கு என்ற தேர்தல் முறைமையின் கீழ், பட்டோலையில் பெயர் எழுதப்பட்டால் போதும்.

கட்சிக்காக வாக்களிக்கும் மக்கள் கூட்டத்தால் எங்களுக்கும் ஆசனம் கிடைக்கும் என்ற அளவில் வேட்பாளர் பட்டியலில் இடம்பிடித்துக் கொள்வதற்காக,

கட்சித்தலைமைக்கு ஆலாத்தி எடுக்கின்ற ஆலாவர்ணம் நடந்து கொண்டிருக்கிறது.

அரசியல்வாதியென்றால் பாராளுமன்ற உறுப்பினர் என்றால், அவரிடம் கொள்கையிருக்க வேண்டும். நாம் என்ன செய்யப்போகிறோம் என்று மக்களுக்கு எடுத்துரைக்கும் ஆற்றல் இருக்க வேண்டும். இதை விடுத்து ஒரேவார்த்தையை மட் டக்களப்பிலும் வவுனியாவிலும் திருமலையிலும் யாழ்ப்பாணத்திலும் மாறிமாறிக் கூறுவதில் என்ன பயன்! இவை எங்களை நாங்கள் ஏமாற்றுவதாகத்தான் முடியும் தமிழ் அரசியல்வாதிகளில் மனோகணேசனின் யதார்த்தமான உரைகளும் கருத்துக்களும் மக்களை சிந்திக்க வைக்கின்றன.

மனோகணேசன் போன்ற வேகமும் விவேகமும் கருத்தாழம்மிக்க அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றனர். தமிழகத்தில் கலைஞர் கருணாநிதியின் ஆட்சியை காப்பாற்ற சன் தொலைக்காட்சியும் கலைஞர் தொலைக்காட்சியும் படாப்பாடு. ஆனால் சகோதரன் சீமானின் ஆக்ரோசமான உரையும் வைகோவின் ஆதாரமான பேச்சும் நடிகர் ரஜனிகாந்த் சரியான நேரத்தில் மக்களுக்கு கொடுத்த ஒரு சில வார்த்தைகளும் கலைஞர் கருணாநிதியின் ஆட்சியை முடிபுறுத்தியது.

முன்பும் எங்கள் தமிழ்த்தலைவர்கள் அப்படித்தான் கருத்தை வெளியிட்டனர். எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலஞ்சென்ற அ.அமிர்தலிங்கத்தின் உரைக்காக உறங்காமல் இருந்தவர்கள் ஏராளம்.

அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றப் போகிறார் என்றால் சபையில் விழித்திருந்தவர்கள் தாராளம். ஆனால்இப்போ,உறங்குவதற்காக இவரின்உரையை கேட்கப்போகிறேன் என்று சொல்லும் அளவிற்கு நிலைமை இருந்தால் எப்படி உய்வு கிடைக்கும்?

# எஸ்.பியின் பேச்சில் உறுதியில்லை; எமது போராட்டம் தொடரும்

## யாழ்.பல்கலை ஆசிரியர் சங்கம் உறுதி

(யாழ்ப்பாணம்)

அமைச்சர்எஸ்.பி.திஸநாயக்கவினால் கூறப்பட்டு வரும் சம்பள உயர்வு என்பது பழைய பல்லவி என்றும் அதனை மீண்டும் மீண்டும் கூறி ஆசிரியர்களினை ஏமாற்ற முயல்கின்றனர் என யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் இராசகுமார் தெரிவித்தார்.

யாழிற்கு வந்த அமைச்சர் திஸநாயக்க பல்கலைக்கழக விரிவுரையாளர்களிற்கு சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது எனவும், பணிக்கு திரும்பா விட்டால் மேலதிக கொடுப்பனவுகள் இல்லை எனவும் கூறிச் சென்றிருந்தார்.

இது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், அமைச்சரால் வழங்கப்பட்டது எனக் கூறப்படும் சம்பளஉயர்வானது கடந்த ஆண்டே வழங்கப்பட்டு விட்டது.

அதனை தற்போது நினைவு படுத்துவதில் பயனொன்றுமில்லை. எமது போராட்டம் வெற்றி பெற்றிடும். பணிக்குத் திரும்பும் போது எமது கொடுப்பனவுகள் அனைத்தும் வழங்கப்பட்டால் மட்டுமே நாம் பணிக்கு மீண்டும் திரும்புவோம்.

எமது விடயத்தில் திஸநாயக்க உரையாற்ற முடியுமே தவிர அவரால் நினைத்தால் கூட எமக்கு தீர்வினை பெற்றுத்தர முடியாது. அரசின் ஆட்டத்திற்கு ஏற்றவாறே அவரால் ஆட முடியும் என்றார் அவர். (ந-4)

## ஜெயலலிதா மீதான வழக்கு 8ஆம் திகதிக்கு மாற்றம்

தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் அவரது தோழி சசிகலா உள்ளிட்டோர் மீதான சொத்து குவிப்பு வழக்கு விசாரணையை பெங்களூரு சிறப்பு நீதிமன்றம் வரும் ஒக்ரோபர் 8-ம் திகதி தள்ளி வைத்துள்ளது.

வழக்கு மீதான விசாரணை நேற்று நீதிமன்றத்தில் வந்த போது, சொத்துக்குவிப்பு வழக்கு தொடர்பான ஆவணங்களை பார்க்க சசிகலாவுக்கு உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

ஆனால், ஆவண நகல்கள் இன்னும் கிடைக்கவில்லை என்று சசிகலா சார்பில் ஆஜரான வழக்குரைஞர் கூறினார். இதையடுத்து, ஆவணங்களை அளிக்க நீதிபதி உத்தரவிட்டார். (ந-2)

## இலங்கைப் பெண் குவைத்தில் கைது

(குவைத்)

பொலிஸ் அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குவைத், பின் டாஸ் நகரில் இலங்கைப் பெண்ணொருவரை அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.


சக ஊழியர்கள் மூவரை விடுதலை செய்து கொள்வதற்காக பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுக்க முயன்ற நிலையிலேயே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒரு கைதிக்கு 300 குவைத் தினார் வீதம் இலஞ்சம் வழங்கியுள்ளார் என்றும் இதனை அவர் ஒப்புக் கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அந்நாட்டுப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-11)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எங்கள் வளநாடு



வெய்யபுவிப் பார்வையொழி நாடெங்கள் நாடே
மேலான பூரணமாம் நாடெங்கள் நாடே
துய்யவறி துயில்புரியு நாடெங்கள் நாடே
தூயசுக வாரிதிதோய் நாடெங்கள் நாடே
செய்யநடங் கண்டுகளி நாடெங்கள் நாடே
சிந்தைதெளிந் திட்டதனி நாடெங்கள் நாடே
ஐயனடி யேனறியாப் பருவத்தே வந்து
ஆட்கொண்டு காட்டிவைத்த தெங்கள்வளநாடே

## ஒவ்வொருவரும் தங்களைப் புரிந்துகொண்டு அவரவர் வாழ்க்கையை மாற்றியமைப்போம்

ம.பிரான்சீஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இயேசுவின் உளவியல் முதிர்ச்சியையும் பரந்த மனநிலையையும் இன்று நற்செய்தி நம்மை வியக்க வைக்கின்றது. இயேசுவை சார்ந்திராத, சீடர் என வரையறுக்கப்படாத ஒருவர் இயேசுவின் பெயரால் பேய்கள் ஓட்டினார் என்பதே மிகவும் வியப்பான ஒரு செய்திதான். அவரைத் தடுக்கப் பார்த்தோம் என்று சீடர்கள் சொன்னபோது இயேசுவின் நம்பிக்கை பதில் எல்லோரையும் வியக்க வைக்கிறது. தடுக்கவேண்டாம். என் பெயரால் வல்ல செயல் புரிபவர் அவ்வளவு எளிதாக என்னைக் குறித்து இகழ்ந்து பேசமாட்டார்.

### பரமபிதா காட்டிய பாதை

இயேசு பொறாமையை நிராகரிக்கிறார். *நமக்கு எதிராக இராதவர் நம் சார்பாக இருக்கிறார்.* இயேசுவின் செய்திக்குத் தாங்கள் மட்டுமே உரிமையாளர்கள் என்னும் சீடர்களின் உணர்வுக்கு இந்த அகன்ற அடிப்படைத் தத்துவம் ஒரு சவாலாக அமைந்துள்ளது. இயேசுவைத் தாங்கள் மட்டுமே பின்பற்றவேண்டும் என்று சீடர்கள் பேராசைப்படுவது ஒரு தடைக்கல்லாகும்.

குறுகிய மனம், பொறாமை, தன்னம்பிக்கையின்மை இவற்றை அடித்து நொறுக்கிவிட்டு, நன்மையை ஏற்பிசைவு செய்யும் பரந்த மனதையும் தன்னம்பிக்கையையும் இயேசு வெளிப்படுத்துகிறார். நமது திறமைகளை, கொடைகளைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளத் தயங்கும் நமக்கு இயேசு பாடம் கற்றுத் தருகிறார். பிறரும் நம்மைப்போல நல்ல பணிகள் ஆற்றட்டும், நற்பெயர் வாங்கட்டும் என்று நினைப்பவரெல்லாம் இயேசுவின் நல்லசீடர்கள் ஆகின்றனரே.

இன்றைய சிந்தனையை ஒரு பார் வையில் நோக்கினால், இன்றைய *நற் செய்தி* என்று சொல்வதற்கே சற்று பய மாயிருக்கின்றது என்றும் கூறலாம்.

ஏனெனில் இயேசு கை, காலை வெட்டி கண்ணைப் பிடுங்கி எறிந்து விடுங்கள் எனக் கடுமையாகப் பேசியிருக்கிறார். ஆனால் இங்கு நல்லவேளை, இயேசு ஒருவர் தம்முடைய கண்ணையோ, கையையோ, காலையோ வெட்டச் சொல்கிறாரே தவிர மற்றவர்களுடையதல்ல. ஆனால் இன்று நாம் வாழும் இந்த மண்ணிலே மற்றவர்களை வெட்டும் செய்தி தினமும் தினத்தாளில் இடம் பிடிக்கும் செய்தியாகின்றது.

இன்றுபோல் இயேசு வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த சமுதாயம் எளிதாக கையை, காலை வெட்டுகின்ற சமுதாயம். பழிக்குப் பழி வாங்குவதில் அதிக தீவிரமாய் இருந்தவர்கள் யூதர்கள். இதனால்தான், இயேசுவே அவர்களைப் பார்த்து ***கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், உங்கள் வலது கன்னத்தில் அறைபவனுக்கு இடது கன்னத்தைக் காட்டு*** என்று முற்றிலும் மாறுபட்ட பாடங்களைக் கற்பிக்க ஆரம்பித்தார்.

இப்படிச்சொல்லும் இயேசுவை நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது. ஆனால் யூதர்களால் இதைப்புரிந்துகொள்ள முடியவில்லை. கோபமாக, கடுமையாகப் பேசும் இயேசுவைப் புரிந்து கொள்வது கொஞ்சம் கடினம்தான். சாட்டையடிபட்டு சிலுவையில் தொங்கும் இயேசுவைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், சாட்டையைக் கையிலெடுத்துக் கொண்டு, கோவிலிலிருந்து வியாபாரிகளை விரட்டினாரே, அப்போது இயேசுவைப் புரிந்து கொள்வது கொஞ்சம் கடினம் தான். அப்படி யொரு சவாலை இன்றைய நற் செய்தி தருகிறது.



ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டுஎன்றுகூறும் இயேசு, தலைமைக் குருவின் ஊழியன் அவரை அறையும் போது, மறுகன்னத்தைக் காட்டவில்லையே. மாறாக, அவனிடம், என்னை ஏன் அறைகிறாய் என்று கேள்வி கேட்டார்.

இன்று இயேசு நற்செய்தியில் கூறும் வார்த்தைகளுக்குப் பின்னணி என்ன?

சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கும் அங்கம் நீக்கப்பட வேண்டும். ஒவ்வொருவரும் தங்களைப் பற்றி யோசித்து, அவரவர் வாழ்க்கையை மாற்றிக் கொள்ள வேண்டும். அப்படி மாற்றுவதற்கு, அவரவர் உடலில் இருக்கும் தடைகளை நீக்க வேண்டும். இந்தக் கருத்தை வலியுறுத்தவே கண்ணைப் பிடுங்கி விடுங்கள், கை, காலை வெட்டிப் போடுங்கள் என்று கோபமாகச் சொல்வதுபோல் தெரிகிறது.

பழக்கங்களை மாற்றிக் கொள்வோம். கட்டுப்பாட்டுடன் வாழ்வோம். தேவையற்ற ஆபத்துக்களை வாழ்விலிருந்து நீக்குவோம். இவைகள் எல்லோருக்குமே நல்லதுதானே. இயேசு இவைகளைத்தான் கொஞ்சம் ஆழமாக, அழுத்தமாக, கோபமாகச் சொல்லியிருக்கிறார். அவர் கோபமாக சொல்கிறாரோ, சாந்தமாகச் சொல்கிறாரோ என்பதல்ல. மாறாக அவர் சொல்வதில் உள்ள உண்மையை உணர்வது, அதன்படி வாழ்வது நமக்குநல்லதுதானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தீண்டியவன் நண்பனாகவே இருந்தாலும் தீங்கு செய்யாதவனே சுந்தரபாண்டியன்!

நண்பனின் காதலுக்கு சசிகுமார் உதவப்போக அந்தப் பெண் (அறிமுகம் லட்சுமி மேனன்) இவரையே காதலிப்பதாக சொல்ல ... தொடரும் குதூகலமும் குரோதமுமேபடம்)

சுப்ரமணியபுரம், துரோகம், நாடோடிகள், நட்பு கலக்கி குலுக்கினாலும் சுந்தரபாண்டியனை ரசிக்க வைத்திருக்கிறார் அறிமுக இயக்குநர் எஸ். ஆர்.பிரபாகரன். நட்பு, காதல், மோதல் சசியின் ஹோம் கிரவுண்ட். ஆனால் இந்த முறை முறைப்பு, விறைப்பு எல்லாம் கடாசிவிட்டு செமகாமெடிக் கச்சேரி நடத்தியிருக்கிறார். முன் பாதி முழுக்க ரஜனி ரசிகனாக ரஜனி மேனரிஸத்துடன் உலவுவது திருமணமான அத்தைப் பெண்ணை வம்புக்கு இழுப்பது, நட்புக்காக அடிதடியில் இறங்குவது என தெக்கத்திப் பக்க வெட்டி ஆபீஸரைக் கண் முன் நிறுத்துகிறார். அட ஒரு பொண்ணுக்காகவா இப்படி வெட்டிக்குவாங்க, குத்திக்குவாங்க என்ற லாஜிக் உதைக்கவே இல்லை. லட்சுமி மேனனை பார்க்கும்! போது அத்தானாம் பெரிய கண்களை உருட்டி அதட்டும் போதும் வெட்கப்படும்போதும் தாவணி போட்ட தீபாவளியிடம் அள்ளுது அழகு நீங்கள்லாம் நல்லா வரணும் லட்சுமி! இடைவேளை வரை பேருந்து பயணங்களிலேயே கழியும் திரைக்கதைக்கு டாப் கியர் வேகம் தட்டுவது சூரியின் காமெடிதான். கொஞ்சம் கோப்பரேட் பண்ணுங்க பாஸ் என்று அப்புக்குட்டியிடம் சமாதானம் பேசுவதும் நடுங்கும் கைகளுடன் இந்த கையைப் பிடிச்சு கம்பியில வைடா! என அதட்டுவதுமாக பஞ்ச் பஞ்ச்களில் கிச்சுக்கிச்சுகிறார். ஆச்சர்யமாக பல சமயங்களில் அடக்கி வாசித்தும் பெயர் வாங்குகிறார்.

சசியின் அப்பாவாக வரும் நரேன், லட்சுமி மேனனின் அப்பாவாக வரும் தென்னவன் அந்த பாத்திரப் படைப்பும் அதை அவர்கள் அச்சு அசலாக வார்த்திருப்பதும் கம்பீரம், காதல் நட்பு, துரோகம் ஊர்ப்பெரியவர் என க்ளிஷேவாக பயணிக்கும் படத்தில் அந்த அத்தைப் பெண் கதாபாத்திரம்... அட திருமணமான பின்னர் அத்தைப் பையன் சசிகுமாருடன் சவால் அடிப்பதும் ஆங்... பாயாசத்துக்கு என முந்திரிப்பருப்பை நொறுக்குவது மாக வசீகரிக்கிறார் ஜானகி.



எதிரியை அழிக்க நினைக்கக்கூடாது ஜெயிக்க நினைக் கணும் எதிரியே இல்லைன்னா நாமவாழலாம். ஆனா வளர முடியாது. வீட்டுல இருந்து வெளியில போறப்ப எல்லாம் பார்த்துப் பழகு பார்த்துப்பழகுனு சொல்லு வாங்க. பழகுன நீங்களே இப்படி பண்ணினா யாரைடா நம்புறது? போன்ற வசனங்கள் ஆங்காங்கே நச்! ஜன்னல் இருக்கை பேருந்து பயண சுவாரஸ்யம் அளிக்கிறது. பிரேம்குமாரின் ஒளிப்பதிவு தடதடவென பயணித்தாலும் இடைவேளைக்கு பின்னர் திருப்பங்களை சசிகுமார் படங்களை மட்டுமே பார்த் தவர்களாலும் சொல்ல முடியுேம! அத்தனை தர்ம வானாக மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் நடக்கும் சசிகுமார் ஏன் அப்பாவுக்கு உதவியாக இல்லாமல் டீக்கடை பெஞ்சிலே பொழுதை போக்குகிறார். ஆனால் இது எதையும் கவனத்தில் கொள்ள வைக்காமல் ரசிக்க வைக்கிறான் நம்ம சுந்தர பாண்டியன்!

இறுதியில் நண்பன் குத்தினால் சாகும் போது கூட காட்டி கொடுக்காதுதான் நட்பு என்று சொல்லும் போது நட்பில் உயர்ந்து நிற்கிறான். சிறு குறைகள் இருந்தாலும் குடும்பத்துடன் பார்க்கும் குதூகலமான படம் சுந்தரபாண்டியன்.






## ஒக்ரோபர் 12இல் திரைக்கு வரும் மாற்றான்



சூர்யா ஒட்டிப்பிறந்த இரட்டையர்களாக நடித்த 'மாற்றான்' எதிர்வரும் மாதம் ஒக்ரோபர் 12ம் திகதி திரைக்கு வருகின்றது.

ஐரோப்பியா, ரஷ்யா நாடுகளில் படமாக்கப்பட்டுள்ள மாற்றானின் இறுதிக்கட்ட பணிகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றன. படத்தினை வெளியிடும் ஈராஸ் நிறுவனம் தியேட்டர்கள் ஒப்பந்தத்தை படு ஜோராக நடத்தி வருகிறார்கள்.

இதற்கிடையில் கிராபிக்ஸ் காட்சிகள் அனைத்தையும் இயக்குனர் கே.வி முடித்து விட்டார். ஒரு சில மாற்றங்களுடன் க்ளைமேக்ஸ் காட்சி மட்டுமே தற்போது நடைபெற்று வருகின்றன. மாற்றான் படத்தின் கால அளவு 168 நிமிடங்களாம். படத்தின் அனைத்து பணிகளையும் முடித்து சென்சாருக்கு அனுப்ப இருக்கிறார்கள்.

ஏற்கனவே திட்டமிட்டபடி அனைத்து பணிகளும் நடைபெற்று வருவதால் ஒக்டோபர் 12ஆம் திகதி 'மாற்றான்' திரைக்கு வருகின்றது. மாற்றான்' படத்தின் தமிழ் டப்பிங், தெலுங்கு டப்பிங் என தான் சம்பந்தப்பட்ட அனைத்து பணிகளையும் சூர்யா முடித்துக் கொடுத்து விட்டார்.

## நான் 250 ஆவது தேனிலவு கொண்டாட போகிறேன்



தனக்கும் பொலிவுட் நடிகர் வைப் கானுக்கம் ஏற்கனவே திருமணமாகிவிட்டதாக இந்தி நடிகை கபூர் குண்டை தூக்கி போட்டுள்ளார்.

பொலிவுட்டின் முன்னணி நடிகையான கரீனா கபூருக்கும் நடிகர் சபை அலி கானுக்கும் வரும் 16 திகதி திருமணம் என்று வைபின் தாயார் ஷர்மியா தாகூர் அறிவித்தார். ஆனால் இது குறித்து மணமக்களான இருவரும் எதுவும் தெரிவி க்காமல் இருந்தனர்.

இந்நிலையில் கரீனா புது குண்டைத் தூக்கிப்போட்டுள்ளார். அதாவது தனக்கும் சைபுக்கும் ஏற்கனவே திருமணமாகிவிட்டது என்றும் அதை சட்டப்படி பதிய வேண்டிய வேலை மட்டுமே பாக்கி உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், எங்களுக்கு திருமணம் முடிந்து விட்டது. கடந்த ஐந்து வருடமாக நாங்கள் இருவரும் ஒன்றாகத்தான் வாழ்ந்து வருகிறோம். வரும் டிசம்பரில் விடுமுறையை கழிக்க தேனிலவு செல்ல இருக்கிறோம்.

இது எங்களுக்கு 250 ஆவது தேனிலவு என்றும் நாங்கள்அந்த நாட்களுக்காக காத்திருக்கிறோம் எனவும் கூறியுள்ளார். அவர்கள் திரு மணத்திற்காக பொலிவுட்டே தயாராகிக் கொண்டிருந்தது. தற்போது திருமணம் முடிந்து விட்டது என்று கரீனா தெரிவித்துள்ளதால் பலரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கரீனா நடிப்பில் அண்மையில் வெளியான ஹீரோயின் படத்தில் அவரது நடிப்பு வெகுவாக பேசப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சத்தியராஜ் மகளும் விரைவில் திரைக்கு



சமூகப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நடிகர் சத்யராஜின் மகள் திவ்யா முதன்முறையாக ஆவணப்பட மொன்றில் நடித்துள்ளார். சத்யராஜின் மூத்த மகன் சிபிராஜ் ஏற்கனவே லீ, நாணயம் உட்பட பல படங்களில் நடித்துள்ளார்.


இருப்பினும் சிபிராஜின் படங்கள் இன்னும் போதிய வரவேற்பபை பெறவில்லை.

இந்நிலையில் சத்யராஜின் மகள் திவ்யா முதன்முறையாக ஆவணப் படமொன்றில் அறிமுகமாகி நடித்துள்ளார்.

இப்படத்தை பார்த்த சிபிராஜ் திவ்யாவின் நடிப்பை பாராட் டினாராம். மேலும் இப்படத்தை கேன்ஸ் திரைப்பட விழாவுக்கு அனுப்ப திட்டமிட்டுள் ளனர்.

இந்த படத்தை கொல்கத்தாவை சேர்ந்த சிர்ஷாய் என் பவர் இயக்கி உள்ளார்.

## இப்போது திரையரங்குகளில் தாண்டவம்




## அனுஷ்காவின் சம்பளம் இலட்சங்களால் அதிகரிப்பு



நடிகை அனுஷ்கா பிரியாணி படத்தில் நடிப்பதற்காக தனது சம்பளத்தை உயர்த்தியுள்ளார். தெலுங்கு மொழியில் அதிகமான படங்களில் நடித்த அனுஷ்கா தற்போது தமிழில் வரிசையாக நடிக்க தொடங்கியுள்ளார்.

அனுஷ்கா நடிப்பில் தாண்டவம் படம் விரைவில் திரைக்கு வரவுள்ளது. மேலும் செல்வராகவனின் இரண்டாம் உலகம் கார்த்தியுடன் அலெக்ஸ் பாண்டியன், சூர்யாவுடன் சிங்கம்-2 படங்களில் நடிக்கத் தொடங்கியுள்ளார். இதற்கிடையில் வெங்கட் பிரபு இயக்கத்தில் கார்த்தி நடிக்கும் பிரியாணி படத்திலும் அனுஷ்காவே கதாநாயகி. இந்தப் படத்திற்காக தனது சம்பளத்தை ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.65 இலட்சமாக உயர்த்தியுள்ளார் அனுஷ்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சிங்கத்திடம் மண்டியிட்டது மே.தீவுகள்



(பல்லேகல)

இலங்கை-மேற்கிந்தியத்தீவுகள் உலக இருபது-20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

4-வது உலகக்கிண்ண இருபது-20 போட்டி இம்முறை இலங்கையில் நடை பெற்று வருகின்றது.

நேற்று இரவு பல்லேகல சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இடம்பெற்ற சுப்பர்-8 போட்டியில் இலங்கை-மேற்கிந்தியத்தீவுகள் மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் டரன் சமி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இலங்கை அணியின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 129 ஓட்டங்களினை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

அதிகபட்சமாக சாமுவேல்ஸ் 50 ஓட்டங்களினையும், பிராவோ 40 ஓட்டங்களினையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் இலங்கை சார்பில் அஜந்த மெண்டிஸ் 2 விக்கெட்டுக்களினையும், மத்யூஸ், குலசேகர, ஜீவன் மெண்டிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.


130 ஓட்டங்களினை பெற்றால் வெற்றி என்ற இலகுவான இலக்கை துரத்திய இலங்கை 15.2 ஓவர்களில் தனது வெற்றியிலக்கை அடைந்தது.

அதிகபட்சமாக மஹேல ஜெயவர்த்தன ஆட்டமிழக்காமல் 49 பந்துகளில் 65 ஓட்டங்களினையும், குமார் சங்கக்கார ஆட்டமிழக்காமல் 34 பந்துகளில் 39 ஓட்டங்களினையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரவி ராம்போல் 1 விக்கெட்டை கைப்பற்றினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவு செய்யப்பட்டார்.

# நியூசிலாந்தை வீழ்த்தியது இங்கிலாந்து



நியூசிலாந்து அணிக்கு எதிரான இருபது-20 உலகக்கிண்ண தொடரின் சுப்பர்-8 சுற்றில் இங்கிலாந்து அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இலங்கையில் நடைபெற்று வரும் இருபது-20 உலகக்கிண்ண தொடருக்கான சுப்பர்-8 சுற்றில் இங்கிலாந்து-நியூசிலாந்து அணிகள் மோதின.

பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

ஆரம்ப வீரராக களமிறங்கிய மார்ட்டின் கப்ரில் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மற்றொரு தொடக்க வீரரான ரொப் நிகோல் 11 ஓட்டங்களும், பிரண்டன் மக்கலம் 10 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். அதிகபட்சமாக பிராங்கிளின் 50 ஓட்டங்கள் எடுத்தார்.

20 ஓவர்கள் முடிவில் நியூசிலாந்து அணி 6 விக்கெட் இழப்பிற்கு 148 ஓட்டங்களை எடுத்தது. பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் ஸ்ரீபன்பின் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதனையடுத்து 149 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 18.5 ஓவர்களில் 4 விக்கெட் இழப் பிற்கு இலக்கை அடைந்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆரம்ப வீரராக களமிறங்கிய ஹேல்ஸ் 22 ஓட்டங்களும், அடுத்து களமிறங்கிய லூக் ரைட் 5 பவுண்டரிகள் , 5 சிக்ஸர்களுடன் அரைச்சதம் கடந்து 76 ஓட்டங்களும், இயன் மோர்கன் 30 ஓட்டங்களும் எடுத்தனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் மில்ஸ், விற்ரோரி, நேதன் மக்கலம், பிரஸ்வெல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்தின் லூக் ரைட் தெரிவு செய்யப்பட்டார்.

## இன்றைய போட்டிகள்

அவுஸ்திரேலியா–தென்னாபிரிக்கா
மாலை 3.30 மணி- ஆர்.பிரேமதாச

இந்தியா–பாகிஸ்தான்
இரவு 7.30 மணி - ஆர்.பிரேமதாச

# போர்க்குற்ற விசாரணையை...

ஐ.நா.நிபுணர் குழுவின்பரிந்துரைக்கு அமைய, அனைத்துலக போர்க்குற்றவிசாரணை நடத்த வலியுறுத்தி பிரித்தானியாவை தளமாகக் கொண்டியங்கும் உலகத்தமிழர் பேரவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பரப்புரைகளை தீவிரப்படுத்தியுள்ளதாகவும் அந்த நாளேடு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை மற்றொரு விடுதலைப் புலிகள் ஆதரவு அமைப்பான அமெரிக்க தமிழ் அரசியல் நடவடிக்கை குழுவும் இது தொடர்பான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இந்த அமைப்பு நெருக்கமான தொடர்புகளை வைத்துள்ளது எனவும் அவ்வூடகம் தெரிவித்துள்ளது.

அனைத்துலக போர்க் குற்ற விசாரணையை வலியுறுத்தி அண்மையில் 31 அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கிலாரி கிளின்ரனுக்கு கடிதம் எழுதியதன் பின்னணியிலும் இந்த அமைப்பே இருந்ததாகவும் ஆங்கில நாளேடு குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையே, தென்னாபிரிக்க மற்றும் சுவிற்சர்லாந்து அரசாங்கத் தரப்புகளுடன் உலகத் தமிழர் பேரவை பேச்சுக்களை நடத்தியுள்ளது.

கடந்த 23, 24-ம் திகதிகளில் இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

வண.இமானுவேல் அடிகளார் தலைமையிலான, உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் குழு தென்னாபிரிக்க மற்றும் சுவிற்சர்லாந்து அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

இதன்போது இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டதாகவும், போரின் போது தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் தேடுவதற்கு அனைத்துலக போர்க் குற்ற விசாரணையே ஒரே வழி என்று வலியுறுத்தப்பட்டதாகவும் உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது. (ந-11)

# இளம் எம்.பிக்கள்...

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த, மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோரின் அமைச்சுப் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட உள்ளதாக கூறப்படுகின்றது. அதேவேளைபிரதமராகஜி.எல்.பீரிஸ்நியமிக்கப்படலாம் எனவும் தெரிய வருகின்றது.

இதேவேளை, நாமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சரவையின் . பிரதான பதவியை வழங்குவதன் மூலம் நாட்டின் அடுத்த தலைவராக அவரை உருவாக்குவதற்கும் மக்களுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கும் இதனை தெளிவாக சொல்லுவதற்குமே இந்த ஏற்பாடுகள் என அரசாங்கத்தின் மிக முக்கிய புள்ளி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உடல் நலம் குறித்து கடுமையான இரகசியத் தன்மை ஒன்று பேணப்பட்டு வருவதாக தெரிவிக்கும் அவர் ஜனாதிபதியின் உடல் நிலை குறித்து அவரது குடும்ப உறுப்பினர்கள் கடுமையான கவலை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனால் மகிந்தவின் அடுத்த வாரிசாக நாமல் ராஜபக்ஷவை அவரின் காலத்திலேயே அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படியான ஒரு சூழலை மகிந்த இப்போதே உருவாக்குவதன் நோக்கமே நாமலுக்கு அதி முக்கிய அமைச்சர் பதவியான நிதி அமைச்சை வழங்குவதற்கான முயற்சி என தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, அதி சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்சியிலும் அரசாங்கத்திலும் இருக்கும் போது இளையவரான நாமலை திடீரென உச்சத்துக்கு கொண்டு செல்வதனால் பல உள் முரண்பாடுகள் ஏற்படும் என்பதால் நாமலுக்கு நெருக்கமான நீலப்படை அணியினரை அவரைச் சுற்றி அதிகாரம் உள்ளவர்களாக்கும் முயற்சியும் இடம்பெறுகின்றது.

இவ்வாறான சூழலில் குத்து வெட்டுக்கும் போகாதவரும் வாரிசு அரசியலை தொடர முடியாதவரும் தனக்கு விசுவாசமாக இருக்கு கூடியவருமான ஜீ.எல்.பீரிஸை பிரதமராக நியமித்தால் அவர் நாமலுக்கு ஆலோசகராகவும், சர்வதேசத்தை கையாளக்கூடியராகவும், நம்பிக்கைக்கு உரியவராகவும் இருப்பார் என மகிந்த நம்புகின்றார்.

தற்போதைய சூழல் இவ்வாறு அமைந்தாலும் சில வேளைகளில் தனது சகோதரர்களின் நிலைப்பாடு கட்சியின் மூத்த உறுப்பினர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு அமைவாக இந்தத் திட்டம் சற்று பிற்போடப்படலாம் எனவும் தெரிய வருகிறது. (ந-11)

# இருதரப்பு இணக்...

கூட்டமைப்புடன் பேச்சுவார்த் தையை ஆரம்பிக்க வேண்டுமென ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருக்கின்றது. எனவே பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கின்றோம்.

ஆனாலும் ஜனாதிபதியைப் பொறுத்தவரை கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வரவேண்டும் என்பதுதான் அவரது நிலைப்பாடாகும். சும்மா போவது ஏன்? பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குள் சும்மா போய் எதுவும் நடக்காது. அப்படிப் போவதானால் சரியானதொரு பிரேரணையைக் கொண்டு போக வேண்டும்.

ஆகவே இருதரப்புப் பேச்சுவார்த்தை இடம்பெற்று அதில் தீர்வு ஒன்று எட்டப்பட்டு அதனைப் பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்குக் கொண்டு செல்வதுதான் நல்லது. இதனை நாம் இந்திய சந்திப்பு இடம்பெறும் போது விளக்கவுள்ளோம்.

வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி, காணிகளைக் கபளீகரம் செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கின்றன அதிலும் குறிப்பாக ஆயிரக்கணக்கான நம் காணிகள் இராணுவத்தால் கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றன. எம்மக்கள் நடுத் தெருவிலும் காடுகளிலும் நிற்கத்தக்கதாக இக் கபளீகரம் மிக மோசமாக நடைபெற்று வருகின்றது.

இவ்விடயங்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு இராணுவம் எடுத்த காணிகளை மக்களுக்கு திருப்பி வழங்க வேண்டுமென்பதும் வலியுறுத்தப்படும். வடக்கில் இன்று ஒரு இலட்சத்துத ஐம்பதினாயிரம் இராணுவம் நிலை கொண்டு இராணுவ மயமாகியுள்ளது.

இவ்வளவு தொகை இராணுவம் இப்படியொரு சிறிய பகுதிக்குத் தேவையில்லை. அங்கு இராணுவம் அகற்றப்பட்டு சாதாரண சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். நிச்சயமாக இந்த விடயம் குறித்தும் இந்திய அரசுடன் நாம் பேசுவோம். மக்களுக்கும் இந்த அரசாங்கத்துக்குமிடையே நம்பிக்கை வர வேண்டுமென்றால், இப்படியான யங்களை அரசு செய்ய வேண்டும்.

இவற்றை விடுத்து நாங்கள் வெறுமனே அரசுடன் பேச்சுவார்த்தைக்கு சென்றால் எம் காணிகளை பிடிக்கிறார்கள். எங்களது காணியில் குடியேற விடுகிறார்களில்லை, வெளியே போக முடியாதவாறு இராணுவ நடமாட்டங்கள் என நாம் அவலப்படும் போது நீங்கள் போய் எதைப் பேசப்போகிறீர்கள் என மக்கள் எம்மை நோக்கிக் கேள்விகளைத் தொடுப்பர். எனவே இப்படியான சூழலில் நாம் அரசுடன் பேச்சுவார்த்தைகளுக்கு போனாலும் மக்கள் அதனை ஆதரிக்க மாட்டார்கள்

ஆதலால் மக்களின் ஆதரவோடு பேச்சுவார்த்தை நடைபெற வழிவகை செய்ய வேண்டும் என்பதையும் நாம் இந்திய அரசுக்கு வலியுறுத்திச் சொல்லவுள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியச் சந்திப்பு தொடர்பாகக் கூடிப்பேசி ஒரு முடிவுக்கு வரவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமைப்பிலுள்ள கட்சித் தலைவர்கள் கூடிப்பேசியே இது தொடர்பான முடிபை எடுப்போம்.

ஆனாலும் நான் மேலே கூறிய விடயங்களை இந்தியச் சந்திப்பின்போது முக்கிய விடயங்களாகக் [illegible] (ந-11)

# பரிந்துரைகள் அமு...

சுதந்திரத்திற்கு முன்னதாக இருந்து அமெரிக்கா இலங்கையுடன் மிகவும் நெருங்கிய நட்புறவைப் பேணி வருகின்றது.

உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகளை துரித கதியில் அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் கூடுதல் முக்கியத்துவம் அளிப்பது அவசியம்.

அதற்காக யுத்தத்தின் பின்னர் இலங்கையில் நல்லிணக்க முனைப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை என தாம் குறிப்பிடவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம் உள்ளிட்ட சில விடயங்களில் அரசாங்கம் சிறந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

வடக்கின் பல பிரதேசங்களில் அரசாங்கம் உட்கட்டுமான வசதிகளை மேற்கொண்டுள்ளது இதற்காக அரசாங்கத்தை பாராட்ட வேண்டும் என்றார். யுத்தம் இடம்பெற்ற வடக்கு மற்றும் கிழக்கில் அரசாங்கம் இரண்டு விதமான அணுகு முறைகளை பின்பற்றி வருகின்றது.

கிழக்கில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் அங்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தியது.

ஆனால், வடக்கில் தேர்தலை நடத்த சுமார் நான்கு ஆண்டுகள் செல்லக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது எனக் குறிப்பிட்ட அவர், நல்லிணக்க முனைப்புக்களை துரித கதியில் மேற்கொள்வதன் மூலமே யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களை ஓரளவுக்ேனும் ஆற்ற முடியும் என்பதே தமது நிலைப்பாடு என ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார். (ந-11)

# இந்தியத் தூதுவர்...

விடயங்கள் தொடர்பில் அறிவிக்க முடியும். எதிர்வரும் 10-ம் திகதி நாம் புதுடில்லிக்கு விஜயம் செய்கின்றோம்.

இந்தியப் பிரதமர் உள்ளிட்ட மத்திய அரசின் முக்கியஸ்தர்களையும் எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜையும் நாம் டில்லியில் சந்தித்து பேசவுள்ளோம். அங்கிருந்து தமிழகம் செல்லும் நாம் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, முன்னாள் முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.கருணாநிதி ஆகியோரையும் சந்தித்துப் பேச திட்டமிட்டுள்ளோம். இந்த விஜயத்தின் போது அரசியல் தீர்வு விடயத்தில் ஏற்பட்டுள்ள காலதாமதம் மற்றும் வடக்கு, கிழக்கின் தற்போதைய நிலைவரம், காணிப்பிரச்சினை போன்ற பல விடயங்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்துக்கும் தெளிவுபடுத்துவோம் என்ற கூறினார். (ந-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்பு

சர்வதேசிய அனுசரணையில் முகாமைத்துவத்தில் வளமான தொழில் பயிற்சியினை வழங்கி கொண்டிருக்கும் DMI நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளில் மோதகால பயிற்சியுடன் தொழில் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

பயிற்சி காலத்தில் 6000-12,000 பயிற்சியின் பின் 35,000/- வருமானம் பெறமுடியும், தகைமை O/L,A/L தகைமையுடைய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். முதல் விண்ணப்பிக்கும் 20 விண்ணப்பதாரிகளுக்கு தங்குமிடம் இலவசம் . தொடர்புகளுக்கு :- 0776219536, 0775574795



## Dubai நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

(Ras - AL Kaima Company Dubai)

அதியுயர் சம்பளத்துடன் Ceramic Packing வேலை செய்வதற்கு உடனடியாக துடிப்புள்ள வேலையாட்கள் தேவை. வடபுல நண்பர்களே! அதி உயர் சம்பளத்துடன் நீங்களும் வெளிநாடு சென்றுவர அரிய சந்தர்ப்பம். (சாப்பாடு+தங்குமிடம், மருத்துவம் இலவசம்) இரண்டே வாரத்தில் பயணம் (Country - Dubai) (Work - Ceramic Packing) (Age Limite - 22 - 40)

விரையுங்கள்

LANKA VOICE, 24 Station Road, Vavuniya

0750650084 (C-1158)



# கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை

★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் புத்திரம் வழங்கப்படும்.



★ வான், முச்சக்கரவண்டி, உழவு இயந்திரம் (டெக்ரர்) அனுமதி பத்திரம் உள்ளவர்கள் இரண்டுவருடம் பூர்த்தியானால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற முடியும்.

★ கனகர வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.





★ தவணை முறைக்கட்டணம்.

★ எழுத, வாசிக்க தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை.

## தலைமைக் காரியாலயம்

226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212224353, 0214923200,
0714546952, 0777225292

**சுன்னாகம்** 0212242022, 0714546956

**கிளிநொச்சி** 0212285505, 0714546955

**சாவகச்சேரி** 0214923202, 0212270700

**நெல்லியடி** 0213006550, 0214923201

**விசுவமடு** 0213201515, 0714546955



# வீடும் காணியும் விற்பனைக்கு

ஆறுகால்மடம் பழம் றோட்டில் 22 பரப்பு காணியும்.வீடும் விற்பனைக்கு உண்டு.

(524) தொடர்பு : 0774666829


# சீனாவிடமிருந்து மூவாயிரம் பஸ்

அரசாங்கம் சீனாவிடமிருந்து 3000 புதிய பேருந்துகளைக் கொள்வனவு செய்வது தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபடுகின்றது.

இதனை எதிர்த்து தனியார் பேருந்து இயக்குநர்களால் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோதிலும், அரசாங்கமானது தொடர்ந்தும் பேருந்துக் கொள்வனவு தொடர்பில் சீனாவுடன் பேச்சுக்களை நடத்திவருவதாக போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்துள்ளார்.

இந்த பேருந்துகளைக் கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளோம். ஆனால் இன்னமும் இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்பட வில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுப்போக்குவரத்துத் துறையில் காணப்படும் தேவையைக் கருத்திற் கொண்டு சீனாவிடமிருந்து பேருந்துகள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக கடந்தவாரம் அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-11)


# காணி விற்பனைக்கு

மானிப்பாய் காரைநகர் றோட்டிற்கு அருகாமையில் சுதுமலை தெற்கு, ஆனைக் கோட்டைப் பகுதியில் 7 பரப்பு காணி உடன் விற்பனைக்கு. (520) தொடர்புகளுக்கு :- 0776286565



மாபெரும் விசேட விலைக்கழிவு

# Jet D Express courier service

விரைவு
பாதுகாப்பு
உத்தரவாதம்

உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய



| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 Kg 1100/= | |
| Canada | Over 5 Kg 1200/= | |
| Norway | Over 5 Kg 1100/= | |
| Italy | Over 5 Kg 1100/= | |
| France | Over 5 Kg 1000/= | Over 11 Kg 750/= |
| Germany | Over 5 Kg 1000/= | Over 11 Kg 850/= |
| London | Over 5 Kg 1000/= | Over 11 Kg 750/= |
| Australia | Over 5 Kg 1000/= | Over 11 Kg 850/= |
| Netharland | Over 5 Kg 1000/= | Over 11 Kg 850/= |
| Swiss | Over 5 Kg 1100/= | Over 11 Kg 950/= |
| Denmark | Over 5 Kg 1100/= | Over 11 Kg 850/= |

புதன் Germany Over 5 Kg 1000/=
வியாழன் Swiss Over 5 Kg 1300/=
வெள்ளி Australia Over 5 Kg 1000/=

Note :- 25 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு

உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக் கொள்ளலாம்.

Note :-கடல் உணவுவகைகள் எல்லா வகையான பொருட்களும் அனுப்பி வைக்கப்படும்.

வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.



இல 27, முதலாம் மாடி,
நவீன சந்தை, (தனம்ரெக்ஸ் மேல்)
யாழ்ப்பாணம்.
தொ.பே. :- 021 221 9150, 0772187301

N0 : 77 E, Manning Placc,
Wellawatta, Colombo 06,
T.P:- 0112363873
0776509909

(C-1190)



அரச அங்கீகாரம் பெற்ற முதன்மைச் சாரதிப் பயிற்சிப் பாடசாலை

NEW NELSON LEANERS NNL D.S.590

# நியூ நெல்சன் லேணர்ஸ்

சாரதிப் பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.

சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாகச் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.

எழுத்துப் பரீட்சை மூலம் சித்தியடைய MULTIMEDIA மூலம் விசேட வகுப்புக்கள்

அதி கூடிய பயிற்சி நேரங்கள்.

தவணை முறைக் கட்டணங்கள்.

வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.





இல்.89, கண்டி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 4527
0773581916







எமது சகல கிளை நிறுவனங்களிலும் குறைந்த கட்டணத்தில் மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படும்.

AD மருத்துவச்சான்றிதழ் திங்கள் – வெள்ளிவரை எந்நேரமும் பெற்றுக் கொள்ளலா

குறைந்த கட்டணத்தில் AD சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்

இல்.127, பருத்தித்துறை வீதி,
நெல்லியடி கரவெட்டி.
தொ.பே:- 021 492 3115

இராமலிங்கம் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே:- 021 492 3114

பஸ் நிலையம்
சுன்னாகம்
தொ.பே:-021 492 373

இல்,04 நவீனசந்தை
வல்வெட்டித்துறை.
தொ.பே:-021 492 3733

பிரதான வீதி,
நெடுந்தீவு.
தொ.பே:-0777 906 064


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்ட